# தாயகம்



நவம்பர் 3

20/-

தேசிய கலை இலக்கியப் பேரவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல ஆயிரம் வருடம் முன் எய்த பாணம்

✲ புவனம்

எய்தவன் இருக்க அம்பை நோவானேன்
என்கின்றீர் ஐயா
மெய்யே தான்.

என்றாலும் இவ் அம்பு எப்போதோ எய்தது.
இதன் முன்னால்,
எப்போதோ ஏழு மரம் துளைத்த
பாணந்தான் எம் மூலை நிர்க்குமென நீர்சொல்லும்.

என்
பாட்டனுக்குப் பாட்டனுக்குப் பாட்டன் தலை கொய்து
பாட்டிக்குப் பாட்டிக்குப் பாட்டி தலை அறுத்து
பரம்பரை பின் பரம்பரையாய்
வைத்த குறி தவறாமல்
எல்லார் சிரமும் அறுத்தெறிந்த அம்பிது.

அப்பன் தலை பறித்து ஆத்தாள் சிரம் எடுத்து
என் அண்ணன் என் அக்காள்; என் தம்பி, தங்கை
எல்லார்க்கும் குறி பார்த்து
எப்போதோ எய்துவைத்தது.

என் தலையும் என் சுற்றம் எல்லார் தலைகளையும்
அள்ளி எடுக்க எம் மீது பாய்கையிலே
எய்தவனைத் தேடி எங்கே தான் நான் போவேன்?
எவர் தலையும் இனி இதற்கு இலக்காகு முன்னாலே
எல்லாரும் கை கோர்ப்போம்
அம்பை முறித்தெறிவோம்.

பின்னாலே
அம்பை நாம் ஏன் நோவோம்
எய்தவனை ஏன் நோவோம்.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம்

புதிய ஜன நாயகம்

புதிய வாழ்வு

புதிய நாகரிகம்

3-11-1997

இதழ்: 35


## ஐம்பதிலும் வளையுமா?

காலனித்துவ வாதிகளிடம் கைநீட்டிப் பெற்ற சுதந்திரம், பேரம் பேசிப் பேசிப் படிப்படியாகவே பெற்ற அரசியல் அதிகாரம். இதனால்தான் சுதந்திரம் அடைந்து ஐம்பது ஆண்டுகள் நிறைவுறும் போதும் அடுத்தவன் முதுகில் சவாரி செய்வதே சுதந்திரம் என்று எண்ணும் மனோநிலை இன்னும் மாறவில்லை.

"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்ற பழமொழி போன்று மக்கள் நலனைக் கருத்திற் கொள்ளாது இன, மத, உணர்வுகளை முன்வைத்து ஆரம்பித்த அரசியல் பேரங்களும் இழுபறிகளுமே இன்னும் முடிவின்றித் தொடர்கின்றன.

மிருகவதைகளையே எதிர்த்து உருவான புத்தரின் அன்பு மதம் அரசோச்சும் இம்மண்ணில், மனிதவதைகள் இலட்சக்கணக்காக தொடரும் போதும் உணரப்படாத உண்மைகள் எப்பொழுது உணரப்படும். அசோகனின் சாம்ராஜ்ஜிய வெறியை தணிப்பதற்கு உதவிய பௌத்த மதத்தை பேரினவாத உணர்வுக்கு அடித்தளமாக்கியதுடன், அதன் பெயரால் மேலும் புதைகுழிகளை தோண்ட உதவுவதற்காகக் கூறப்படும் கருத்துக்களை குப்பைத் தொட்டிக்குள் போடாமல் புத்தரின் பாதங்களிலா வைத்து பூஜிக்க முடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாட்டை ஒரு மதசார்பற்ற நாடாக இன்று மாற்றமுடியாவிட்டாலும் மதமும், அரசியலும் தத்தமது 'புனிதங்' களை காத்துக் கொள்வதற்காகவாவது தமக்குரிய எல்லைகளை தெளிவாக வகுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைய துன்பநிலைக்கு மதவாதிகளின் தலைகள் மீது மட்டும் பழிகளைப் போட்டுவிட முடியாது. அன்று பணம்படைத்த படித்தவர்க்கு மட்டுமே வாக்குரிமை வழங்கும்படி பிரித்தானிய ஆணைக்குழு முன் வேண்டி நின்றவர்கள், அதையும் மீறி சர்வஜன வாக்குரிமை அளிக்கப்பட்டபோது எப்படி சாதாரணமக்களை இன, மத, சாதி உணர்வுளை ஊட்டி ஏமாற்றி அதிகாரத்துக்கு வருவதென்பதையும் தெரிந்து கொண்டார்கள். இச்சந்தர்ப்பவாத அரசியலின் ஐம்பது ஆண்டுகால விளைவுகளையே பலிதத் தலைகளாக இன்று அறுவடை செய்கிறோம்.

இதன் பின்பும் வடக்குக் கிழக்கை இணைப்பதற்கு முன் வாக்கெடுப்புக்கள் பல நடத்த எண்ணுவது "மீண்டும் — பேரினவாத — வேதாளத்தை முருங்க மரத்தில் ஏற்ற" உதவுவதாகவே அமையும். உரிமைகளற்ற ஒரு நாட்டை தமது நாடாகக் கருதும் மனநிலை எந்த தேசிய இனத்துக்கும் ஏற்படாது. ஐம்பது ஆண்டு கால அரசியலில் யதார்த்தமாகிவிட்ட வடக்குக் கிழக்கு இணைந்த தமிழர் பிரதேசத்தில் அவர்களது உரிமைகளை அங்கீகரிப்பதன் மூலமே ஐக்கியப்பட்ட ஒரு நாட்டை மீண்டும் உருவாக்க முடியும். பேரினவாதம் ஐம்பதிலும் வளையுமா?

ஆசிரியர் குழு.

---

தாயகத்துக்கு ஆக்கங்களையும், விமரிசனங்களையும் அனுப்பி வைக்கும் படைப்பாளிகளுக்கும், வாசகர்களுக்கும் நன்றி. 'இன்றைய நோக்கில் பண்டைத் தமிழ் இலக்கியம்' என்ற பேராசிரியர் நா. சுப்பிரமணியம் அவர்களின் கட்டுரைத் தொடர் அடுத்த இதழில் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையில் ஒரு கனவு

ரஷ்ய மூலம்: மூஸா ஜலீல்
ஆங்கில வழி தமிழ் வடிவம்: என். சண்முகலிங்கன்

சிறையில்
என் சின்ன மகளை
கனவினில் நான் கண்டேன்

அவள்
பிஞ்சுக்கரங்கள்
என் தலை மயிரை
கொஞ்சிக் கோதின

பின்னர்,
எவ்வளவு நாள் தான் அப்பா
நீங்கள் இப்படி...
அவள் சின்ன விழிகளின் முன்
என் ஆத்மா திறந்து கிடந்தது

மகிழ்ச்சியில் 'என் தலை
கிறுகிறுத்தது
அணைத்து என் மகளை
கொஞ்சினேன்

உரத்து இசைத்தது இதயம்
'எல்லையில் லாத அன்பு
எல்லையில்லாத துயரம்'
அர்த்தம் புரிந்தது

☆

பின்னர், ஒரு நாள்
ஒரு பூங்கடல் வழி
பரந்த அலை வெளி
நாங்கள் அலைந்தோம்

பொழுது விடிந்தது
விடுதலை வெளிச்சம் கண்டேன்
மீண்டும் வாழ்வின்
இனிமை அறிந்தோம்

பின்னர்,

கண் விழித்து விட்டேன்
முன் போல் சிறையில் ...
அதே பயங்கரக் கூடும்
விலங்குகளும்
மூடிய ஜன்னல்களும்

துர்நாற்றமான இருளில்
துன்ப வாசலில்
என் வேதனைகள்
தனிமை சாத்தன

பின்னர் நான் நினைத்தேன்
என் கனவு
ஏன் மெய்படக் கூடாது
இந்த உலகில்
ஏன் இழி சிறை வதைகள்

துன்பமும் வலியுமே
வாழ்க்கையாக
துயிலில் மட்டுமா
நாங்கள் வாழ்வது.

☆



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையை மென்று சலித்துப் போன மக்கள்

அஜர்பைஜான் மூலம்: Vagif Bayatly Oner
ஆங்கில வழி தமிழ் வடிவம்: இ. கிருஸ்ணகுமார்

இன்று நாம் ஒருவருக்கொருவர்
பற்பல பொய்களை சொன்னோம்
அத்தோடு இப்போது இங்கு நாம்
பெருமையுடன் நிமிர்ந்து நிற்கிறோம்.
காரணம் நாம் மிக அழகாக
அப் பொய்களைக் கூறியமையே.

எங்களுடைய பொய்களுடன்
ஒப்பிடும் பொழுது,
உலகின் மிகப் பெரிய
உண்மைகளெல்லாம் தூசு.

உண்மைகளிலிருந்து பொய்களையும்
பொய்யிலிருந்து உண்மைகளையும்
எம்மால் மட்டுமே தெரிவுசெய்ய முடியும்
ஏனென்றால் மிகப் பெரிய உண்மை என்பது
மிகப் பெரிய பொய்யே என்பது
எங்களுக்கே தெரியும்.

உண்மையை மென்று
சலித்துப் போன நாங்கள் மட்டுமே
"பொய்கள் நீடூழி வாழ்க" என்று
கத்த முடியும்,—

---

வாஜிப் பயாத்லி ஒனர் (1948—) இவர் ஒரு அஜர்பைஜானிய கவிஞர். தற்பொழுது ஆர்மேனியாவால் கைப்பற்றப்பட்டுள்ள அஜர்பைஜான் பிரதேசமொன்றில் பிறந்தவர். அஜர்பைஜான் மனித உரிமை நடவடிக்கைகளில் தீவிரமானவர்.

மூலம்; Index on censorship No. 4. 1997, P. 68.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டின் பேரால் 8

## தென்னந் தும்பும் தேர்வடமும்

✲ மருதையன்

"என்ன பிள்ளை, 'இயங்கியல்' துவங்கி இரண்டு நாளும் ஆக இல்லை; அதுக்கிடையிலெ அடுத்த சந்திப்புக்கு வந்திட்டாய்?'' சயிக்கிளால் இறங்கிக்கொண்டிருந்த செந்திருவை அப்ப கேட்டார். அவர் இன்றைக்குக் கையில் அலுவல் எதுவும் இல்லாமல் ஆறுதலாகத் தம் கதிரையில் சாய்ந்திருந்து ஏதோ யோசனையில் ஆழ்ந்து போயிருந்தார்.

''முந்த நாள் இயங்கியலிலே வருகிற மூன்று விதியளைப்பற்றிச் சொன்னீங்கள்; அதாவது அந்த விதியளை எடுத்துச் சுருக்கமாய் சொன்னீங்கள். இனி ஒவ்வோரு விதீயையும்.....''

''எடுத்துக்காட்டுகளோடே விளங்கப்படுத்தி விட வேணும் அவ்வளவுதானே! சரி, முதலாம் விதி என்ன?''

''தொகையளவு மாற்றங்கள் பண்பியல் மாற்றங்களுக்கு இட்டுச் செல்கின்றன. தொகையளவு என்றால்?''

''விஞ்ஞானத்திலும் கணிதத்திலும் 'கணியம்' என்று சொல்லுறம் அல்லவா? அதுதான் தொகையளவு. பன்னிரண்டு வாழைப் பழம், அஞ்சு கிலோ அரிசி, மூன்று லீற்றர் மண்ணெண்ணெய், பத்து நாள் லீவு என்றெல்லாம் நாங்கள் குறிப்பிடுறம். இங்கே எல்லாம் ஓர் எண்ணிக்கையும் சில அலகுகளும் தொடர்புபட்டிருக்கின்றன. இல்லையா?''

''ஓமோம். மீற்றர், லீற்றர், நிமிடம், தொன் என்று வருகிறவை தான் அலகுகள். அது தெரியும் தானே!'' செந்திரு முறுவலிக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பொருள்களுடைய எண்ணிக்கை, பருமன், நிறை, வீதம் போலே உள்ளவை தொகையளவுகள். அம்பியர், வோல்ற், கலோரி யாதை — இவை எல்லாம், சக்தியின் தொகையளவுகளோடை தொடர்புடைய அலகுகள். சரியா?''

''சரி''

''இப்படிப்பட்ட தொகையளவுகள் மாறுகிற பொழுது ஏற்படுகிற மாற்றங்கள் தான் தொகையளவு மாற்றங்கள்''.

''ஓகோ, ஓகோ. முதலாம் இயங்கியல் விதி எனக்குச் சாடையாய் விளங்கத் தொடங்குது. நான் ஒரு உதாரணம் சொல்லுறேன். அது சரியோ" என்று சொல்லுங்கோ, அப்பு''

சொல்லு, பிள்ளை. என்ன உதாரணம்?''

போன மாதம் எங்க வளவிலே பூவரசங் குழை வெட்டுவிச்சம். பெரிய கொப்புகள் எல்லாம் தோட்டத்துக்குத் தாழ்க்களுக்குத் தாச்சு. சின்னக் கொப்புகளெல்லாம் இலை கொட்டுண்டு போய்க்கிடக்கு. சுள்ளித் தடியள் வளவெல்லாம் பரவுண்டு போய்க் கிடக்கு. அந்தச் சுள்ளியளிலை மூன்று நாலு சுள்ளியளை எடுத்து ஒரு கட்டுக் கட்டுவம். நானூறு சுள்ளியளை எடுத்து அடுக்கி வேறே ஒரு கட்டைக் கட்டுவம் ......''

''ஓ. சரி, சரி பிறகு?'' அப்பு செந்திருவை ஊக்கப்படுத்துகிறார்

''அஞ்சு சுள்ளியள் கொண்ட பூவரசந்தடிக் கட்டை நான் முறிக்கத் தெண்டிக்கிறன். ம்ம்ம்; சட்சட் சடக்' என்று தடியள் முறியுதுகள்.''

''ங் ....ஆ; பிறகு?

நானூறு சுள்ளியள் கொண்ட கட்டை முறிக்கப் பார்க்கிறேன் என்னுடைய சக்தி எல்லாம் சேர்த்து முக்கி முக்கிப் பார்க்கிறேன ஊகும்''. சொண்டை நெளித்துத் தலையை ஆட்டுகிறாள் செந்திரு.

''அதென்ன பிள்ளை ஊகும்?'' அப்பு கொடுப்புக்குட் சிரித்தபடி கேட்கிறார்.

''இப்படிப்பட்ட கட்டத்திலே சிறுகதை/ நாவல் எழுத்தாளர் தன் 'ஊகும்' என்றொரு சொல்லைத்தானே பாவிக்கிறனை? இது தெரியாதா உங்களுக்கு? வெட்கம், வெட்கம்; வேடிக்கையான செல்லக்குரலில் முழக்கமிடுகிறாள் செந்திரு. பிறகு சொல்லுகிறாள் —''சின்னச் சுள்ளியளின் சின்னக்கட்டைச் ''சடசடக்'' என்று முறிக்க முடியும் ஆனால். அதேயளவு சின்னச் சுள்ளியள் பலவற்றைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பென்னம் பெரிய கட்டை வளைக்கவே முடியவில்லை; பிடிக்கவே முடியவில்லை. முறிக்கிறது எப்படி?''

''இதிலிருந்து நாம் படிக்கக்கூடிய பாடம் என்னவோ? நாட்டுக் கூத்துப் பாணியில் ஞானியார் கேட்கிறார்.

''அதாவது வந்து சுள்ளிகளின் எண்ணிக்கையைக் கூட்டும் பொழுது சுள்ளிக் கட்டினுடைய 'முறிபடும் தன்மை' குன்றிக் குன்றிப் போகிறது. அதனுடைய 'முறிபடாமை' என்னும் பண்பு அதிகமாகிறது. சரியா, சபையோர்களே?'' என்று சொல்லிச் சிரிக்கிறான் செந்திரு.

''மெத்தச் சரி, மெத்தச் சரி. நான் மனத்திலை தயாராய் வைச்சிருந்தது வேறே ஒரு உதாரணம்''

''என்ன உதாரணம்? அதையும் சொல்லுங்கோ, அப்பு; கேட்பம்'' செந்திரு அப்பு சொல்வதைக் கேட்க ஆவலுடன் ஆயத்தமாகிறான்.

''அது ஒரு பொங்கல்.''

''என்ன பொங்கல்? தைப்பொங்கலா, சித்திரைப் பொங்கலா வயிரவர் பொங்கலா?''

''ஒரு பொங்கல்.''

''சரி பொங்குங்கோ பார்ப்பம்.''

''நோக்கம் — தொகையளவு மாற்றம் பண்பியல் மாற்றத்துக்கு இட்டுச் செல்வதை அவதானித்தல்.

''வேண்டிய பொருள்கள் மூன்று பெரிய கல்லுகள், ஒரு பானை அது நிறையத் தண்ணீர், ஒரு படி அரிசி, 10 மி. லிற்றர் பால், சில விறகுகள், நிப்பெட்டி.

''செய்முறை — கல்லுகள் அஃகேன வடிவில் ஒழுங்கு செய்யப் பட்டு, அவ்வாறு அமைக்கப்பட்ட அடுப்பின்மேல், நீர் நிரம்பிய பானை வைக்கப்படுகிறது நீருடன் பால் கலக்கப்படுகிறது அடுப் பில் விறகு வைக்கப்பட்டு நெருப்பு மூட்டி எரிக்கப்படுகிறது.

''அவதானிப்பு — நெருப்பு எரிய எரியத் தண்ணீரைத் தொட்டுப் பார்க்கிறோம். ஒவ்வொரு படிகையாய் வெப்பநிலை ஏறுகிறது. ஐதான கரைசலாக இருந்த பால், மேலெழும்பி மேற்பரப்புக்கு வந்து ஒரு படலமாய்ப் பானை விளிம்பருகிலே தடித்து நிற்கிறது. சிறிது நேரத்திலே, புடை கட்டுகிறது. மேலும் மேலும் நெருப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிக்க புடைகட்டிக் கிளம்பிய பால்நுரைத் திரள் பொங்கி, உயர்ந்து வரம்பை மீறிச் சரிந்து விழுகிறது. செய் முறை (தொடர்ச்சி) பொங்கிச் சரிந்ததும் அரிசி பானையுட் போடப்படுகிறது. பானையிலிருக்கும் கொதிநீர் ஒரு குறிப்பிட்ட அளவு வரை அள்ளி ஊற்றப்பட்டு ஒரு படி அரிசி முழுவதும் பொங்கற் பானையுட் போடப்படுகிறது. பின்னர் அதிகம் நெருப்பெரிக்காமல் தணலிலே விட்ட சற்று நேரத்தில் அரிசி வெந்து பொங்கலாகிறது. உரிய பதத்துக்கு இறுகி வந்ததும் பொங்கல் இறக்கிப் பரிமாறப்படுகிறது.''

''ஏதோ ஒரு விஞ்ஞானப் பரிசோதனையை விவரிக்கிற பாணியிலை ஒப்பசெப்பமாய் வருணனை செய்திருக்கிறீங்கள், அப்பு'' என்கிறான் செந்திரு- ''இதிலிருந்து நாம் பெறுகிற முடிவுகள் எவை எவை?''

''முடிபு (1)— நெருப்பு எரியத் தொடங்கிய சமயம் தொடக்கம் வெப்பநிலை படிப்படியாக ஏறுகிறது— இது முறிவில்லாத நெளிவான வளைகோடு போன்ற அதிகரிப்புப் போக்கு.

''முடிபு (2)— ஒரு குறிப்பிட்ட வரம்பு— அதாவது எல்லை வந்ததும் பானையில் உள்ள வெந்நீர் 'குழு குழு' என்று குமிழி கிளம்பித் துள்ளிக் கொதிக்கிறது. கொதி நிலையிலே, மிகவும் விரைவாகத் திரவம் வாயு நிலைக்குச் செல்லுகிறது— கொதி நிலைக்கு அப்பால், வெந்நீரின் வெப்ப நிலை அதிகரிப்பதில்லை.

''முடிவு (3)— கொதிநிலையில், அரிசி வெந்து மென்மையாகி அவிந்து விடுகிறது.''

''இந்தப் பரிசோதனை முதலாம் இயங்கியல் விதியைச் சிறப்பான முறையிலை விளக்கி வைக்கிறது, அப்பு— பொங்கிச் சரிக்கிறது. வரையிலான முதலாவது கட்டத்திலே, தண்ணீருடைய வெப்ப நிலை கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரிக்குது இது தொகையளவிலே ஏற்படுகிற மாற்றம். ஆனால், கொதி நிலை —அதாவது 100 பாகை செல்சியஸ்— வந்த உடனே, பண்பியல் மாற்றம் ஒன்று நடக்குது— வெந்நீர் திரவமாய் நில்லாமல், ஆவியாய் மாறிப் பறக்கத் தொடங்குது இது ஒரு பண்பியல் மாற்றம்— நான் சொல்லுறது சரியா அப்பு?'' செந்திரு கேட்கிறான்.

''ஓம், பிள்ளை— தொடக்கத்திலே மாற்றமானது படிப்படியாய் மெல்ல மெல்ல நடைபெறும். கொதி நிலை என்ற எல்லையைத் தாண்டுறதுக்கு முந்தி நடக்கிறது, தொகையளவு மாற்றம். சூடு கொஞ்சம் கொஞ்சமாய் ஏறுது. கொதி நிலை வந்த பிறகு நிகழுறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாய்ச்சல் — அது முந்தியதை விட வேகமானது — திடீரென்று நடக்கிறது. கொதி நிலைக்கு முந்தினது அமைதியான மாற்றம்; அது பரிணாமம்; படிவளர்ச்சி; கூர்ப்பு — கொதி நிலைக்குப்பிந்திய மாற்றம் பொங்கல், எழுச்சி புரட்சி அது மளமள என்று நடந்து முடிஞ்சிடும் இப்படிப் பார்க்கிற போது, மாற்றங்கள் இரண்டு விதமானவை என்ற முடிவுக்கு நாங்கள் வரலாம். ஒன்று படிவளர்ச்சி; மற்றது புரட்சி. ஒன்று நடப்பு; மற்றது பாய்ச்சல்''

''தொகையளவு மாற்றங்கள் திரண்டு சேர்ந்து, பண்பியல் மாற்றமாகப் பொங்குகின்றன என்று செல்லலாம் அப்பு?''

''ஓம், சொல்லலாம்.'' இவ்வாறு சொன்ன அப்பு தொடர்ந்து சொல்லுகிறார்.

''இது வரையிலே, முதலாம் இயங்கியல் விதியை விளங்கிக் கொள்ளிறதுக்கு பூவரசஞ் சுள்ளிக் கட்டையும் பொங்கலையும் உதாரணங்களாய் எடுத்தம். இனி, ஒரு விதை எப்படி முளைச்சு மரமாய் வருகுது என்று பார்ப்பம்.''

''ஓம். அம்மாவுக்குச் சலரோகம் தனே அதுக்கு முளை கட்டின பயத்திலே— அது தான், பயறிலே'— இட்டலி அவிச்சுத் தின்றால் நல்லதென்று, வானொலி நிகழ்ச்சி ஒன்றிலே கேள்விப்பட்டம், அதுக்காகப் 'பயறை' எடுத்து நனைய வைச்சம்— எப்ப முளை வருகுது என்று, அறிஞ்சு கொள்ள எனக்கு ஒரே ஆவல்— பொறுமையே இல்லை. சருவச்சட்டி மூடியை அடிக்கடி திறந்து, திறந்து பார்ப்பேன் முளை எப்ப வெளிக்கிளம்புது என்று.''

''பார்த்தியா, பிள்ளை? எத்தினை மணிக்கு முளை வெளிப்பட்டுது?''

''அதை ஆர் கண்டது?''

''அப்ப?''

''அடுத்த நாள் வெள்ளெனப் பார்த்தால்' சட்டி முழுதும் புழுக்கள் !''

''என்ன, புழுக்களா?''

''ஓம், அப்பு. வெள்ளை வெள்ளைப் புழுக்கள்.''

''சும்மா சொல்கிறாய்.''

''பிறகுதான் உற்றுப் பார்த்தென். 'அதுகள்' புழுக்கள் அல்ல பயத்தம் முளையள் — என்ன நேரம் முளை தலை நீட்டிச்சுதோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆருக்குத் தெரியும்? விடிய வெள்ளெனப் பார்த்தால் வெள்ளை வெளேர் என்ற மெல்லிய முளைகள். முதல் நாள் முழுப்பயறு. அடுத்த நாள் விடியப் பயத்தம் முளை. எனக்கு ஒரே ஆச்சரியமாயிப் போச்சு இந்த முளையிலை இருந்து பயத்தஞ் செடி எப்படித் தலை நிமிர்த்தி எப்படி வளருது என்று பார்க்க எனக்கு ஆசை. முளை கட்டின பயறுகளிலை அஞ்சாறை எடுத்து, நிலத்திலை விதைச்சு பாத்தி கட்டித் தண்ணிர் தெளிச்சென். ஒவ்வொரு நாளும் அந்தச் செடியை அடிக்கடி போய் உற்றுப் பார்க்கிறது தான் கொஞ்ச நாளாய் எனக்கு வேலை.''

''எப்ப பிள்ளை இந்தப் பரிசோதனை எல்லாம் செய்து பார்த்தாய்?''

''அது அந்தக் காலம் ஏழெட்டு வயது இருக்கும்.''

''காரியங்களை அறிஞ்சுகொள்ள வேணும் என்ற ஆவல், பிள்ளைக்கு அப்பவே நிறைய இருந்திருக்கு''

''பயறு முளைக்கிறதை மட்டுமல்ல, புளியங்கொட்டையளுக்கும் பாத்தி கட்டித் தண்ணி பாய்ச்சிப் பார்த்திருக்கிறேன்.''

''பெரிய ஆராய்ச்சிக் காறி தான்!''

''பாராட்டு விழாப் போதும் இயங்கியலுக்கு வருவம்''

''அப்படியே ஆகட்டும் விதை முளைக்கிறதுக்கு, காற்றும் தண்ணீரும் பொருத்தமான வெப்ப நிலையும் தேவை. முதலிலே எங்களுடைய விதை — அது பயறாய் இருந்தால் என்ன புளியங்கொட்டையாய் இருந்தாலென்ன — தண்ணீரை உறிஞ்சிக் கொண்டே இருக்கும். அப்பொழுது அது பொருமும் அதாவது விதையுடைய பருமன் கொஞ்சமாய் அதிகரிக்கும்.''

''இது தொகையளவு மாற்றம்; இல்லையா?''

''ஓம்— பொருமல் திடீரென்று நேர்வதில்லை''

''அது சரி— நாங்கள் ஒரு 'ப' லூனை ஊதிறது என்றால், அப்பு அதனுடைய பருமன், கண்ணாலே பார்த்துக் கொண்டிருக்கவே திடீரென்று அதிகமாகுது—ஒரு விதை முளைக்கிற பொழுது, ஏற்படுற பருமன் அதிகரிப்பு— அதாவது பொருமல், மெல்ல மெல்ல, அமைதியாக, திடீர் முறிவு ஒன்றும் இல்லாமல், படிப்படியாய் நடந்து கொண்டிருக்கு—இல்லையா?''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மெய் தான்— ஆனால், விதையுடைய தோலைத் துளைச்சுக் கொண்டு தானே முளை வெளிப்பட்டிருக்கும்? விதையினுடைய தோல் வெடிச்சுத்தான் முளைப்பு நடக்குது—''

''இந்தத் தோல் வெடிப்பு ஒரு பாய்ச்சல்— இல்லையா, அப்பு?'

''ஓமோம்' 'பொருமல்' ஒரு படிவளர்ச்சி; 'முளைப்பு' ஒரு பாய்ச்சல். பொருமல் ஒரு குறிப்பிட்ட வரம்பெல்லையைக் கடந்தவுடனே' விதை முளையாகி விட்டுது— விதை முளையாக மாறுகிற மாற்றம் ஒரு பண்பியல் மாற்றம்— அளவடியாலே தான்' 'விதையின் முளைப்பு' முதலாம் இயங்கியல்விதிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு''

''அது சரி அப்பு— இந்த விதி' எப்படிப்பட்ட தோற்றப் பாடுகளுக்குப் பொருந்தும்?''

அப்பு நிமிர்ந்து உட்காருகிறார்— ''நல்ல கேள்வி கேட்டாய்' பிள்ளை. தென்னந்தும்பு தேடாவளையமாகிறதுக்கும் தேர்வடம் ஆகிறதுக்கும் மட்டும் அல்ல, தண்ணீர் கொதிச்சு கொதிநீராவி ஆகிறத்துக்கும், அரிசி அவிஞ்சு சோறாகிறதுககும், விதைமுளைச்சுச் செடி ஆகிறதுக்கும்—உயிரினங்களுடைய பிறப்பு, வளர்ச்சி, இறப்பு ஆகியவற்றுக்


புதிய பொலிவுடன்

தாயகம்

தொடர்ந்து வெளிவர

ஆண்டுச் சந்தா (12 இதழ்கள்) — ரூபா 200/-
ஆறுமாத சந்தா (6 இதழ்கள்) — ரூபா 100/-

தற்காலிக முகவரி:

ஆசிரியர், 'தாயகம்'
வசந்தம் புத்தக நிலையம்,
407, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் விண்வெளியிலே உடுக்கள் — அதாவது நட்சத்திரங்கள் — உருவாகி ஒளி விசி, இறுதியிலே நூர்ந்து அணைஞ்சு அழிஞ்சு போகிறதுக்கும்— இன்னும் இயற்கையிலே உள்ள பல கோடிக்கணக்கான தோற்றப் பாடுகளுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் இந்த விதி பொருந்தும்.''

''அடேயப்பா, அவளவு விரிஞ்சு பரந்த பிரயோகம் இந்த விதிகளுக்கு உண்டா?''

''ஓமோம். இயற்கை நிகழ்வுகளுக்கு மட்டும் அல்ல, செயற்கை நிகழ்வுகளுக்கும் இவை பொருந்தும்—''

''செயற்கை நிகழ்வுகள் என்றால்?''

''ஆறறிவு விலங்குகளாகிய மனிதர்களின் செயல்களைத் தானே செயற்கை என்று சொல்லுறம்! மனிதர்கள் சிறு சிறு குழுக்களாக இயங்கும் பொழுது, குடும்பம், குடி, குலம் என்ற கூட்டங்கள் உண்டாகின்றன. இன்னும் விரிந்து செல்லும் பொழுது, ஊர் இனம், சாதி, சமயம், நாடு, பிராந்தியம், வர்க்கம், உலகம் என்று பல்வேறு அளவுகளிலும் தொடர்புகளும் உறவுகளும், விருப்புகளும், வெறுப்புகளும், நட்புகளும், பகைகளும், இயக்கங்களும், சண்டைகளும் சச்சரவுகளும், கிளர்ச்சிகளும், புரட்சிகளும், போர்களும் உண்டாகின்றன. இவற்றுடன் பிரிக்க இயலாத வகையிலே பண்டங்களின் உற்பத்தியும், பகிர்வும் நுகர்வும் நடைபெறுகின்றன. இந்தச் செயற்கைத் தொழிற்பாடுகள் எல்லாவற்றையும் திரட்டி, 'சமுதாய நடை முறை' என்று நாம் சொல்லலாம். இயற்கை நிகழ்வுகளுக்குப் போலவே, சமுதாய நடைமுறைகளுக்கும் இந்த இயங்கியல் விதிகளைப் பிரயோகிக்கலாம்— சமுதாய நடைமுறைகளின் அசைவியக்கங்களும், படிவளர்ச்சி, பாய்ச்சல் என்ற இரண்டு வகைப்பட்டனவாக, அவற்றின் சேர்மானங்களாகத் தான் அமைகின்றன.''

''முதலாம் விதியைப் பற்றித்தான் இப்பொழுது நீங்கள் விளக்கப்படுத்தி இருக்கிறீங்கள்—அதுவும் எளிமைப் படுத்தி— இந்த நிலையிலேயே அந்த இயங்கியல் விதிகளுடைய முதன்மைப்பாட்டையும் அடிப்படைத் தன்மையையும் நான் உணருகிறேன். ஏனைய விதிகளையும் முழுமையாய் விளங்கிக் கொண்டால் எவ்வளவு நல்லது!'' செத்திருவின் உற்சாகம் குறையவில்லை.

''இன்றைக்கு இவ்வளவும் போதும்'' என்ற அப்பு, முந்தை நாள் குறையிலே விட்டிருந்த தேடாவளையம் திரிக்கும் அலுவலைப் பூர்த்தி செய்வதற்கு ஆயத்தமானார். ❀



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டானியலின் படைப்புக்களில் சமூக — அரசியல் உணர்வுநிலை

திரு. க. தணிகாசலம்

டானியல் அவர்கள் ஒரு படைப்பாளி மட்டுமல்ல சமூக ஒடுக்கு முறையின் கொடூரங்களை வாழ்வியல் அனுபவங்களுக்கு ஊடாக கண்டு அதற்கெதிரான போராட்டங்களில் இளமைக் காலத்திலிருந்தே தன்னை ஈடுபடுத்திக் கொண்ட ஒருபோராளி. ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக ஒரு அரசியற் கோட்பாட்டை தனக்கென ஏற்றுக்கொண்டு, மரணத்தின் இறுதிவரை இத்தகைய உணர்வு நிலையை தனது படைப்புக்களுக்கூடாக வெளிப்படுத்த முனைந்துள்ளார். இத்தகைய ஒரு படைப்பாளியின் படைப்புக்களில் வெளிப்படும் சமூக, அரசியல் உணர்வு நிலையை அறிவதற்கு முன் கலை இலக்கியத்திற்கும், அரசியலுக்கும் இடையேயுள்ள இறுக்கமான தொடர்பு பற்றி எடுத்து நோக்குவது அவசியமாகும்.

யாழ் பல்கலைக் கழக தமிழ் மன்றத்தினரால் 26-7-97ல் நடாத்தப்பட்ட "டானியல் ஆய்வரங்கில் படிக்கப்பட்ட இக் கட்டுரை குறிப்புரைகளுடன் இங்கு தரப்பட்டுள்ளது

கலை கலைக்காகவே என்றும், கலை இலக்கியத்தில் அரசியலா என்றும் தூய கலைவாதிகள் கூக்குரலிட்ட ஒரு காலம் இருந்தது. இன்றும் அக்குரல்கள் முற்றாக ஓய்ந்துவிட்டது என்று கூறமுடியாது. புதிய புதிய சொற்றொடர்களையும், தத்துவங்களையும் முன்வைத்து நடைமுறை அரசியல் சமூக பொருளாதார வாழ்விலிருந்து கலை இலக்கியத்தைப் பிரித்து நோக்கும் போக்கும் துளிர்விட்டு வருவதை நாம் கண்டுவருகிறோம். நடைமுறை வாழ்க்கைப்பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க அஞ்சி தப்பித்து விலகி ஓடும் மனப்பாங்கிலிருந்தே இத்தகைய போக்கு எழுகிறது எனலாம்.

இத்தகைய போக்குக்கு மாறாக எமது நடைமுறை வாழ்விலிருந்து நாம் கற்று வரும் புறநிலை உண்மை என்ன? இருபத்தியோராம் நூற்றாண்டில் கால் பதிக்கப்போகும் எம்மிடையேயும் இன்றும் பெரும்பான்மையோர் தலைவிதிக் கோட்பாட்டில் நம்பிக்கையுடையவர்களாகவே இருந்து வருகின்றனர். ஆனால் அதனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யீறி சமூக, அரசியல் பொருளாதார விதிகள் எவ்வாறு எமது இருப்பையும், வாழ்வையும் பாதிக்கின்றது என்பதை இன்று நாளும் பொழுதும் நாம் நிதர்சனமாகவே கண்டு வருகின்றோம்.

டானியலின் பஞ்சமர் நாவலில் வருவதுபோல அன்று கோவில் விழாக்காலங்களிலே பக்தர்கள் கூடும்போது பஞ்சமர்கள் அமர்வதற்கு எல்லையாக கயிற்றைக் கட்டி இருந்தார்கள். இன்று முட்கம்பி வேலிகளுக்குள் எல்லோருமே பஞ்சமராகி ஒடுங்கிவிடும் ஓர் நிலையில் ஆதிக்க அரசியலுக்கு துணைபோகும் அம்சங்களை எமது இலக்கியத்தில் மட்டுமல்ல, மதத்தத்துவங்களிலும் பண்பாட்டு விழுமியங்களிலும்; கல்வியிலும் கூட கண்டு அகற்ற முனைவதின் மூலமே ஆரோக்கியமான சமூகச் சூழலை இங்கு உருவாக்கமுடியும். இத்தகைய அரசியல் விதி எவ்வாறு கலை இலக்கியங்களுக்கூடாக எம்மேல் பாதிப்புச் செலுத்துகின்றது என்பது பற்றி பேராசிரியர் கைலாசபதி அவர்கள் கூறிய கூற்றை இங்கு எடுத்து நோக்குவது பொருத்தமானதாகும்.

''அரசியலையும் தத்துவத்தையும் இலக்கியத்திலிருந்து விலக்கி வைக்க வேண்டும் என்று கூறுபவர்கள், கூக்குரலிடுபவர்கள் உண்மையில் தமக்குப் பிடிக்காத தத்துவங்களையே தடுத்து நிறுத்த விரும்புகின்றனர். தமது வாதத்திற்கு வழித்துணையாக கலையழகின் முக்கியத்துவம் என்ற கருத்தை முன்கொண்டு செல்கின்றனர். வர்க்கங்களாகப் பிளவுண்டு கிடக்கும் சமுதாயங்கள் அனைத்திலுமே எல்லாக் காலங்களிலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ ஒரு கவிஞன் தான் சார்ந்த வர்க்கத்தின் தத்துவத்தையே வெளிப்படுத்துகின்றான்.... அரசியலில் மாத்திரமின்றி கலை இலக்கியத்திலும் அராஜகம் அழிவையே கொண்டு வரும்.'' (இலக்கியச் சிந்தனைகள் — பக். 101.)

இங்கு வெறும் அரசியலை அல்ல தத்துவம் சார்ந்த அரசியலின் முக்கியத்துவம் பற்றி கைலாசபதி அவர்கள் அழுத்திக் கூறுகின்றார். கலை இலக்கியம் பற்றிய இவ்விரிந்த சமூகப் பார்வையை ஏற்று ஈழத்துப் படைப்பிலக்கியத் துறைக்கு தமது பெரும் பங்கை நல்கியவர் டானியல். இவரது படைப்புக்களில் வெளிப்படும் சமூக, அரசியல் உணர்வு நிலைகளை அவர் ஏற்றுக் கொண்ட இலக்கியக் கோட்பாட்டை முன்வைத்தே இனங்காண்பது மிகப் பொருத்தமானதாகும்.

டானியலின் இலக்கியக் கோட்பாடு —

''மக்களிடம் படிப்பது, அதை மக்களிடம் திருப்பிக் கொடுப்பது'' என்ற மாஓ சேதுங் அவர்களின் மேற்கோளோடு 1972இல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவந்த பஞ்சமர் நாவலின் முன்னுரையிலிருந்து அவரது ஆக்கங்கள் ஒவ்வொன்றிலும் தனது கலைக் கோட்பாடு பற்றியும் அரசியல் நிலைப்பாடு பற்றியும் வெளிப்படையாகவே கூறி வந்துள்ளார்.

''இந்த உலகின் கடைசி மனிதனும் சுதந்திரம் பெறும்வரை ஓய்வதில்லை'' என்ற திட சங்கற்பத்துடன் நிரந்தர சமாதானத்திற்காக போராடி வருவோர்களுக்கு இந்நூல் சிறு ஆயுதமாக அமையுமானால் அதுவே எமக்குப் பெருமகிழ்ச்சி அளிப்பதாகும்.''

என்று பஞ்சமர் முன்னுரையிலும்,

''வர்க்க பேதமற்ற ஒரு சமூகத்தை அடைவதற்கான மனித இனத்தின் யுத்தத்தில் எடுத்தாளப்படும் ஆயுதங்களில் ஒன்றாக கலை இலக்கியங்களும் இருக்க வேண்டும்'' என்று கானல் முன்னுரையிலும் கலை இலக்கியத்தை சமூக ஒடுக்குமுறைக்கு எதிரான, சமூக மாற்றத்துக்கான ஆயுதமாகக் கொள்ள வேண்டும் என்கிறார் டானியல். அத்துடன் நில்லாது,

''சரியான இலக்கியக்காரன் தனது படைப்புக்களுக்கூடாக சரியான அரசியல் தெளிவை உண்டாக்கும் விதைகளைத் தூவி விடாதவனாகில் அவன் மிகவும் தாக்கமான தவறைச் செய்கின்றான்,''

என்று அதே கானல் முன்னுரையில் கலை இலக்கியகாரருக்கு இருக்கவேண்டிய சமூகப்பொறுப்புணர்வையும் சரியாகவே சுட்டிக் காட்டுகிறார். மேற்கூறிய வரிகளிலிருந்து வெறும் ரசனைக்காக எழுதுபவர்கள், சமூக அவலங்களை வெறுமனே சித்தரிப்பவர்களிலிருந்து வேறுபட்டு அடிப்படைச் சமூகமாறுதல்களுக்காக தனது எழுத்தை ஆயுதமாகக் கொள்பவராக டானியல் தன்னை வெளிப்படுத்துகின்றார்.

டானியல் அவர்களின் இலக்கியக் கோட்பாடு இவ்வாறு இருக்க ஐம்பதுகளில் மராட்டிய மாநிலத்தில் தோன்றி எண்பதுகளின் ஆரம்பத்தில் தமிழகத்தில் பரவிய தலித்திலக்கியம், எழுபதுகளின் ஆரம்பத்திலேயே சாதி ஒடுக்கு முறைக்கு எதிராக இலக்கியம் படைத்த டானியலை தமிழில் தலித்திலக்கிய முன்னோடியாக ஏற்றுக் கொள்கிறது. ஈழத்து எழுத்தாளர் ஒருவர் தமிழகத்தின் தலித்திலக்கிய முன்னோடியாக, பிதாமகனாக ஏற்றுக்கொள்ளப்படுவது நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய விடயமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஒடுக்குமுறை ஒன்றானாலும் ஈழத்திலும் தமிழகத்திலும் உள்ள இருவேறு வகைப்பட்ட சமுதாய அரசியல் சூழலில், இருவேறு வகைப்பட்ட கோட்பாட்டுத் தளத்திலிருந்து முன்னெடுக்கப்பட்ட, முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்களை ஒன்றாக்கி தாமும் குழம்பி மற்றவர்களையும் குழப்பத்துள் ஆழ்த்தும் நிலை இன்று எமது இலக்கியச் சூழலில் எழுந்துள்ளது. டானியலை அவர்கள் முன்னோடியாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதற்காக தமிழகத்து தலித்திலக்கியக் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் ஆய்வின்றி அப்படியே எமது மண்ணில் மீள் நடுகை செய்வது எமது கலை இலக்கியத்துக்கும் சமூகத்துக்கும் ஆரோக்கியமான விளைவுகளைத் தருமா என்பது சிந்திக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில் ஏனைய சாதிப்பிரிவுகளின் ஆதிக்கம் இருந்தாலும் பார்ப்பனியம், ஆரியம், இந்து, இந்தியா என்று அரச ஆதிக்கத்துடன் அது இணைந்து விரிந்து செல்வதாக தலித்திலக்கியத்தை முன்னெடுப்பவர்கள் கூறுகின்றனர். இத்தகைய பார்வைக்குத் துணையாக பெரியாரியம், பின் அமைப்பியல், கட்டவிழ்ப்பு வாதங்களையும் துணையாகக் கொள்கின்றனர். இதனை வைத்து பாரதியையும் புதுமைப்பித்தனையும் கூட உரித்துப் பார்த்து அவர்களுக்குள் மறைந்திருக்கும் பார்ப்பனியத்தை வெளிக் கொணர்கின்றனர்.

ஈழத்திலும் இதன் தாக்கங்கள் இன்று வெளிப்படுகின்றன. பாரதியும் 'மானுடம் தனைக் கட்டிய தளையெலாம் அறுக' என்று தான் கூறினான். கட்டவிழ்ப்பது நல்ல விடயம் அவை எமது சமுதாய நடைமுறைத் தேவைகளுடன் இணைத்துச்செய்யப்படும் போதுதான் பயனுள்ளதாக அமையும். சமூகத்தின் யதார்த்தமாக நிலவும் கட்டுக்களை தளைகளை அறுக்க முனையும் போது சமூகப்பொறுப்பும் நிதானமும் தேவைப்படுகிறது இல்லையேல் குளத்தைக் கலக்கி பருந்துக்கு இரையாக்கும் செயலாகவே இது முடியும்.

ஈழத்தில் குறிப்பாக டானியலின் எழுத்துக்கள் எழுந்த வடபகுதிச் சூழலில் வேளாளர் தலைமையிலான சாதியப் படியமைப்பு மூலமே சாதி ஒடுக்குமுறை பேணப்பட்டு வருகிறது. தமிழகத்தைப் போலவே இங்கும் ஆரம்பத்தில் சாதியக் கட்சிகளை உருவாக்கி சாதிய அடிப்படையிலான போராட்டங்களை முன்னெடுக்கும் போக்கும் மராட்டியத்தில் ஏற்பட்டது போல பௌத்த மதமாற்ற முயற்சிகளும் முளைவிட்டிருந்தன. அதனை மீறி மார்க்சிய அணுகுமுறையுடன் அனைத்து சமூகங்களையும் சேர்ந்த வர்க்க சக்திகள் ஒன்றிணைந்து தீண்டாமைக்கு எதிரான வெகுஜன இயக்கத்தின் தலைமையில் இங்கு போராட்டம் முன்னெடுக்கப் பட்டதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் அன்றைய இலக்கை அது வெற்றிகரமாக அடைந்தது. இது பற்றி இக்கட்டுரையின் காலமும் களமும் என்ற பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இன்று சாதி அரக்கன் ஒழிந்து விட்டான். ஆனால் அந்த அரக்கத்தனங்களில் ஒரு பகுதியை ஒடுக்குமுறையாளர்கள் மிக நாகரிகமாக தமது மனங்களின் ஒரு பகுதியில் மறைத்து வைத்துள்ளனர். போர்க்கால இடப்பெயர்வுகளின் போது இது பல இடங்களில் வெளிப்பட்டதுடன் டானியலின் தண்ணீர் நாவலையும் நினைவூட்டியது. எனவே டானியல் ஏற்றுக்கொண்ட கோட்பாட்டின் அடிப்படையில் தொடர்ந்தும் சாதியத்துக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதா அல்லது தமிழகத்து தலித்திய வழிமுறைகளைப் பின்பற்றி நாமும் சாதிய அடிப்படையிலான கட்சிகளையும் போராட்டங்களையும் உருவாக்குவதா என்பது டானியலின் சமூக அரசியல் பார்வை பற்றிய ஆய்வின் போது எம்முன்னால் எழுகின்ற கேள்வியாகும்

ஆனால் ஒரு படைப்பாளி அல்லது கலைஞன் தனக்கென ஒரு அரசியல் தத்துவார்த்தக் கருத்து நிலையைக் கொண்டிருந்தாலும் கலையாக்கச் செயற்பாட்டின் போது அக நிலை சார்ந்த உள்ளார்ந்த உணர்வில் நின்று இயங்குவதால், அவனது வாழ்நிலை சூழல் இவற்றின் தாக்கங்களினால் அக்கருத்து நிலையினின்றும் சுருங்கிப் போகவும், விரிந்து செல்லவும், மிதமாகவும், தீவிரமாகச் செயற்படுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. பாரதியின் கட்டுரைகளுக்கும், கவிதைகளுக்கும் இடையேயுள்ள மிதமான, தீவிரமான தன்மைகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். இதனால் இங்கு ஒரு கலைப்படைப்பு எழுவதற்கான புறநிலை யதார்த்தம் கலைஞனது அகத்தில் ஏற்படுத்திய பாதிப்பினை நாம் சிறிதளவாவது உணர்ந்துகொள்ள அப்படைப்புத் தோன்றிய காலத்தையும், களத்தையும் அறிவது அவசியமாகும்.

காலமும் களமும்:—

இலங்கையிலும், தமிழகத்திலும் வெளிவந்த பல இலக்கியக் கட்டுரைகளிலும் ஐம்பதுகளிலிருந்து தனது சிறுகதைகள் மூலம் இலக்கியப் பிரவேசம் செய்த டானியல் அவர்கள் 1972 முதல் 1984 வரை வெளிவந்த பஞ்சமர் தொடர் நாவல்களின் மூலமே ஆளுமைமிக்க எழுத்தாளராக பரிணமித்துள்ளார். அவரது அனைத்து நாவல்களுக்கும் கால உந்தல், உணர்வுத்தூண்டல்களையும், கருக்களையும் "பஞ்சமர்" நாவல் தோன்றிய காலமும், களமுமே அவரிடமேற்படுத்தியது எனலாம் "பஞ்சமர்" நாவல் முன்னுரையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ''1956இல் இருந்து முன்பிருந்த அரசியல் வடிவங்கள் ஏறக்குறைய இந்த மக்களால் கைவிடப்பட்டு ''அடிக்கு அடி, உதைக்கு உதை'' என்ற விதத்தில் ஏற்பட்ட எழுச்சி 1966 இல் தனியான ஒரு ஜாதிச்சென்றிராமல் பொதுவில் நல்லெண்ணங்கொண்ட சகலரையும் உள்ளடக்கிய வெகுஜன இயக்கமாகப் பரிணமித்ததுவரை நடந்து முடிந்துபோன சம்பவங்கள் மட்டுமே இந்த நாவலுக்கூடாக மீட்கப்படுகின்றது. இதற்குப் பின்னால் இந்த மக்கள் நடாத்திய போராட்டங்கள் அது யாரால் எப்போது எழுதப்பட்டாலும் பஞ்சமரின் தொடர்ச்சியாகவே இருக்கும்''

என்று டானியல் அவர்கள் குறிப்பிட்டிருப்பது எமது சிரமத்தைக் குறைத்துவிடுகிறது. டானியலால் குறிப்பிடப்படும் ''66 ஒக்டோபர் எழுச்சி'' அவரது நாவல்களுக்கு மட்டுமல்ல, அவரது தேசியம், தேசிய ஒருமைப்பாடு பற்றிய பலரது தவறான புரிதல்களுடன் கூடிய வாதப் பிரதிவாதங்களுக்கும் களமாக அமைவதால் இக்காலத்தையும், களத்தையும் சற்றுத்தெளிவாகவே புரிந்து கொள்வது அவசியமாகும். பொருத்தப்பாடு கருதி இவரது தேசிய இனப்பிரச்சினை பற்றிய நிலைப்பாட்டைக் குறிப்பிடும் போது இதனை ஆழமாக நோக்குவோம்.

அறுபதுகளின் ஆரம்பத்தில் தனிச்சிங்களச் சட்டத்திற்கு எதிராக மாபெரும் சத்தியாக்கிரகப் போராட்டம் நடந்தது. அது முடிந்து பல ஆண்டுகளின் பின்னரும் தமிழ்த்தேசிய இனத்தின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அது போன்றே தமிழர்களிடையே இருந்து வந்த சுரண்டல்கள், ஏற்றத் தாழ்வுகள் ஒழியவில்லை. சாதிபேதங்கள் மறையவில்லை. தமிழர்களில் ஒரு பகுதியினர் ஆலயங்களுள் சென்று சமமாக வழிபட முடியாது. பொது இடங்களில் சமத்துவமாக அமர முடியாது. தேனீர்க்கடைகளில் சுறள்பேணிகளும், போத்தல்களும் தாராளமாக பழக்கத்தில் இருந்தன. தோட்டக் கூலிகளுக்கு அட்டுவத்தில் சோறும், கைமண்டையில் நீரும் (இருகைகளாலும் ஏந்திக் குடிப்பது) தாராளமாக' எங்கும் கிடைத்தது. பெண்கள் மார்பகத்தை மறைத்து ஆடை அணிவது கூட குற்றமாகக் கருதப்பட்டது. இத்தகைய கொடுரங்களுக்கு எதிராகவே பஞ்சமர் நாவில் வரும் போராட்டங்கள் நடைபெற்றன.. இதில் பலர் தியாகிகளாகினர் பலர் தூக்குக்கயிற்றைத் தொட்டு மீண்டனர். டானியலின் நாவலில் வருவது போல நாய்கள் அல்ல, ஆண்டாண்டுகாலமாக அடிமையுற்றிருந்த மக்கள்தான் ஒடுக்குமுறைக்கு எதிராக எழுந்து போராடினார்கள். இதனை பஞ்சமர் நாவலின் சமூகப் பார்வையிலே பார்ப்போம். நிலவுடைமையாளர்கள் விவசாயிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பைச் சுரண்டவும் ஆச்சுரண்டல் கொடுமைகளுக்கெதிராக ஒன்றுபட்டுக்கிளர்ந்தெழுவதைத் தடுப்பதற்காகவும், உழைக்கும் மக்களைப் பிரித்து ஏற்படுத்திய சாதிமுறை அருபதுகளின் நடுப் பகுதியிலும், தனது கொடூரத்தை இந்த மண்ணில் காட்டி நின்றது.

அதுபோன்றே சாதி, இன, மத, வர்க்க பேதங்களுக்கு முட்டுக் கொடுத்து அவர்களிடையே மோதல்களை ஏற்படுத்தி அடிமட்ட மக்களைப் பிரித்து வைத்து அவர்களது முதுகுகளில் மேலும், மேலும் சுமைகளை ஏற்றி வந்த பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியல் மேற் கூறிய கொடுமைகளை எதிர்த்து சமூகமாற்றத்தை விரும்பி நின்ற அன்றைய புதிய தலைமுறையினருக்கு தடையாக அமைந்தது. இத்தகைய சூழலில் உலகப் பொதுவுடைமை இயக்கத்தில் ஏற்பட்ட தத்து வார்த்த மோதல்கள், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் ஏற் பட்டு 1964 இல் பிரிவு ஏற்பட்டது. மக்களின் பிரச்சனைகளைத் தீர்க் கத்தவறிய பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலைப் புறக்கணித்து புதிய ஜனநாயக அமைப்பைத் தோற்றுவிப்பதற்கான வெகுஜனப் போராட்ட மார்க்கத்தை புதிய அணியினர் முன்வைத்தனர். அந்த அணியிலேயே டானியல் அவர்களும் நின்றார்.

உலக மேலாதிக்க சக்திகளோடு கூட்டுச் சேர்ந்திருந்த மிகப்பல மான அரசுக்கெதிராக ஐக்கியப்படுத்தப்படக்கூடிய அனைத்து சக்தி களையும் ஒன்றிணைக்கும் ஐக்கிய முன்னணிக் கோட்பாட்டை இவர் கள் கொண்டிருந்தனர். இத்தகைய ஐக்கிய முன்னணிக் கோட்பாட் டின் அடிப்படையிலேயே வடபகுதியில் அதுவரை சாதியச் சங்க மாகக் குறுகிப்போயிருந்த நிலையை மாற்றி தீண்டாமைக் கொடு மைக்கு எதிராக ஒன்றிணைய விரும்பிய அனைத்து வர்க்கசக்திகளை யும் இணைத்த போராட்டமாக அது முன்னெடுக்கப்பட்டது. அதே போன்று வல்லை நெசவாலை, காங்கேசன் சீமெந்து ஆலை, பரந்தன் இரசாயன ஆலை, இ.போ.ச. தொழிலாளர், தியேட்டர் தொழி லாளர், மின்சாரத் தொழிலாளர் போன்றோரின் வேலை நிறுத்தப் போராட்டங்கள், கிளிநொச்சி, வன்னிப் பிரதேச விவசாயிகளின் நில, நீர்ப்பங்கீட்டுக்கான போராட்டங்கள் எனப் பலமுனைகளிலும் இவை முன்னெடுக்கப்பட்டன. இப் போராட்டங்களில் பங்குகொண்ட பல் வேறு இன, மத சமூகங்களைச் சேர்ந்த வர்க்க சக்திகளும் சாதியத் துக்கெதிரான போராட்டங்களிலும் பங்குகொண்டு அறிவையும் அனுபவங்களையும் பகிர்ந்து கொள்ள முடிந்தது. இத்தகைய பரந்த தளத்தில் நின்றுதான் டானியலின் பஞ்சமர் நாவல் படைக்கப்பட்டது

"பஞ்சமர்" நாவல்களும், சமூகப் பார்வையும்:—

இதுபோன்ற உண்மை நிகழ்வுகளை கலையாக்கம் செய்யும் போது அந்த நிகழ்வுகளோடு இரத்தமும், சதையுமாகப் பின்னிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைந்து நின்ற மக்களின் பார்வைக்கும், படைப்பாளிகளின் பார்வைக்கும் இடையே வேறுபாடு ஏற்படுவது இயல்பு. அந்த வேறுபாடு படைப்பாளியின் கலையாக்கத் திறனால் மேலும் சிறப்படைந்து கூர்மை அடைவதும் உண்டு. திறன் குன்றி மழுங்கிப் போவதும் உண்டு.

இங்கு இப்போராட்டத்தை மையமாக வைத்து எழுதப்பட்ட "பஞ்சமரும்" "செ.கணேசலிங்கத்தின் போர்க்கோலமும்" இப்போராட்டத்தில் பங்குகொண்ட மக்களின் விமர்சனத்திற்குட்பட்டவை தான். தமிழகத்தில் கீழ்வெண்மணிச் சம்பவத்தை கருவாகக் கொண்டு எழுதப்பட்ட "குருதிப்புனல்" நாவலும் இவ்வாறு விமர்சனத்திற்குஉள்ளாகியது. காரணம் இத்தகைய நாவல்களின் வெற்றி, சம்பவங்களை யதார்த்தமாக படம்பிடித்துக் காட்டுவதல்ல. அல்லது எழுத்தாளன் தனது விருப்பு வெறுப்புக்களை கொட்டித்தீர்ப்பதல்ல. மாறாக அப்போராட்டத்திற்கு உந்துதலாக அமைந்த சமூக பொருளாதார உறவுநிலைகளையும், அவை அளவுமாற்றம் படிப்படியாகப் பண்பு மாற்றத்திற்கு இட்டுச் செல்லும் படிநிலைகளையும் தலாபூர்வமாகத் தொட்டுக்காட்டுவதாக அவை அமைதல் வேண்டும்.

இத்தகைய எதிர்பார்ப்புகளோடு பஞ்சமர் நாவலுக்குள் நாம் நுழைந்தால் எமது மண்ணில் நிகழ்ந்த சாதிக்கொடுமைகள் சிலவற்றை டானியல் காட்சிப்படுத்துகிறார். பலவற்றை உரையாடல்கள் மூலமாகவது வெளிக் கொணர்கிறார். இந்த மண்ணில் நடைபெற்ற போராட்டங்கள் பல சித்தரிக்கப்படுகின்றன. உணர்வும், உயிரோட்டமும் நிறைந்ததாக அது பூரணத்துவப்படுத்தப்படவில்லை. சாதி ஒடுக்குமுறைக் கெதிராக பெரும் பாதிப்பைச் செய்த அப்போராட்டத்தைச் சித்தரிக்கும் நாவலின் சிறப்புமிக்க பாத்திரங்கள் பலவீனமானவையாகவே படைக்கப்பட்டுள்ளன. உறுதியான வர்க்கத்தளத்திலிருந்து அவை உருவாக்கப்படவில்லை. எடுத்துக் காட்டாக பஞ்சமர் நாவலில் இரண்டாம் பக்கத்தில்,

> "இப்ப பள்ளியன் கூட, கூலியைப் பேசுங்கோ அருவி வெட்டவர எண்டு கேக்கிறாங்கள்.... பள்ளரும் எங்களுக்கு தட்டுவத்திலை சோறும் வேண்டாம், உங்கடை கூலி நெல்லும் வேண்டாம் காசாச் சம்பளத்தைத் தாருங்கோ எண்டு என்னட்டையே கேட்டிட்டாங்கள்...... ம் ... என்ன செய்கிறது அவன் கோவியக் கந்தையாவின்ர மிசினையும் பிடிச்சு நாலைஞ்சு பள்ளரையும் பிடிச்சு ஒரு மாதிரி ஒப்பேத்திப் போட்டன்...... இந்த அருவி வெட்டுக்கும் மிசின் வந்துதெண்டால் ஒரு கரைச்சலுமில்லை. பள்ளர் பள்ளியன் எழுப்பம் விடாயினம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமாயணமும்
# சுதந்திர சிந்தனையும்

இராஜ்ஜியத்தை எப்படி ஆளவேண்டும் என்று, பரதனுக்கு இராமன் செய்த உபதேசம்:-!

''அன்பிற்குரியவனே நார்த்திகர்களைப் பின்பற்றும் பிராமணர்களுக்கு இடம் கொடாதே, அவர்கள் அழிவைத்தான் விளைவிப்பவர்கள். அவர்கள் மெத்தப் படித்திருந்ததாகக் காட்டிக் கொள்வது பொய்; அவர்கள் உண்மையில் முட்டாள்களே. மிக உயர்ந்தவையும் முக்கியமானவையுமான தர்ம சாத்திரங்கள் இருக்க, இவர்கள் தங்கள் புத்தியை தருக்கத்தின் கருணைக்கு அர்ப்பணம் செய்துவிட்டு தர்ம விதிகள் பயனற்றவை என்று கூறுகின்றனர்.''

ராமயணா அயோத்யா (38—9)

சின்னக் கமக்காரச்சியின் இந்த வார்த்தைகளில் கிராமத்து விவசாயக் கூலிகளின் போராட்டத்திற்கெதிராக விவசாய இயந்திரமயமாக்கலை சிந்திக்கும்போக்கு வெளிப்படுகின்றது. அத்துடன் இன்றைய தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு எதிராக பல்தேசிய நிறுவனங்கள் கணணிமயப்படுத்தலை தீவிரமாக்கும் போக்கும் எமது கண்முன் விரிகிறது.

ஆனால் ''என்கதை'' என்ற சிறு நூலில் டானியல் குறிப்பிட்டுள்ளது போன்று மாக்சிம் கார்க்கியின் ''தாய்'' பாத்திரத்தை மனதிற் கொண்டு படைக்கப்பட்ட ''ஐயாண்ணர் பாத்திரத்திற்குப் பஞ்சமர் நாவலில் முதல் முறையாக ஒரு கள்ளுக் கொட்டிலில் அவரது வருகைக்கு கட்டியங் கூறப்படுகின்றது.

''என்ன மாணிக்கம் ஐயாண்ணர் வந்திட்டுப் போட்டுதே''
''இல்லைச் செல்லப்பாண்ணை ஆள் வாற நேரந்தான்.''
''அது பாணி இல்லாட்டி இஞ்சை வந்து போறது போல இருக்காது ஒரு சுத்த நெஞ்சுக்காரன். தன்சாதிக்காரன், பிற சாதிக்காரன் என்டு முகம் பார்க்காத சீவன், என்னண்டுதான் உத்தானுக்கு உலகத்து புதினமெல்லாம் தெரியுதே கடவுளுக்குத்தான் தெரியும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் ஐயாண்ணர் வருகை தந்து அவரால் கூறப்படும் புதினமும் சாதி மீறிய பாலுறவும் அதனால் ஏற்படும் கொலை பற்றிய கதையும்தான். இதுவும் சாதிக் கொடுமைகளில் ஒன்றுதான். ஆனால் டானியலைப்போன்ற எழுத்தை ஆயுதமாக ஏற்றுக் கொண்ட ஒரு எழுத்தாளன் பரந்த நோக்கோடு முன்னெடுக்கப் பட்ட ஒரு போராட்டத்தின் தளகர்த்தனை அறிமுகப்படுத்தும் விதமும், அவரது புதினப் பேச்சும் ஆரம்பமே பலவீனமாக அமைந்து விடுகின்றது. இப்பலவீனத்தின் பிறிதொரு வெளிப்படை யாக இப்போராட்டத்தை தத்துவ வழிப்படுத்தும் குமாரவேலன் எனும் பாத்திரமும்

> "வேலுப்பிள்ளைக் கமக்காரனின் பேரன், சின்னக் கமக் காறிச்சி இருட்டுக்கை பெத்த பிள்ளை குடத்தினைப் பள்ளி வளர்த்த மகன்" (பஞ்சமர் பக்- 129) என்றே படைக்கப்படு கின்றான். வர்க்கச் சுரண்டல்கள், ஒடுக்குமுறைகள் இவற்றுக்கு மேலாக பாலியல் உறவுகளை முதன்மைப்படுத்தும் இப்போக்கு பஞ்சமரில் மட்டுமல்ல பஞ்சமர் தொடர் நாவல்கள் அனைத்திலும் பாதிப்பைச் செலுத்தியுள்ளது.

சாதி மீறிய பாலுறவு சமூக யதார்த்தமாக ஒரு பக்கத்தில் இருந்தபோதும் அதை வெளிப்படுத்தும் போது, ஆணாதிக்க உணர் வுடன் அதிகாரத்திலிருக்கும் நிலவுடைமையாளர்கள் தமது குடிமைப் பெண்கள் மீது மேற்கொள்ளும் பாலியல் ஒடுக்குமுறையையும், அதே ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு உட்படும் அவர்களது வர்க்கத் தைச் சேர்ந்த பெண்களின் பாலியல் பிறழ்வுகளையும் சமப்படுத்த முடியாது. 'கானல்' நாவலில் வெள்ளைச்சி அம்மாள் அவளது கண வன் தம்பாப்பிள்ளையாரால் அடித்துக் கொல்லப்படுவது இவ்வொ டுக்கு முறைக்கு எடுத்துக் காட்டாக அமைகிறது. எனவே சாதி மீறிய பாலுறவை முதன்மைப்படுத்துவது "அடிமைகள்" நாவல் முன்னுரையில் கோ. கேசவன் குறிப்பிட்டுள்ளது போல்,

> "உயர்சாதி ஆடவர்கள் கீழ்சாதிப் பெண்களைப் போகப் பொருளாக நினைக்கும் யதார்த்தப் போக்கிற்கு இலக்கியப் பழிவாங்கலாக உருமாறி ஒருபோலி மனநிறைவைத் தர முயல்கிறது. இத்தகைய போலி மனநிறைவுகள் புரட்சிகர இயக்கத்திற்கு பலம் சேர்க்காது. புதினத்தை கொண்டு செல் வதற்குரிய சுவாரசியமான கலையுக்தி என்ற அளவில் கூட இதைப் பயன்படுத்துவதில் தவறு உண்டு." (அடிமைகள் பக்-30)

என்பது இங்கு ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சமருக்குப் பின் வந்த கோவிந்தன், அடிமைகள், கானல், தண்ணீர் போன்றவை சற்று பின்னோக்கி வரலாற்றுப் போக்கில் சாதியக் கொடுமைகளையும், நிகழ்வுகளையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இவற்றில் கானலின் களம் சற்று வேறுபடுகின்றது. பாத்திர வார்ப்புகள் சிறப்பாக அமைகின்றன. 1975இல் வெளிவந்த 'போராளிகள் காத்திருக்கின்றனர்' என்ற குறுநாவலில், அன்பைப் போதிக்க வந்த மதங்கள் மக்களை ஒடுக்குவதற்கு அதிகார வெறியர்களின் கையில் கருவிகளாக இருப்பதைக் காட்ட,

> ''முஷ்டியை உயர்த்தி மேசைமேல் பலமாகக் குத்தினான் முத்துராசன். மேசை அந்தத்தில் கொலுவிருந்த அந்தோனியார் திருச்சொரூபம் சரிந்து நிலத்தில் வீழ்ந்து நொருங்கிப் போயிற்று.'' (போராளிகள் காத்திருக்கின்றனர் பக். 104)

என்று தீவிர உணர்வு நிலையில் நின்று காட்டிய டானியல் கானல் நாவலில் மிக நிதானமாக அதே உணர்வை வெளிப்படுத்துகிறார். சாதி, இன, மத பேதங்களை அகற்றுவதிலும், ஒடுக்குமுறைகளை இல்லாமற் செய்வதிலும் ''பட்டினி'' என்று சிங்களத்தில் கூறப்படும் ''வயிற்று நெருப்பை'' பசித்தோரை ஒழிப்பதிலும் மதங்களால் மனிதகுலத்திற்கு எதுவும் செய்யமுடியவில்லை என்பதை ஞானமுத்துப் பாதிரியாரின் கண்ணீரால் எழுதிக் காட்டுகிறார் டானியல்.

டானியலின் படைப்புக்களில் தேசிய இனப்பிரச்சினை:-

டானியலின் நாவல்களில் தேசிய இனப்பிரச்சினையைத் தொடுகின்ற நாவல்கள் ''போராளிகள் காத்திருக்கின்றனர்'' என்ற குறுநாவலும், 1984இல் எழுதப்பட்டு 1993ல் வெளிவந்த ''பஞ்சகோணங்கள்'' நாவலுமாகும். இந்த இரு நாவல்களும் பத்தாண்டு கால இடைவெளியில் எழுதப்பட்டுள்ளது. இந்த இரு நாவல்களுக்கூடாகவும் டானியல் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டு, இவர் தேசிய இனப்பிரச்சினையில் போதிய கவனம் செலுத்தவில்லை என்பதும், தென்னிலங்கை இடது சாரிகளை நம்பி தேசியம், தேசிய ஒருமைப்பாடு பேசி தவறிழைத்து விட்டார் என்பதுமாகும். இது இடதுசாரிகள் என்று கருதப்பட்ட எல்லோர் மீதும் இந்த இடைக் காலத்தில் சற்று உரமாகவே தொடர்ந்து முன் வைக்கப்பட்டு வரும் குற்றச் சாட்டாகும். எனவே இதன் உண்மை நிலையைக் கண்டறிய இக்கட்டுரையில் வரும் காலமும் களமும் என்ற பகுதியில் கூறப்பட்ட அறுபதுகளின் நடுப்பகுதியில் நிகழ்ந்த மாறுதல்களை மீண்டும் இங்கு நினைவு கூரல் அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கால கட்டத்தில் தமிழ், சிங்கள மிதவாதத் தலைமைகளுக்கெதிராக அரசியல் இயக்கங்கள் எழுந்தன. தெற்கே இது அதிதீவிர நிலைப்பாட்டை எடுத்து ஜனதா விமுக்தி பெரமுனை என்ற இளைஞர் இயக்கமாக மாறியது. வட பகுதியிலும் ஏனைய பகுதிகளிலும் இது மக்கள் மத்தியிலான முரண்பாடுகளை வர்க்கப் பார்வையுடன் நோக்கி சீர் செய்து வளர்வதற்கு முன்வந்தது.

காலனித்துவம் அமைத்துக் கொடுத்த பாராளுமன்றத்தில் அமர்ந்து கொண்டு, அவர்கள் விட்டுச் சென்ற அதே இனவாதப் புண்களைக் காட்டி அரசியல் நடாத்தும் ஆளும் வர்க்கத்திற்கு அரசியலில் நண்பர்களும் இல்லை, எதிரிகளும் இல்லை. அவ்வப்போது ஆசனங்களில் மாறி அமர்ந்தால் இரு நிலைகளும் மாறி விடும். பதவிக்கு ஆபத்து என்றால் சண்டைபோட்டுக் கொள்வார்கள். பதவி கிடைத்தால் கூடி விருந்துண்பார்கள். பாராளுமன்ற சந்தர்ப்பவாதிகளின் சாதாரண நடைமுறை இது.

ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், தொழிலாளர் வர்க்கத்திற்கும் நிரந்தரமான நண்பர்களுமுண்டு, பகைவர்களுமுண்டு. இந்த மக்களின் பொது எதிரி விரல் விட்டு எண்ணக்கூடிய நிலவுடைமையாளர்களும், பெரு முதலாளிகளுமாவர். இவர்களுக்கெதிராக மக்கள் எழுந்தால் மிகப் பலம் வாய்ந்த ஏகாதிபத்தியமும், பிராந்திய வல்லாதிக்கமும் தனித்தனியாகவோ, கூட்டாகவோ பக்கபலமாக முன்வரும். இவர்களுக்கிடையே ஏற்படும் முரண்பாடுகளில் நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக இந்த மண்ணையும் இதன் மக்கள் சக்தியையுமே இவர்கள் நம்பினர். எனவே பலமான எதிரிக்கு எதிரான பலம் வாய்ந்த ஐக்கியமுன்னணியின் அவசியத்தை இவர்கள் உணர்ந்தனர். சாதி, இன, மத சார்பற்ற பொது எதிரிக்கு எதிராக தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், புத்திஜீவிகள், சிறு முதலாளிகள் இணைந்து நடாத்தும் வெகுஜனப் போராட்டங்களுக்கு ஊடாகவே மக்கள் ஒவ்வொருவரும் ஒரு [illegible] சுதந்திரத்தை [illegible] மற்றும் மனப்பக்குவத்தைப் பெறுவர் என்று இவர்கள் நம்பினர். இந்த அடிப்படையிலேயே [illegible] கைலாசபதி போன்றவர்களால் தேசியம், தேசிய[illegible] என்ற பதங்கள் அறுபதுகளின் நடுப்பகுதிக்குப் பின்னர் பிரயோகிக்கப்பட்டது. இவர்கள் பேரினவாதத்திற்கு முட்டுக்கொடுத்த தென்னிலங்கை இடது சாரிகளை நம்பி தேசியம் பேசவில்லை. உழைப்பாளி மக்களையும் புத்திஜீவிகளையுமே நம்பினர். இதற்கு எடுத்துக்காட்டாக,

"இந்த [illegible] நாங்கள் [illegible] இந்த ஆயுதங்களை உயர்த்திக் கொண்டு புரட்சி [illegible] இல்லையேல் [illegible] வின் பின்னால் அணிவகுத்துச் செல்லும் [illegible]யும், இல[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைத் தீவின் இனங்கள் யாவும் கைகோர்த்துக் கொண்டு குதூகலித்துக் கொண்டாடும் காட்சியும்'' (பஞ்சகோணம் பக்—09)

என்ற டானியலின் வரிகளில் இக்கனவு விரிவதைக் காணலாம். இதிலிருந்து இவர்கள் செங்கொடியின் கீழ் இரு இனங்களும் சுயநிர்ணய அடிப்படையில் ஒன்றுபடுவதையே தமது தேசிய ஒருமைப்பாடாகக் கொண்டு இருந்தனர் என்பது தெரிகிறது.

டானியல் அவர்களின் 'போராளிகள் காத்திருக்கின்றனர்' இதனை அடிப்படையாகக் கொண்டே எழுந்தது எனலாம். இந்நாவலில் வகுப்புக் கலவரத்தினால் பாதிக்கப்பட்ட சம்மாட்டியாரின் மகனுக்காக 'காதுக்குக் காது' என்ற அடிப்படையில் ஒரு சிங்களத் தாய் பெற்றெடுத்த அலஸ் என்ற ஊமைத் தொழிலாளியின் காது அறுக்கப்படுகிறது. அத்துடன் விடிவதற்கிடையில் அவனைக் குடிசையோடு எரித்துவிடவும் முயல்கின்றனர். அதைத் தடுப்பதற்கு ஊரிலுள்ள அவனோடு தொழில் புரியும் உழைப்பாளிகள் ஒன்றுசேர்கின்றனர். இது மிகச் சரியானதே.

பாட்டாளி மக்களின் மனிதாபிமானம் ஏனைய வர்க்கங்களின் மனிதாபிமானங்களையும் விட விசாலமானது தான். உலகில் தோன்றிய அனைத்து சமூக, பொருளாதார மத தத்துவங்களையும் விட சாதி, இன, மத, பால், வர்க்க பேதங்களைத் தாண்டி, மனிதனை மனிதனாகப் பார்க்கவும் நேசிக்கவும் மாக்சிசம் உழைக்கும் மக்களுக்கு இலகுவாகவே கற்றுத் தருகிறது.

எழுபதுகளில் இவ்வாறு நிதானமாகப் பார்த்த டானியல் எண்பதுகளின் பின் தமிழ் மக்கள் கொல்லப்படுவதை அதே உணர்வோடு காணத் தவறுகிறார்' இதற்கு அரசியல் நியாயம் கற்பிக்க முடியாது. பிரிவினை அந்நிய சக்திகளுக்கு மேலும் வாய்ப்பைத் தருவதுடன், இலங்கையின் புவிசார் அமைவின் அரசியற் சூழலில் அதன் சாத்தியப்பாட்டை மேலும் சிக்கலாக்குகின்றது என்ற அடிப்படையில் ஒருவர் அதனைக் கோட்பாட்டு ரீதியில் ஏற்காது விடலாம். ஆனால் அதற்கான போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் அதற்குப் பதிலாக ஒரு தீர்வை முன்வைக்க முடியாத நிலையில் அதனை ஆதரிக்காது விட்டாலும் எதிர்க்கவோ பலவீனப்படுத்தவோ கூடாது. இது உயிர்அச்சத்தின் அடிப்படையில் எடுக்கும் முடிவல்ல. சமூகப் பொறுப்போடு சரிக்கும், பிழைக்கும் இடையே வரையப்படும் எல்லைக் கோடாகும்.

பஞ்சகோணம் நாவலின் பாத்திரங்களின் உரையாடல்களின் மூலம் பல வாதப் பிரதிவாதங்களை டானியல் முன்வைக்கின்றார். முரண்பாடுகள் நிலைநிறை எடுத்துக் காட்டுகிறார். இது சிறந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்தோடு தேசிய இன விடுதலைக்கான சரியான மார்க்கத்தை தேடுபவர்களுக்கு உதவியாக அமைந்திருக்கக்கூடும். ஆனால் எழுபதுகளின் முற்பகுதியிலேயே வடபகுதியின் பிரசித்தி பெற்ற ஆலயங்கள் யாவும் திறந்து விடப்பட்ட பின்னர், எண்பதுகளில் பேரினவாதம் "போர் என்றால் போர்" என்று தமிழ் மக்கள் மீது யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்ட பின்னர், கிராமத்துக் கோவிலில் ஆலயப் பிரவேசம் முதலில் நடத்தவேண்டும் என்று வாதிடுவது தவறான நிலைப்பாடாகும். ஜே. ஆரின் போர்ப்பிரகடனத்தின் பின் அமெரிக்காவின் திறந்தவெளிப் பொருளாதார நலன்களும் இருந்தன. பிராந்திய வல்லரசான இந்தியாவும் தனது நலன்களை முன்வைத்து, தமிழர்களுக்கு உதவ முன்வந்தது. இச் சிக்கலான அரசியற் சூழலில் வெளிவந்த பஞ்சகோணத்தில் தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. ஆனால் டானியலின் படைப்புக்கள் அனைத்தையும் தொகுத்துப் பார்க்கும் போது இத்தவறுக்கான காரணத்தை தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்ற பரந்த தளத்தில் நின்று முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தை "பஞ்சமர்" என்ற தலைப்பில் நாவலாக்கியதுடன் நிற்காது அதன் தொடர்ச்சியாகவே தனது எழுத்துப்பணியைத் தொடர்ந்தன் மூலம் வர்க்கப் பார்வையிலிருந்து விலகி சாதியச் சார்பு நிலைக்கு இவர் தள்ளப்பட்டுள்ளார். ஒடுக்கப்பட்ட மக்களுக்குள் வர்க்க சக்திகள் அதிகம் உண்டு என்ற உண்மைக்குப் பதிலாக சாதி சமன் வர்க்கம் என்ற நிலைப்பாட்டில் நின்றே சமூகத்தை நோக்கினார். இதனால் இவரது நாவல்கள் அனைத்திலும் பஞ்சகோணத்தில் வரும் இளைய தம்பியின் கல்லுடைக்கும் சிறகனைத்தவிர ஒரு ஆலைத் தொழிலாளியையாவது அடையாளம் காண முடியவில்லை. "மக்களிடமிருந்து மக்களுக்குக் கொடுப்பது" என்ற மாஓவின் கருத்தை ஏற்ற இவர் "மரத்தைப் பார்த்து காட்டைப் பார்க்கத் தவறுவது" போல சமுதாயப் பிரச்சினைகளின் பகுதியைப்பார்த்து முழுமையைப் பார்க்கத் தவறுகிறார். இக்குறைபாடுகள் இருந்த போதும் பஞ்சகோணம் நாவலில்,

"டேய் இது ஆரின்ரை பையடா"

"அது என்ரை தான்" (பஞ்சகோணம் பக்—354)

என்று கூறும் சுப்பையா வாத்தியாருக் கூடாக டானியல் தனது திறந்தைத் தெளிவாகக் காட்டுகிறார். முடிவாக ஆறாம் ஆண்டுப் படிப்புடன் அடிமட்ட மக்களின் போராட்ட இயக்கத்துடன் தன்னையும் இணைத்துக் கொண்ட இந்த ஆற்றல் மிக்க எழுத்தாளரிடமிருந்து வெறும் நாவல்களை அல்ல அவரே கூறியது போல் பஞ்சப் பட்ட மக்களின் விடுதலைக்கு அவரது எழுத்தை ஆயுதமாக எதிர் பார்த்தவர்களுக்கு கிடைத்தது கூர் மழுங்கிய ஆயுதங்கள் தான். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய பண்டிதருக்கு ஒரு பாமரனின் பதில்

மதிப்புக்குரிய பழைய பண்டிதருக்கு,

''ஈழத்தின் நவீன இலக்கியவாதிகளுக்கு என்று பொதுவான அறை கூவலோடு தாங்கள் எழுதிய பகிரங்கக் கடிதம் (தினக்குரல் 27 ஜூலை 1997) நீங்கள் எதிர் பார்த்தது போன்று பெரும் ரோஷத்தை'' எழுப்பாவிட்டாலும், ஈழத்து இலக்கிய உலகின் பலம் பலவீனங்களை சிறிதளவாவது எடைபோட உதவியுள்ளது.

நவீன இலக்கியக் காரர்கள் பால் நீங்கள் ''பயங்கலந்த—மதிப்பை' கொண்டிருப்பதாக எழுதி இருந்தீர்கள். உண்மை அதுவல்ல நவீன எழுத்தாளர்களுக்கு அச்சமூட்டுவதற்காகவே அவ்வாறு எழுதியுள்ளீர்கள். பயத்துக்குரியவர்கள் மேல் வெறுப்பு ஏற்படும். அதிகமானால் கோபம் வரும் அவர்கள் மீது மதிப்பு வைத்தால் அது போலியாகவே இருக்கும். உங்கள் கடிதத்தில் நீங்கள் குறிப்பிட்டிருந்தது போல ''முதுகெலும்பு முறிந்து'' ''உசார் இன்றி'' ''உடலாலும்'' உள்ளத்தாலும் மெலிந்து கிடக்கும் இவர்களுக்கு நீங்கள் ஏன் அஞ்சவேண்டும். கடிதத்தின் இறுதியில் இருந்த 'பேச்சுப்பேச்சென்னும் பெரும் பூனை வந்தக்கால் கீச்சுக் கீச்சென்னும் கிளி" என்ற ஔவையின் வரிகளும் தங்களது அச்சுறுத்தும் மனப்பாங்கையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

''நாகரிக உலகம் நடுங்கிப்போகும்'' எத்தனையோ விடயங்கள் நாளும் பொழுதும் நடந்தேறும் நாட்டில் இருந்து கொண்டு, எப்பொழுதோ குழப்பியதாகச் சொல்லப்பட்ட இலக்கியக் கூட்டத்தையே இன்னும் நினைவில் வைத்துள்ளீர்கள். கருத்துக் களத்தில் கைகலப்புக்கள் ஏற்புடையதல்ல, அதை நாமும் விரும்பவில்லை. ஆனாலும் நக்கீரனுக் கெதிராக சங்கரனார் நெற்றிக் கண்ணைக் காட்டிய சங்க காலத்திலிருந்து, சமணர்களின் கழுவேற்றத்தைப் பாடிய பக்தி இலக்கிய காலம் வரை அதன் பின்னர் இன்றுவரை இதுபோன்ற 'நாகரிகச்' செயல்கள் நடந்தே வருகின்றன.

வல்லமையுள்ளவர்களின் ஒடுக்குதலுக் கெதிராக வல்லமையற்றோர் 'குழப்பம்' செய்வதும், வல்லமையுள்ளோர் அதனை ஒடுக்க முனைவதும் தான் வரலாறு, இதில் பழைய பண்டிதராகிய நீங்கள் யார் பக்கம் நிற்கிறீர்கள். பழைய நாகரிகத்தை, கலை பண்பாடு என்ற போர்வையில், காலத்துக்கேற்ற மாற்றங்கள் ஏதுமின்றி அப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படியே பேணிப் பாதுகாப்பதின் மூலம் தமது அதிகாரத்தைத் தொடர்ந்தும் நிலைநிறுத்த விரும்பும் பலவான்களின் பக்கமா அல்லது தமது உரிமை வாழ்விற்காக விழிப்புணர்வு பெற்ற ஒரு புதிய நாகரிகத்தை தோற்றுவிக்க எண்ணும் பலயீனர்களின் பக்கமா? பழைய குடை, கொடி, ஆலவட்டங்களை அப்படியே கை ஏந்தி பலவான்கள் பக்கம் நீங்கள் நின்றால் உங்களுக்குப் பயப்பட வேண்டியவர்கள் நாங்கள் தான்

இருந்தாலும் உங்கள்மேல் நாங்கள் கொண்டுள்ள மதிப்பு பயங் கலந்த மதிப்பல்ல. எல்லோரும் நல்லவர்களே என்று எண்ணும் ஒரு பாமரனின் உயர்ந்த மதிப்பு. இதற்கு அளவை வேறுபாடுகள் இல்லை. மேலும் பழைய பண்டிதர்களாகிய உங்களைப் போன்றவர்கள், கலைபண்பாட்டின் ஆழ அகலங்களை நன்றாக ஆய்ந்தறிந்தவர்கள். 'பல்லாயிரம் ஆண்டுப் பழைய சுமைகளை' காலம் காலமாக காவிக் காவி முதுகொடிந்து போகும் மக்களுக்கு, பழைய மூட்டைகளை இறக்கி அவிழ்த்து ''வேண்டாத குப்பை விலக்கி மணி பொறுக்கி, சுமை குறைத்து ''மக்களின் வாழ்க்கைப் பயணத்தை இலகுவாக்க, உங்களைப் போன்றவர்களும் உதவக்கூடும் என்று எதிர்பார்ப்பும் நட்பும், மதிப்பும் என்றும் மாறாததாகவே இருக்கும்.

பழைய பண்புகளாக இருந்தாலும் பழமையெனும் மிகப்பலமான வேரில் காலூன்றியல்லவா நீங்கள் நிற்கின்றீர்கள். பல்லாயிரம் ஆண்டுகளாக உழைக்கும் மக்களை அறியாமையில் ஆழ்த்தி ஏமாற்றி ஆள்பவர்களுக்கு அடிபணிய வைக்கும் செயலை ஆயுதமின்றியே இலகுபடுத்த உதவும் அரும்பணியை ஆற்றும் மத, கலை பண்பாட்டின் காவலர்களாக அல்லவா நீங்கள் நிற்கிறீர்கள். நல்ல இலக்கியக்காரன் கூட்டம் போட்டால் நாற்பது பேர் கூடமாட்டார்கள். பழமையின் பேரால நாடே எங்கும் கூடுகிறதல்லவா?

இன்னும் சற்று விரிவாக நோக்கினால் எமது பெண்களின் மண வாழ்வுக்கு 'தடையாக உறுக்கும் செவ்வாய்க்கிரகத்தில்' விண்கலம் இறக்கி ஆய்வுசெய்யும் அமெரிக்கா — இன்றைய உலகின் சட்டாம்பிள்ளையும் உங்கள் பக்கம்தான். வியட்னாமில் ஏற்பட்ட சீர்திருத்தங்களின் பின்னும் பௌத்த பிக்குகளுக்கு வழங்கப்பட்ட உரிமை போதாதென்றும், திபெத்தில் தலாய்லாமாவுக்கு மீண்டும் முடிசூட வேண்டுமென்றும் கோரும் அமெரிக்கா இலங்கை, இந்தியா, போன்ற நாடுகளின் பலவேறு மத நிறுவனங்களுக்கும் நிதியுதவி அளித்துதனது ஆதிக்க நலன்களுக்கு உறுதுணையாக்க முயல்கிறது

உலகை ஏமாற்றி ஒடுக்க நினைப்பவர்களுக்கு புதுமை, பழமை விஞ்ஞானம், மூடநம்பிக்கை என்ற வேறுபாடுகள் கிடையாது. தமது ஆதிக்கத்தை காப்பதற்கு எந்த அடிப்படை வாதத்தையும் அணைத்துக் கொள்வார்கள். இவற்றிலிருந்து பழமையின் தவறான பயன்பாடு எவர் கையை பலப்படுத்துகிறது என்பது வெளிப்படுகிறதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே'' என்று அரசர்கள், பிரபுக்கள், வணிகர்கள் அவர் வழிவந்த இன்றைய கனதனவான்களின் ''அறத்தையும் பெருமையையும் பேசுவதே இலக்கியம்'' என்று என்னும் உங்களுக்கு வள்ளுவன் கம்பன் இளங்கோ வரிசையில் இன்றை? பல்கலைக்கழகப் பாடமாக, இலங்கையர்கோன், டானியலின் எழுத்துக்களை வைத்தமை ஏற்புடையதல்லத்தான். பழைய பண்டிதராகிய நீங்கள் பாரதி கூறியது போன்று ''காலத்துக் கேற்ற நயங்கள் குறைவு படாமல்'' காலத்திற்கேற்ப ஒரு காவியத்தை ஈழத்திலிருந்து படைத்தளித்து அந்த வரிசைக் கேற்ற தகுதியை பாதுகாத்திருக்கலாமே. பழைய காப்பியங்களையே ஏன் இன்னும் அப்படியே உருப்போட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

மொழித் தகுதியும் இலக்கண இலக்கியங்களையும் முற்று முழுதாக கற்றுத்தேற நேர மற்று அன்றாட வயிற்றுப் பிரச்சனைகளுடன் அல்லற்படும் நாம் எதிர் நோக்கும் இன்னல்கள் ஒடுக்கு முறைகளிலிருந்து விடுபடத் துடிக்கிறோம். மக்களின் அதிகாரத்தைப் பெற்றோ எல்லோருக்கும் அவர்களது தலைகளில் 'சம்பல்' அரைப்பதால் இவர்களது விழிப்பினால் தான் எல்லா விடுதலையும் சாத்தியமாகுமென்று எண்ணுகிறோம். அதற்கு நவீன இலக்கியத்தால் தான் சிறிதளவாவது பங்களிக்க முடியும் என நம்புகிறோம்.

''உலகத் தரம் இந்தியத் தரத்திற்கு ஒப்பாக'' என்று நீங்கள் கூறுவதெல்லாம் இரண்டாம் பட்சமானவை. முதலில் ஈழத்து இலக்கியம் ஈழத்து மக்களிடம் சென்றடைய வேண்டும் இத்தேவையில் இருந்தே தரங்களும் உயர்த்தப் படவேண்டும். ஏழு கோடி மக்கள் வாழும் தமிழ் நாட்டுச் சூழலுக்கும், முப்பது லட்சம் தமிழர்கள் வாழும் ஈழத்து இலக்கியச் சூழலுக்கும் இடையே சில வாய்ப்புக்களும் வசதியீனங்களும் உண்டு. புதுமைப் பித்தனையும், ஜெயகாந்தனையும், விட வேறுபட்ட வகையில் தலித் இலக்கிய முன்னோடியாக'' டானியலை ஈழத்து இலக்கியச் சூழல் உருவாக்கியுள்ளது. தங்களது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது போன்று. நம்பிக்கை இழந்தவர்களாக நாம் இல்லை. நல்ல பல எழுத்தாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் எம்மிடையே உள்ளனர். புதிய அனுபவங்களுக்கூடாக வெளிவரும் இளைய தலைமுறையினரின் இலக்கியப்பிரவேசம் கூட நம்பிக்கை தருவதாகவே உள்ளது.

நவீன இலக்கியம் என்பது காலத்தின் தேவை. இது எவரது விருப்பத்தில் இருந்தும் எழுவதல்ல இன்றைய உலகில் மனித வாழ்வையும் இருப்பையும், எதிர் நோக்கும் இன்னல்கள் ஒடுக்கு முறைக் கெதிரான விழிப்பையும் அழகியலோடு உணர அது வகை செய்ய வேண்டும். இன்றைய இலக்கியத்தின் பொருளும் சுவையும் நயப்பும் இன்றைய மக்களால் உணரப்பட வேண்டும். இன்றேல் இலக்கியம் மட்டுமல்ல கலை பண்பாடு என்பதெல்லாம் வெறும் கேலிக் கூத்தாகவே மாறி விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாட்டை நிமிர்த்திய இலட்சணம்'' பற்றி எவரோ பண்டிதர் கூறியதாக குறிப்பிட்டிருந்தீர்கள். நல்ல விடயம். ஆனால் அடுத்தவன் நிமிர்த்துவான் என்று எண்ணும் இச்சுயநல மரபு மாறவேண்டும் அல்லது நாட்டின் நன்மைக்கு உழைக்காவிட்டாலும் கேட்டுக்குத் துணைபோகவில்லை என்று நெஞ்சைத் தொட்டுச் சொல்லும் நிலை உருவாக வேண்டும். அப்போது தான் நாடு நிமிரும்.

நீங்கள் குறிப்பிட்டது போல ''நாட்டின் முதுகெலும்பை பின்னர் நிமிர்த்தலாம்'' ''நமது முதுகெலும்புகளை'' பரிசோதிக்க ஒரு களம் சுடா நாட்டின் மீளக்குடியமர்வின் போது உருவானது. வள்ளுவன்' கம்பன்' இளங்கோவுடன் வழிவழியாக வந்த எத்தனையோ பக்தர்களும்' நாயன்மார்களும் கட்டி வளர்த்த கலை- பண்பாட்டு மத பாரம்பரியங்களை அச்சொட்டாக ஆலயங்களிலும்' சேர்க்குத்தளிலும், கல்விக்கூடங்களிலும், அன்றாட வாழ்விலும் பேணிவரும் பெருமைக்குரிய மக்கள் ''படித்தவர்கள்'' ''படியாதவர்கள்'' என்ற பேதமின்றி அடுத்தவர்களின் பொருட்களை அபகரிக்கும் அவாவுடன் அலைந்தகாட்சி! இது இயல்பு வாழ்க்கையில் எங்கும் குறைவின்றிப் பல்வேறு மூனைகளிலும் வெளிப்படுவதுதான் — இது பொருளுக்காகவும் இன்பத்துக்காகவும் எவ்வித ஒழுங்கும், சுய கட்டுப்பாடுகளுமின்றி வெறிகொண்டலையும் விலங்கின உணர்வின் வெளிப்பாடா? அல்லது இதுதான் மனித யதார்த்தமா? அப்படியானால் மனித வாழ்வில் கலை, பண்பாடு, மத, உணர்வுகள் வகிக்கும் பங்கு என்ன? இவையாவும் வெறும் போலித்தனமான சடங்குகளும் சம்பிரதாயங்களும்தானா?

சட்டமும் ஒழுங்கும் அதிகாரத்தால் பேணப்படும் பொழுது அதற்கு அடங்கி நடப்பது போல் பாவனை செய்யும் மனித நடத்தைகளை வைத்து பண்பாட்டின் சிறப்பியல்புகளை எடை போட முடியுமா? இப்படி அதிகாரங்களுக்கு அடங்கியே எதையும் செய்யப் பழகிவிட்ட இவர்களால் சுதந்திரத்தின் சிறு ஒளிக் கீற்றையாவது காணமுடியுமா?

மக்களை இந்நிலைக்கு இட்டுச் சென்றவர் யார்? மக்களின் அறிவுப்புலத்தில் பெரும் ஆதிக்கத்தைச் செலுத்தும் கல்வி, மத, கலை பண்பாட்டுச் சிந்தனையால் மக்களை வழி நடத்துபவர்களுக்கு இதில் பொறுப்பில்லையா? இவ்வழிகாட்டல்களில் சிறிதும் தவறில்லையா? இன்று புதிதாக கலை இலக்கியம் உள்ளிட்ட அனைத்துமே நுகர் பொருட் கலாசார ஆதிக்கத்துக்கு உட்பட்டுக் கொண்டிருக்கும் நமது சூழலில் வேண்டாத சர்ச்சைகளுக்கு விடை கொடுத்து ஆரோக்கியமான வழிகளில் நாம் சிந்திக்கக் கூடாதா? எமது பண்பாட்டின் குறைகளைப் போக்க பழைய பண்டிதராகிய நீங்களும் உதவக்கூடாதா!

''சுயைக் கருடநிலை யேற்றுவீர் — எம்மை
என்றும் துயரமின்றி வாழ்த்துவீர்'' — பாரதி

இப்படிக்கு
பாமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாருடைய கலைகள்?
# யாருடைய கடவுள்கள்

சி. சிவசேகரம்

புலம் பெயர்ந்த ஈழத்தமிழர் மத்தியில் தமது அடையாளத்தைப் பேணும் தேவை மிகவும் உணரப்படுகிறது. இந்த அடையாளம் எது என்பது பற்றிய தெளிவு குறைவாகவே உள்ளது. எனவே மொழி, கலைகள், பண்பாடு என்ற விதமாகத் தமிழ் அடையாளம் எனப்படும் ஒன்றைத் தமக்குச் சூடிக்கொள்ளப் பலர் கடுமையாக முயல்கிறார்கள். இதற்கிடையே, சைவ சமய அடையாளம் ஒன்றும் தமிழ் அடையாளமாகத் தமிழ்ச் சமுதாயத்தின் மீது சுமத்தப் படுகிறது.

யாழ்ப்பாணத்துத் தமிழ் மேட்டுக்குடிச் சமுதாயத்தின் போட்டி மனோபாவம் பிற தளங்களையும் பிரதேசங்களையும் கொஞ்சம் ஊடுருவியுள்ளது. மிகவும் அற்பத்தனமான மனப்பான்மையை வெளிப்படுத்தும் முறையில் பல விதமான சமூகச்சடங்குகளும் சொந்த நாட்டில் நடப்பதை விட ஆடம்பரமாக நடக்கின்றன. இவை பற்றிய கண்டனங்களும் கடுமையான விமர்சனங்களும் சமுதாய உணர்வுள்ளவர்களால் பல வேறு கோணங்களிலிருந்து முன்வைக்கப்பட்டுள்ளன. இக்கட்டுரையில் அவற்றை மீண்டும் எழுத அவசியமில்லை.

தமிழ் மொழியை ஒரு சடங்கு சம்பிரதாயமாகவே கருதி பயன்படுத்துகிற வசதிபடைத்த புலம்பெயர்ந்த தமிழர் தமது சுய அடையாளமாக எதைக் கொள்கின்றார்களோ தெரியாது. ஆயினும் அவர்களைச் சூழவுள்ள சமுதாயத்திற்குத் தமிழ்க்கலைகள் என்ற பேரில் பரதநாட்டியமும் கருநாடக இசையும் காண்பிக்கப்படுகின்றன. குழந்தைகள் அவற்றைக் கற்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். பெருஞ்செலவில் அரங்கேற்றங்கள் நடத்தப்படுகின்றன. இன்னொரு புறம் கோவில்களின் எண்ணிக்கை பெருகி வருகிறது. இக்கோவில்களில் வியாபார நோக்குடையவர்கள் மிகவும் பொருளீட்ட முடிகிறது. முன்பு ஈழத்துச் சைவக் கோயில்களில் இல்லாத தெய்வச் சிலைகளும் சித்திரங்களும் மேற்கின் பல கோயில்களில் குவிந்து வருகின்றன. இதுவும் போதாமல் அவதாரங்களாகத் தங்களைக் கூறிக் கொள்ளும் காவியுடைக் கள்வர்களை வழிபடும் வழக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் அதிகரித்து வருகிறது. எனவேதான், ஈழத்தமிழரது சுய அடையாளத்துக்கும் அவர்கள் தமது என்று பறைசாற்றும் கலைகட்கும் கடவுளர்க்கும் உள்ள தொடர்பு பற்றி இக் கேள்வி எழுப்புவது தகும் என நினைக்கின்றேன்.

பரதமும் கருநாடக இசையும், தமிழருக்கு உரிய கலைகள். அவை தமிழருக்கே உரிய கலைகள் அல்ல. அதிற் தென்னிந்தியாவின் தமிழரல்லாத தேசிய இனங்கட்கும் பெரும் பங்குண்டு. இக்கலைகளின் சிறப்புப் பற்றி எவருக்கும் ஐயமில்லை. ஆயினும் அவை எவ்வளவு தூரத்துக்கு எமது இன்றைய தமிழ்ச் சமுதாயத்தின் இருப்புடன் தொடர்புடையவை? திரும்பத் திரும்பப் புராண இதிகாசக் கதைகளையே இவை வழங்குகின்றன. அவற்றின் மூலம் புதிதாகவும் இன்றைய சமுதாயத்திற்குத் தொடர்புடையதாகவும் எதையாவது தருகின்றனவா என்றால், இல்லை என்றுதான் கூற வேண்டும். தமிழிசை இயக்கம் வடமொழியிலும் தெலுங்கிலும் கூறப்பட்ட பழஞ் செய்திகளைத் தமிழிற் கூறவும் இயலும் என்று நிறுவியது. தமிழ் உணர்ச்சி பற்றிய பாடல்கள் சிலவும் வந்தன. பாரதி பாடல்களில் ஆன்மீகமும் காதலும் போன்ற அக உணர்வு சார்ந்தவை சிறிது ஊக்கத்துடன் கருநாடக முறையில் இசைக்கப்படுகின்றன. இதற்கும் மேலாகச் சென்று நமது இன்றைய வாழ்க்கையை இக் கலைகளால் ஏன் சித்தரிக்கமுடியவில்லை என்பது கவனிக்க வேண்டியது.

சைவமும் தமிழும் என்ற சூத்திரம், சைவ வேளாள ஆதிக்கத்தின் மந்திரமாக இருந்து வருகிறது. தமிழுக்குப் பெருமை சேர்க்கும் அறநூலான திருக்குறளும் தலை சிறந்த காப்பியமான சிலப்பதிகாரமும் சமணச் சார்புடையன. பெருமைக்குரிய மணிமேகலை, புத்தசமயச் சார்பானது. தமிழின் மிகப் பழைய சங்க இலக்கியங்களிற் பெரும் பகுதி மதச்சார்பற்றது. சங்க நூல்கள் கூறுங் கடவுளர் நாம் இன்று வழிபடுங் கடவுளர் அல்லர். அவர்களில் முதன்மையான ஐவருள், கொற்றவை உட்பட, நால்வர் பேர் தெரியாதவாறு ஆரியக் கடவுளருள் சங்கமமாகி விட்டனர். பேரளவில் எஞ்சியுள்ள முருகனும் சங்கம் மருவிய காலத்திலேயே ஆரியப் பண்பு பெற்றாயிற்று. ஆறுமுகம், ஆறுபடை வீடு என்ற கோட்பாடுகளும் சேவற்கொடியும் மயில் வாகனமும் சங்ககால முருகனுக்கு உரியனவையல்ல. சிவன் ஆரியக்கடவுளல்ல, சிவன் முழுதாகவே தமிழ்க் கடவுள் எனக் கூறும் விதமாக, அதற்குரிய ஆதாரங்கள் பழந்தமிழ் இலக்கியத்திற் குறைவு. ஆக மிஞ்சி, ஆரிய வேதங்களின் துணையுடனேயே சிவன் தமிழரது வழிபாட்டுக்குரிய தெய்வமாக மீண்டதாகக் கருத வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமயத்தினதும் அதன் அகச் சமயக் கிளைகட்கும் உரிய அடிப்படை தமிழரது மரபு சார்ந்த வழிபாட்டு முறைகளல்ல. ஆரியச் சொல்வாக்கினாலும், குறிப்பாக, பிராமண (பார்ப்பன) மதத்தின் பெரும் பாதிப்பினாலும் உருவான மதச் சிந்தனைகளே. இந்த மதத்தையும் அதன் கிளைகளையும் பிற இந்து மதங்களையும் இந்து மெய்யியலையும் தோற்றுவித்தன, இந்து மதங்களுக்கும் அவை கூறும் வருணாசிரம (சாதிய) மனுதரும முறைகட்கும் எதிராக இந்தியத் துணைக்கண்டத்தின் மேற்கில் சமணமும் கிழக்கில் பௌத்தமும் எழுந்தன. இவற்றில் மனித சமத்துவமும் அஹிம்சையும் முக்கியமான பங்கு வகித்தன. இம் மதங்கள் தமிழகத்திலும் வேர்கொண்டு வளர்ந்தன. இவற்றின் சரிவுக்கான அரசியற் காரணங்கள் பல. இவை பற்றிய ஆய்வுகள் பல உள்ளன. அவற்றை இங்கு விவரிக்க இடமில்லை.

பௌத்தத்தினதும் சமணத்தினதும் சரிவுடன் சேர்ந்தே எழுச்சி பெற்ற சைவ வைணவச் சமய இலக்கியங்களில் ஒரு வெகுசனப் பண்பு இருந்தது. நாவுக்கரசர் தேவாரங்களும் திருத்தாண்டகங்களும் ஆண்டாளின் பாடல்களும் இவற்றிற்கு நல்ல உதாரணங்கள். ஆயினும் இந்த வெகுசனப் பண்பு நாளடைவில் ஆரிய மொழியினது ஆதிக்கத்திற்கு வழிவிட்டு ஒதுங்கியது. பிராமண — வேளாள ஆதிக்கம் தமிழில் வழிபடுவதை ஏற்கத் தவறியதற்கு அரசியல் அதிகாரம் தொடர்பான காரணங்கள் பல உண்டு.

சமஸ்கிருதத்தால் பூசிக்கப்பட்ட சைவத் தமிழ்க் கடவுளர்கட்கு அருகாக, சாதியத்தால் ஒதுக்கிவைக்கப்பட்ட மூன்றிலொரு பங்கினரான தமிழ்ச் சமூகத்தினர் சிறு தெய்வங்கள் என அழைக்கப்பட்ட பலவேறு கடவுளரைத் தமது அன்றாட மொழி மூலமே வழிபட்டு வந்தனர். இச் சிறு தெய்வங்கள் தமிழ்ச் சமூகத்திற்கே உரியவையும் ஆரியமயமாகி விட்ட சைவக் கடவுளரை விடத் தமிழ்த் தன்மையுடையவையாகவுமே இருந்தன. சைவமும் தமிழும் என்ற பேரில் சாதியச் செருக்கை ஊட்டி வளர்த்த ஆறுமுகநாவலர் சிறு தெய்வ வழிபாட்டை அழிப்பதில் மும்முரமாக நின்றதுடன், தாழ்த்தப்பட்ட தமிழர்களுக்குச் சைவக் கோயில்களில் வழிபடவும் அனுமதியை மறுத்து வந்தார் என்பது கவனிக்க வேண்டியது. இந்த மனிதர் தான் தமிழ் மக்கள் மத்தியில் சமரசத்தை வலியுறுத்திய இராமலிங்கரையும் எதிர்த்து வெள்ளைக்காரர்களது நீதிமன்றத்தில் வழக்காடியவருமாவார்.

எவ்வாறு தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட தமிழர்களது கடவுளரும் வழிபாடும் ஒதுக்கலுக்கு ஆளாயினவோ, அவ்வாறே அவர்களது கலை வடிவங்களும் புறக்கணிப்புக்கு ஆளாயின. ஒதுக்கப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களது உரிமைக்கான கிளர்ச்சிகளின் காலத்தையொட்டியே அவர் மனைற் பேணிக்காக்கப்பட்ட நாட்டார் பாடல், நாட்டார் இசை நாட்டுக்கூத்து போன்ற வடிவங்களும் புதிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன.

தமிழ் இலக்கியத்தினதும் மக்கள் கலைகளதும் வளர்ச்சியில், இஸ்லாமிய, கிறிஸ்தவ மக்களது பங்கும் நெடுங்காலமாகக் கவனிப்புக்காளாகாது இருந்து வந்துள்ளது. அண்மைய சில தசாப்தங்களில் இவை பற்றிய அக்கறை அதிகமாகி உள்ளது. ஆயினும் சைவமும் தமிழும் என்ற கோஷத்தால் சிலர் இவற்றை மூழ்கடிக்க முயல்வர் என்பது பற்றி நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்.

தமிழ்க் கலையென்று இன்று தமிழர் மார்தட்டிப் பெருமை பேசும் பரதம் இந்த நூற்றாண்டுவரை உயர் சாதியினரது போகத்திற்காகக் கீழ்மைப்படுத்தப்பட்ட தேவதாசிகளால் மட்டுமே ஆடப்பட்டுச் சதிர் என்று அழைக்கப்பட்டது. ஆட்டம், கூத்து என்ற சொற்கள் ஒழுக்கக் குறைவான நடத்தையைக் குறிக்கவே அண்மை வரை பயன்பட்டதையும் நாம் மறக்கலாகாது. இவ்வாறே பெருவாரியான தமிழ்க் கர்நாடக இசைஞர்கள் ஒடுக்கப்பட்ட ஒரு சாதிப் பிரிவினராகவே இருந்ததும் கவனிக்கத் தக்கது. இந்திய முதலாளி வர்க்க எழுச்சியும் சினிமாவின் வருகையும் கலைகளின் மீதான ஏகபோகத்தை உயர் சாதியினரிடம் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டன. சமுதாயத் தேவைகளை வலியுறுத்த இயலாத விதமாகப் 'புனிதப் படுத்தப் பட்டு' மக்களது அன்றாட வாழ்வினின்று அன்னியப்பட்டுப் போன இக் கலைகள் இன்னமும் அதே விதமாகவே பேணப்படுவது நமது கவனத்துக்குரியது.

ஒட்டு மொத்தமாகச் சொன்னால், தமிழர் வழிபடும் சைவக் கடவுள்கள் யாவுமே தமிழுக்கு அந்நியமான பண்பு மிகுந்தன. தமிழ்ச் சமுதாயத்தினுள்ளிருந்து உருவான கடவுள்களிலும் அயற் பண்புகள் இருந்தாலும் அவை தமக்குரிய சமுதாயங்களது வாழ்க்கை முறையுடன் கூடிய தொடர்பு கொண்டவை. கிறிஸ்துவ இஸ்லாமியக் கடவுட் கொள்கைகள் அயலிலிருந்து வந்தாலும், காலப் போக்கில் அம் மதங்களின் நடைமுறையில் தமிழ்த் தன்மை அதிகமாகச் சேர்ந்தே உள்ளது. சமஸ்கிருதத்தில் தமிழ்க் கடவுளர் எனப்படுவோரை வழிபடுவதை விடத், 'தமிழரல்லாத' கடவுளரைத் தமிழில் வழிபடுவதிற், கூடிய தமிழ்த்தன்மை உள்ளது என்றே தோன்றுகிறது.

தமிழரது சமுதாயத்திலிருந்து தோன்றி வளர்ந்த மக்கள் கலைகளை நிராகரித்து, மக்களிடமிருந்து அந்நியப்பட்ட இசையையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனத்தையும் தமிழரது கலைகள் என்று கொண்டாடுவதில் அர்த்தமில்லை. இந்தக் கலைகளின் மேன்மையாற் தமிழருக்கு மேன்மை இல்லை. என்று இந்தக் கலை வடிவங்கள் நமது வாழ்வு பற்றியும் நமது வருங்காலம் பற்றியும் கூறத் தொடங்குகின்றனவோ அன்று தான் அவை நமது கலைகளாக முடியும். அல்லாத பட்சத்தில் தமிழ் பெண்ணின் பரதநாட்டியமும், பலே நடனமும் ஒரே அளவு தன்மையுடையன தான். கருநாடக இசை மக்கள் இசையாக விரிவடையாத அளவில் தமிழனுடைய இசை மட்டரகமான தமிழ்ச் சினிமாப் பாட்டாகவே இருக்கும்.

தமிழருக்குரிய மரபின் செல்வங்கள் பல. அவற்றுள் 'நாகரிகமான' ஒரு பகுதியை மட்டும் எடுத்து மினுக்கி இதுவே நமது சுய அடையாளம் என்று இன்னும் எத்தனை காலம் நம்மை நாமே ஏமாற்ற முடியும்? சமகாலத் தமிழ்ச் சமூகத்தின் தேவைகட்கு முகங்கொடுக்க முடியும் நல்ல கலை வடிவங்கள் அனைத்துமே தமிழ்க்கலைகளாகக் கொண்டாடப்பட வேண்டியன. அவ்வாறு செய்யாத எவையுமே சமகாலத் தமிழருக்கு உரியன அல்ல.

அயலிலிருந்து வந்தாலோ அயற்பண்புகளை உள்வாங்கிக் கொண்டதாலோ எதுவும் நிராகரிக்கப்பட வேண்டியதில்லை. கலையாயினும் கடவுளாயினும், நமது மக்களுடன் நேரடியாக உறவு பூணுமாறும், சமுதாய மேம்பாட்டுக்கு உதவாவிட்டாலும், தடையாகவாவது இல்லாதவாறும் உறுதிப்படுத்த நமக்கு முடியாதா? அயற் தன்மை என்பது ஒன்றன் தோற்றுவாயில் இல்லை, அதன் சமகாலச் செயற்பாட்டிலேயே உள்ளது என்பதை நாம் கருத்திற் கொள்வது நன்று.

---

## இயற்கையும் நாமும்

""நமது ஒவ்வொரு அடி முன்னேற்றத்திலும் எந்த வகையிலும் ஒரு நாட்டை வென்று அடிமைப் படுத்தியவன் அந்த நாட்டு மக்களை ஆள்வது போல் நாம் இயற்கையை அடக்கி ஆளவில்லை என்றும் நினைக்க வேண்டும். சதையும், இரத்தமும் மூளையும் கொண்ட நாம் இயற்கையையே சார்ந்தவர்கள் என்றும், அதற்கே உரியவர்கள் என்றும் அதனூடே வாழ்கிறவர்கள் என்றும் எண்ண வேண்டும். அதை நாம் வசப்படுத்தி ஆள்வதெல்லாம், மணமீதுள்ள மற்றப் பிராணிகளைவிட நமக்கொரு அனுகூலம் இருக்கிறது என்றும், அதுதான் இயற்கையின் சட்ட நியதிகளைத் தெரிந்துகொள்ளும் நம் திறமையும் அவற்றைத் தவறில்லாமல் உபயோகிக்கும் ஆற்றல் என்பதையும் எப்போதும் நாம் நினைவிற் கொள்ள வேண்டும்.

ஏங்கெல்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாரைகளாய்...

✲ நயினை மகன்

அமைதி
பட்டுப் போய்
படுத்து விட்ட
அபலத் தேசம்.

பூவும் பிஞ்சுமாய்
உதிரும் உயிர்களின்
அகால மரணிப்புக்கள்.

பூமியில்
வாழ்வதா? சாவதா?
என,
ஏங்கி ஏங்கி
உருகும் மெழுகு மனங்கள்.

எதிர்காலத்தில்
இளைப்பாற
இடமேது —என
எண்ணும் இன்றைய
பறவைகள்.

கூடு
கலைந்த குருவிகளாய்
கூக்குரலிட்டு,
நாடு நாடாய்
அலையும் நாரைகளாய்
நம் சந்ததிகள்.

"அகதி" என்ற
தேசிய முத்திரை
குத்தப்பட்டு
அன்றாடம்
ஆதாரவை தேடும்
குழந்தைகள்.

இன்று
சிந்தக் கண்ணீர்
இன்றி
விம்மும் போது
விழும் இரத்தத்துளிகளால்
விடியலைத் தேடும்
நெஞ்சங்கள். ✶





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாட்ஷா

## ஒரு நாய்க் கதை

— சிவபெருமான்

அந்த வீசர் நாய் சிறுமியை உருட்டி உருட்டிக் கடித்தது. சிறுமி வீரிட்டு கத்தினாள். ஆட்களும் வாகனங்களும் நெருக்கமாக போகும் பிரதான வீதியில் நின்ற எல்லோரும் பீதியுடன் நின்றனர்; செய்வதறியாது திகைத்தனர். அதில் சயிக்கிளில் வந்து கொண்டிருந்த ஒருவன் மிக வேகமாக சயிக்கிளை விட்டு இறங்கி, மூன்றில் ஒப்பாகத்தால் மிக விசையுடன் நாய்க்கு அடித்தான். அடியால் தன்னுண்ட திசைக்கே நாய் ஒரு போக்காக ஓடியது. வெள்ளை நாய். நெற்றியில் ஒரு கறுப்பு கட்டி இருந்தது. நாயின் வெள்ளை நிறம் புழுதி கலந்து நிறம் மாறி இருந்தது.

சிறுமிக்கு ஆவன செய்தனர்.

நாய்க்கு கற்களால் எறிந்தனர். அதை எவற்றையும் நாய் பொருட்படுத்தவில்லை; அது. தூரத்தே இன்னுமொரு ஆளையும் கடித்து விட்டு சென்றது. சிலர் நாயை துரத்திச் சென்றனர்.

இச்சம்பவம் இத்துடன் நிற்க —

ஒரு நாள் காலைப் பொழுது யாழ்ப்பாண நகரத்தின் முட்டாஸ் கடைச் சந்திப் பகுதியில் அநாதரவாக நின்ற ஒரு நாய் அங்கு சமான்கள் வாங்கிக் கொண்டு வந்த ஒரு மனிசிக்கு பின்னால் வந்து வாலை ஆட்டியது. மனிசி நாயை கண்டு பயந்து 'அடீக்' என கலைத்தாள். நாய் மேலும் வாலை ஆட்டியது. மனிசி மேலும் பய பிராந்தியால் கடவுளின் பெயரை (வையிரவர்) உச்சரித்தாள். நாயோ மனிசியின் உச்சரிப்பை மாறி விளங்கிக் கொண்டது தன்னை மனிசி அழைக்கிறாள் என நாய் நினைத்தது. (நாய்க் குணத்தை மனநிலையை, மனிதர்கள் புரிவது பிரச்சனைக்குரிய விடயமாகும்.)

மனிசி நடந்தாள் — நாயும் நடந்தது.
மனிசி வேகமாக நடந்தாள்
நாயும் வேகமாக நடந்தது.
மனிசி ''அடீக்'' என்றாள்
— சற்று தள்ளி நின்று நாய் வாலை ஆட்டியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேகத்தோடு போய் மனிசி ஒரு கடைக்குள் நுழைந்தாள். நாய்ப்பிரச்சனை வராது என எண்ணி நிம்மதி கொண்டாள். நீண்ட நேரத்தின் பின் பொருட்களை வாங்கியபடி கடைக்கு வெளியே வந்தாள். மனிக்கு நாய் நினைப்பே இருக்கவில்லை. ஆனா வாசலில் நாய் மனிசிக்காக காத்திருந்தது.

வேகமாக நடக்க நாயும் வேகமாக நடந்தது. யாராவது செய்வினை, சூனியத்தை நாயின் மூலம் தனக்கு ஏவி விட்டு விட்டனரோ என நினைத்து அச்சமுற்றாள். வீதியால் போன ஒருவரிடம், தன்னை ஒரு நாய் பின் தொடர்கிறது என்றும் அதனை கலைத்து விடும் படியும் கூறினாள். நாய் கலைக்கப்பட்டது.

மனிசி ஒரு மாதிரியாக வீடு வந்து சேர்ந்தாள். நாயின் பின் தொடர்பு காரணமாக கடையில் வாங்கவேண்டிய பொருட்களை கூட மறந்து போயிருந்தாள். சிந்தனையில் நாயின் நினைவு கலைந்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

படலையை திறந்தபடி எதேச்சையாக திரும்பி பார்த்தாள். நாய் நின்றது. வாலை ஆட்டியது. மனிசிக்கு 'திக்' என்றது. நாய் சிரித்தது— காதுகள் கீழ்ப்படிந்து, கண்கள் சற்று சுருங்கி சிரித்தது. குழைதல் புரிந்தது. (நாய்கள் தங்களுக்குரிய விதத்தில் சிரிக்கின்றன) நாய் குந்தியது. அதன் வால் நிலத்தில் 'வெடுக் வெடுக் கென' ஆடி புழுதி பறந்தது.

அந்த நாய் மனிசிக்கு ஆள் மாதிரி தோற்றமளித்தது. மனிசி பழைய ஜென்மத்தின் எதாவது தொடர்போ? என எண்ணினாள். நாயை நாயின் நிலை நின்று நோக்காது தனது நிலையில் நின்று நோக்கினாள். நாயின் முகத்தில் தெரிந்த நல்ல அமைதி மனிசிக்கோ பயத்தை அதிகரிக்கச் செய்தது.

வீட்டினுள் நிற்கும் தனது ஒரே ஒரு மகனை அழைத்தாள் மகன் காரன் வந்தான். அவன் ஒரு ஏ. எல் மாணவன். மனிசி மகன்காரனுக்கு நாயின் பின் தொடர்பை விபரித்தாள்.

மகன்காரன் அந்த நாயை பார்த்தான்.

கறுப்பு நாய் குந்தி இருந்தது நெஞ்சில் வெள்ளை நிற சுட்டியுண்டு: நாயின் ஒரு பக்க செவி எதாவது ஒரு காரணத்தால் சேதமுற்று பின் மாறிய தன்மையால் சற்று கோணலாக இருந்தது. கழுத்தில் பச்சை நிற நைலோன் கயிற்று வளையம் இருந்தது. அதன் இருப்புக் காரணமாக நலமடிக்கப் பட்டு இருந்தது தெரிந்தது. அந்த நாயின் தோற்றப்படி அது இளம் நாயுமல்ல— அதேவேளை ஒரு கிழட்டு நாயுமல்ல;





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயின் தோற்றம் மகன் காரனை அச்சுறுத்தவில்லை. எனினும் தன் தாயின் கோரிக்கைப் பிரகாரம் அந்த நாயைக் கலைத்தான்.

''அடிச் —என்றதும் நாய் வாலை ஆட்டியது (அந்த நாய் வால் நிமிர்த்த முடியாத சுருள் கொண்டதல்ல: ஓரளவு நீளமான, பாம்பு போல் நெளியும் வால்)

''அடிக்.. ஓடு''—மீண்டும் வாலை ஆட்டியது.

''அம்மா...நாய் வாலை ஆட்டுது. நல்ல நாய் போல இருக்கு. நிக்கட்டும்.''

மனிசி, மகன் சொன்னதை மறுக்கவில்லை: ஏனெனில் மகன் தகப்பனை இழந்தவன்; மனிசியோ கணவனை இழந்தவள்.

''உஞ்சு''— மகன் காரன்

குந்தியிருந்த நாய் எழுந்து வாலாட்ட அதன் வாலாட்ட விசையால், அதன் பின் புறமும் ஆடியது.

நாய் சிரித்தது.

''அம்மா... ஆரோ வளர்த்த நல்ல நாயிது.''—மகன்

''உது என்ன நாயோ தெரியா? ம்ம்...''—தாய்

''அம்மா... பாண் வைக்கட்டே?''

''வா... வந்து எடுத்து வை'' தாய் போய் விட்டாள்.

நாய் மகன் காரனைக் கவனியாது, அவனைத் தாண்டி, மனிசி போன வீட்டின் வாசற் பக்கம் முனகியபடி போய், வாசற்படியில் ஏறியது.

செய்வதறியாது பயந்த மகன்காரன் —

''அம்மோய் ! அம்மோய்! நாய் வீட்டுக்க வருகுது!!''
மனிசி பயந்தடித்து வீட்டிற்குள் நின்றபடியே கத்தினாள் -

''அடிக் .. அடீட்.. அடிக் ''
நாய் வாசலில் நின்று கீழே பாய்ந்து முற்ற ஓரத்தில் நின்ற தென்னை மரத்தடியில் போய் நின்று, திரும்பி பார்த்தது.

மகன்காரன் தூரத்தில் நின்று அதட்டினான —

''ஏய்! அடிப்பன்...'' அதட்டலை கவனியாது மனிசி எங்கே என்று நாய் எட்டி எட்டி பார்த்து முனகியது.

சற்று முன் நடந்து வாசலைப் பார்த்தபடி குந்தியது.
மனிசி, வாசலில் எட்டி பார்த்தாள்.

நாய் எழுந்து நின்று வாலை ஆட்டியது. மனிசி தன் மீது இரக்கப்படுகிறாள் என உணர்ந்த நாய், மனிசிக்கு அருகில் வந்து நின்று வாலை ஆட்டியது.
மகன் காரனுக்கு நாய் மீது நம்பிக்கை ஏற்பட்டது.

''அம்மா... பாத்தியோ? நல்ல நாயம்மா.. நீளக்கால், ஒட்டின வயிறு, கிண்ணி விரல் .. சரி

 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான வேட்டை நாயம்மா...''

பாண் துண்டை எடுத்து வந்து நாய்க்கு காட்டினான். நாய் பாணைக் கண்டதும் பரபரப்பின்றி நின்றது ஆனால் உமிழ் நீர் சுரந்தது. மரப்பலகைத் துண்டொன்றை எடுத்து துடைத்து விட்டு அதில் பாண் துண்டுகளை நுள்ளிப் போட்டான். நுள்ளி, நுள்ளிப் போடும் போதே பாண்துண்டுகளை உண்ண எத்தனிக்கவில்லை: நுள்ளிப் போட்டு முடிந்த பின்னரே அதில் வாய் வைத்தது. இறுதியில் இரண்டு துண்டு மிச்சமும் விட்டது (ஒரு வகை நாகரீகமோ தெரியாது)

மகன் காரன் நாய்க்கு பெயர் வைத்தான்— 'பாட்ஷா.'

''பாட்ஷா, பாட்ஷா, பாட்ஷா இஞ்ச வா...'' நாய் வந்தது.

பாட்ஷா வந்தது. வாலசைவும் சிரிப்பும்.
(தனக்கு சூட்டப்பட்ட பெயர் கேட்டு நாய் வரவில்லை: அது மகன் காரனின் அழைக்கும் தொனி, பாவனை காரணமாகவே வந்தது எனலாம்)

''பாட்ஷா''— வாலை ஆட்டியது; சிரித்தது.

பாட்ஷா போய் மல்லிகைப் பந்தலின் கீழ் குந்தியது.

படுக்கவில்லை; காரணம் புதிய சூழல் புலப்படவில்லை:

கோயிலிற்கு பூப்பறிக்கும் ஒருவர் வந்தார். பாட்ஷாவை கண்டார். அவருக்கு அச்சம் தோன்றியது. மகன் காரன் சிரித்தான். நாயின் சரிதையைச் சொன்னான். அவர் பேசினார். பாட்ஷாவை வீட்டை விட்டு கலைக்குமாறு பணிந்தார். ஒரு பழம் சிரட்டையை எடுத்து பாட்ஷா மீது எறிந்தார். பாட்ஷா திடுக்குற்று எழுந்து சிறிது தூரம் ஓடிச்சென்று நின்று பார்த்தது. வாலை ஆட்டியது, சிரித்தது. நாயால் வரும் தீங்குகளை அவர் எடுத்துக் கூறினார். மனிசி வீட்டிற்கு வெளியே வந்தாள்.

பாட்ஷா மனிசியைக் கண்டதும் மெது மெதுவாக நசிந்து மசிந்து அவளருகே வர எத்தனித்தது.

மகன் காரன்- ''பாட்ஷா. வா வா, அவரினி எறிய மாட்டார். வா... அதொண்டுமில்லை வா...'' அவரானவர் சொல்லு மட்டும் சொல்லி விட்டு, பேசாது பூப்பறித்து சென்று விட்டார்.

பாட்ஷா பற்றி மகன் காரனுக்கு பலவித எண்ணங்கள் ஓட ஆரம்பித்தன. பாட்ஷா யார்? பாட்ஷா ஏன் தன் தாய்க்கு பின்னால் வந்தது? பாட்ஷாவின் வரலாற்றுப்பின்புலம் என்ன?

பாட்ஷாவை யாரோ கட்டி வளர்த்திருக்க வேண்டும். அதன் பிரத்தியேக தன்மைகள், பழக்க வழக்கங் என்பன அவற்றை துலாம்பரப்படுத்தின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெயர்வின் போது பாட்ஷா என்ன செய்தது? பாட்ஷாவிற்கு முதுகப்புறத்தில் ஒரு கட்டைச் சொறி தொடங்கி இருந்தது.

இராணுவக் காவல் அரண்களில் நின்று காவல் புரியும் தமிழ் பகுதி வாழ் நாய்களுக்கு கட்டை இல்லாதிருப்பது ஈண்டு குறிப்பிடற்பாலது. காவலரண்களில் நின்ற நாய்க்குவியலில் ஒன்றாக பாட்ஷாவைக் கருத முடியாது. காவலரண் நாய்களுக்கு அன்பு, பாதுகாப்பு, அனுசரணை என்பவற்றோடு வீரப்பழக்க வழக்கமும் உடையவை; அவைக்கு நுண்ணறிவும், அனுபவமும், சந்தர்ப்பத்திற்கமைய முடிவெடுக்கும் விவேகம் என்பன உடையவை. ஆனால் அப்படியான ஒரு நாயாக பாட்ஷாவை கருதமுடியாது. அப்படியான ஒரு நாய் அருகிலுள்ள ஒரு காவலரணில் தன்னை இணைத்துக் கொள்வதில் பின் நிற்காது. அத்தோடு அதில் இன்னோர் நன்மை என்னவெனில் நகரசபையின் நாய்களை பிடித்து அழிக்கும் 'திட்டத்திற்கு' நாய் பிடிகாரரை, காவலரண் நாய்களை பிடிக்காது இராணுவத்தினர் தடுத்து விடுவர். அதனால் அங்குள்ள நாய்க் கூட்டத்திற்கு பாதுகாப்பும் உண்டு.

நாய்களுக்கு மோப்ப சக்தி அதிகம். சிலர் தங்களுக்கு பிடிக்காத பெரிய நாய்களை தூரத்தில் கொண்டு போய் விட்டாலும் அவைகள், மணத்து பிடித்து மீண்டும் தன் எஜமானர்களிடம் வந்தது உண்டு. அப்போ பாட்ஷா? சில வேளை பாட்ஷாவிற்கு மோப்பத்திறன் குறைவாக இருக்கக் கூடும்.

பாட்ஷாவின் தோற்றத்திலும் குணத்திலும் பார்க்கும் போது அதன் எஜமானர்களது குடும்ப பொருளாதார நிலையின் தங்கியே இருக்கும் எனலாம்.

நாய்களின் குணத்தை வைத்து அவைகளின் குடும்பஸ்தர்களின் மனோநிலையை ஓரளவு புரியலாம். சில நாய்கள் குரைக்கும் கடிக்காது சில நாய்கள் கடிக்கும் குரைக்காது. சில நாய்கள் கடிக்காது குரைக்காது. ஆனால் மிருகங்களை துரத்தும், பிடிக்கும்.

சில நாய்கள் தெரிவு செய்து குரைக்கும் சந்தர்ப்பத்திற்கு அமைய கடிக்கும்.

சில நாய்கள் பல தடவை கவனித்து வைத்து விட்டு காத்திருந்து ஒரு நாள் வாய் வைக்கும் பழிக்கு பழி வாங்கும். சில நாய்கள் எஜமானர்கள் இறந்த போது சுடலை சென்று அழுது கூட இருக்கின்றன. சில நாய்கள் நன்றியே இல்லாமல் நடந்திருக்கின்றன.......

ஆனால் பாட்ஷாவின் குண அடிப்படையில் அதன் குடும்ப மனோநிலை மென்மையாகவே இருக்கவேண்டும். மென்மையான குடும்பத்தவர் ஏன் பாட்ஷாவை கைவிட்டனர்! உலகங்களைக் கடந்து பாட்ஷா தனித்து விடப்பட்டுள்ளது என்பது உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நாய்களின் கண்களில் கள்ளத்தனம் மிகுந்து இருக்கும். பாட்ஷாவின் கண்கள் அப்பாவித்தனத்துடன் கூடிய செம்மஞ்சள் நிறமுடையது.

பாட்ஷா சிரித்தது. பாட்ஷாவை மகன்காரன் அழைத்தான். அது நடந்து வந்து அவனுக்கு முன்னால் சற்றுதள்ளி நின்றது. மதியம் உணவு உண்டது. மாலை வந்தது. பாட்ஷா ஒரு ஒதுக்கு புறமாக மலம் கழித்தது. (சில நாய்கள் ஆட்களின் மலத்தை உண்பதுண்டு, பாட்ஷா அப்படியல்ல)

மனிசி மண்ணெண்ணை விளக்கை ஏற்ற, அயல் வீடுகளில் மின்சார விளக்குகள் எரிய ஆரம்பித்தன. மனிதர்கள் முடங்கினர். பாட்ஷா புதிய சூழலை விளங்கியதால் அந்தரப்பட்டு அங்கும் இங்கும் முனகித் திரிந்தது.

மகன்காரன் படுத்திருந்தபடி தாயிடம் கூறினான்-

''அம்மா... இந்த நாயின் வீட்டுக்கார மனிசி சரியாய் உன்னைப் போல இருந்திருக்கு அது தான் உனக்கு பின்னால வந்திச்சோ?''

தாய் கூறினாள்— ''ஏன் நீ நாயைப் பற்றி யோசிக்கிறாய், படிப்பைப் பற்றி யோசியன்..''

இருளில் நேரம் நீண்டது. நித்திரையாகினர். பாட்ஷா அங்கும் இங்கும் அலைந்து முனகியது. அது ஏன் முனகியது? பாட்ஷாவுக்கு புதிய சூழலில் பழைய நினைவுகள் வந்திருக்கக் கூடும். வேறு ஏதற்கு முனக வேண்டும்.

(மனிதர்கள் தமது வாழ்க்கை அனுபவங்களை வைத்து நாய்களின் மனோ நிலையையும், அனுபவங்களையும், உணர்ச்சி போக்குகளையும் ஒப்பிட்டு முடிவுகளுக்கு வந்தால் எவ்வளவு தூரம் சரியானது?)

மனிசி, பாட்ஷாவின் முனகல் கேட்டு கண்விழித்தாள் பாட்ஷா முனகியது. மனிசி உறுக்கினாள் முனகல் நின்றது. சிறிது நேரத்தின் பின் மீண்டும் முனகியது. மகன்காரன் கண் விழித்தான்; முனகல் கேட்டது. படுத்திருந்தபடியே தலையைத் தூக்கி, மூடப்படாத வீட்டு வாசற் படியில் குந்தியிருந்து முனகும் பாட்ஷாவை பார்க்க அவனுக்கு பாவமாக இருந்தது.

வீட்டு ஓரத்தில் இரண்டு எலிகள் சரசரத்து, கிச்கிட்டு ஓடுவது பாட்ஷாவிற்கு புலப்பட்டதும், முனகலை விடுத்து எழுந்து, இரண்டு அடி நடந்து, உசாரடைந்தது. இருளில் நிழல் போல நிற்கும் பாட்ஷா வீட்டிற்குள் நுழைய உன்னியது; ஆனால் நுழையவில்லை. ஏன? அது தான் பாட்ஷாவின் பழக்க வழக்கம். எலிச்சத்தம் நிற்க மறுபடியும் பாட்ஷா வாசலில் குந்தியது. (சில நாய்கள் காவல் காக்கின்றன. சில நாய்களை காவல் காக்கின்றனர்) பாட்ஷா படுத்துக் கொண்டது. காற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீசியது. வாசலில் படுத்திருக்கும் பாட்ஷாவின் உடலில் பட்டு, மகன்காரனுக்கு சுவாசத்தில் கலக்கும் போது நாயின் துர் நாற்றம் வீசியது. பாட்ஷாவை கலைக்க முயன்றான் ஆனால் கலைக்கவில்லை. காரணம் பாட்ஷா வாசலில் படுத்தால் வீட்டிற்குள் புழுப்பூச்சி ஒன்றும் நுழையாது என்பதால்.

மனிசியின் வீட்டிற்கு வருவோர் போவோர் பல வித அபிப்பிராயங்களை கூறினர். சில நேரம் பாட்ஷாவிற்கு விசர் வரும் எனப் பயந்து, அதற்கு விசர் எதிர்ப்பு ஊசி போடுவதற்கு மகனிடம் கூறிக்கூறியே நாட்கள் நகர்ந்தன.

பாட்ஷா அந்த வீட்டில் அன்னியோன்னியமாக சங்கமமானது. மகன்காரன் பாட்ஷாவில் நல்ல அன்பு. ஆனால் அதை அருகில் வரவோ, நக்கவோ விடுவதில்லை. சில நேரம் பாட்ஷா சிரித்தபடி செல்லப்பாவனையோடு அருகில் வந்தால் அதன் தலையை வருடி விடுவான்; செவியை கீழிறக்கி கண்ணை மூடும். பின் அவன் போய் தனது கைகளை கழுவுவான். ஒரு நாள் கனவில் கூட பாட்ஷாவைக் கண்டிருக்கிறான்.

பாட்ஷா வந்து ஒரு மாதமாகியும் — ஒரு நாள்த்தானும் ஒரு முறையேனும் குரைக்கவில்லை; பாட்ஷாவின் மிக பெரிய பலவீனமாக இது கருதப்பட்டது.

பாட்ஷாவிற்கு வாய் கட்டம் பட்டுள்ளது (மந்திரத்தால்) என நீர் ஒதி தெளிக்கப்பட்டது பயனில்லை; தோல்வியில் முடிந்தது. இரவுச்சாப்பாடு விளக்குமாத்தில் வைக்கப்பட்டது — பயனில்லை; தோல்வியில் முடிந்தது. எனினும் பாட்ஷாவிலுள்ள ஏதோ ஒன்று அவர்களை கவர்ந்திருந்தது.

ஒரு நாள் இரவு ஒரு பெரிய நட்டுவக்காலி பாட்ஷாவிற்கு அருகில் நின்றது; நடந்தது. கூரான வால், கருமை நிறம். ஆனால் பாட்ஷா அதைக் கண்டு பிடிக்கவில்லை; கடைசியில் மகன்தான் அதனைக் கண்டு அடித்தான். இன்னுமொருநாள் மனிசியின் கறிச் சட்டியை, பாட்ஷா சாப்பிடும் பலகைத் துண்டிற்கு சற்று தள்ளி மறந்து போய் வைத்துவிட்டாள், பாட்ஷா அதனை நக்கிவிட்டது. (நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன) நக்கியதால் மனிசிக்கு சரியான கோபம் இவற்றை விட பாட்ஷா பெரிய தவறுகள் செய்ததற்கான தகவல்கள் இல்லை எனலாம்.

பாட்ஷாவிற்கு சில நாட்களாக இரவில் இருமல் பிடித்து இருந்தது. (இருமல் அல்லது குக்கல்) இருமி கடைசியில் ஓங்காளிக்கும். ஆனால் சத்தி எடுக்காது. அதனால் பாட்ஷா இரவில் தூக்கமின்றி சிரமப்பட்டது. மகன்காரன் யாரிடமோ ஆலோசனை பெற்று பூச்சிக்குளிசையும் கூட்டுக்குளிசையும் நின் மீனுடன் கலந்த சாப்பாட்டோடு வைத்தான். இருமல் நின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்ஷா நிம்மதியாக நித்திரை கொண்டது. பாட்ஷா பகலில் வீதி ஓரத்திலும் இரவில் வீட்டு வாசலிலும் படுப்பது அதன் நாய்ப்பழக்கமாக இருந்தது. பின்னர் அதுவே அதன் அழிவிற்கும் காரணமாக இருந்தது.

ஒரு நாள் மனிசியின் வீட்டிற்கு வந்த இன்னொரு மனிசி பாட்ஷாவை பார்த்து, அது கந்தர்மடப் பகுதியிலுள்ள ஒரு வீட்டுக்காரனின் நாயென்றும் அவர்கள் நாயைத் தேடி படாத பாடுபடுகின்றனர் என்றும் பத்திரிகையிலும் அறிவித்தார்கள் என்றும் கூறினாள். தான் கந்தர் மடக்காரரிடம் கூறுகிறேன் என்று கூறிவிட்டு போய் விட்டாள்.

அன்றிரவு பாட்ஷா மீது மனிசியும் மகனும் அதிகம் அன்பு காட்டினர். பாட்ஷா தன் சொந்த இடத்திற்கு போகப் போகிறது என்ற மகிழ்வும் கவலையும் அவர்களிடம் காணப்பட்டது. மகன்காரன் ஒரு கோழி முட்டையை பச்சையாய் உடைத்து பாட்ஷாவிற்கு வைத்தான். பாட்ஷாவோ எந்த சலனமுமின்றி வழமை போல் நின்றது. (நாய் அப்படித்தானே நிற்கும். அதற்கேதும் விளங்குமா அது என்ன ஒரு ஆளா?)

அரட்டைக் கதாண்டி பொழுது விடிந்தது. சில கண நேரத்திற்குள் கந்தர்மடக்காரர் ஒரு ஓட்டோவில் வந்து இறங்கினர். பாட்ஷாவை ஆவலோடு கேட்டனர். ஆனால் பாட்ஷாவைக் காணவில்லை; மகன்காரன் பாட்ஷா, பாட்ஷா, பாட்ஷா என்று கத்தி அழைத்தான்.

கந்தர் மடக்காரர் ஒருவர் — ''ஒரு கறுப்பு நாய்தானே?'' மனிசி — ''ஓமோம்''

சாணியின் மூலைப் பகுதியில் நின்று பாட்ஷா குதிரை போல் பாய்ந்து பாய்ந்து வந்தது.

கந்தர் மடக்காரருக்கு முகம் தொங்கிவிட்டது. ஆளை ஆள் மாறி மாறி பார்த்தனர். வெட்கிப் போய் ஓட்டோவில் ஏறிப் போய்விட்டனர்.

இனி பாட்ஷா போய் விடும் என்பதற்காக பாட்ஷாவை வெறுக்கும் நோக்கில் அதன் பிழையான பக்கங்களை வலுவாக்கி வைத்தவர்கள்; மகிழ்ந்து சரியான பக்கங்களை புரட்ட தொடங்கினர்.

பாட்ஷா சிரிப்புடன் வாலை ஆட்டியது.

நாட்கள் நகர்ந்தன.

ஒரு நாள் மனிசியின் தங்கைக்காரியும் அவளின் இரண்டு பிள்ளைகளும் கொழும்பில் இருந்து வந்து இறங்கினர். பிரயாணக் களைப்பு நீங்கியதும் இரண்டு பிள்ளைகளும் (ஒன்று ஆண் மற்றது பெண்) பாட்ஷாவின் விபரங்களை கேட்டறிந்தனர். பிள்ளைகள் அக மகிழ்ந்தனர் ஆண்பிள்ளை பாட்ஷாவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் சொல்லி அழைக்க, பாட்ஷா வாலை ஆட்டியது. பிள்ளைகள் பல தடவை பாட்ஷாவின பெயர் சொல்லி அழைக்க பாட்ஷாவும் அதற்கான பதிலீடுகளைக் காட்டியது.

மனிசியின் தங்கைக்காரி தனது இருபிள்ளைகளுக்கும் பேசக்கொடுத்து வீட்டினுள் போகுமாறு பணித்தாள். அவள் அவ்விதம் பணித்ததற்கு காரணமுண்டு.

தங்கைக்காரி— "பிள்ளையள் வீட்டுக்க போங்கோ (அதட்டியபடி) தம்பி.. (மகன்காரனைபார்த்து) உனக்கு நாயளால எவ்வளவு 'இன்வெக்ஷன்' எண்டு தெரியாதா? சின்னவளுக்கு ஒரு விசர் நாய் கடிச்சு பிறகு நான் ஏ. ஆர். வி போடுவிச்சனான். உந்த நாய்க்கு சாப்பாடு வைக்காமல் கலை... விசர் நாய் கடிச்சு எத்தனை பேர் செத்தவை தெரியுமா?"

மகன்காரன்— இல்லை அன்ரி.. இது நல்ல நாய்.."

தங்கைக்காரி— "ஸ் ஸ் கதையாத நாயைக் கலை...!"

மகன்காரன்— "நான் கலைக்க மாட்டன்!"

தங்கைக்ககரி— "உனக்கு நாயோ மனிசனோ பெரிசு?"

தங்கைக்காரி அதற்கு மேல் எதும் பேசாது வேகமாக வீட்டினுள் போய்விட்டாள்.

ஒரு நாள் பெண்பிள்ளை பாட்ஷாவுடன் விளையாடும் போது பாட்ஷாவின் வாலைப் பிடித்து இழுக்க பாட்ஷா "வள்" என்றது (கடிக்கும் நோக்கில் அல்ல) இங்கு முக்கியமானது யாதெனில் வாலைப் பிடித்து இழுத்தோ என்னவோ பாட்ஷா முதன் முறை தனது கறகறத்த குரலின் பெரிய சத்தத்தை எழுப்பி விட்டது. அதாவது ஒரு முறை குரைத்து விட்டது. இது மனிசிக்கும் மகன்காரனுக்கும் மகிழ்வைத் தர, தங்கைக்காரிக்கு கோபத்தையும் சினத்தையும் மூட்டியது.

"உது இப்ப கடிச்சிருந்தால் என்ன செய்யிறது... என்ர பிள்ளை முதல் பட்ட துன்பம் போதாதே... முதல் உந்த நாயை வீட்ட விட்டு கலையுங்கோ"

ஒருவாறு அமைதியற்று மேலும் சில நாட்கள் கழிந்தன. ஒரு நாள் பாட்ஷா வீதி ஓரத்தில் பலத்த குரலில் கத்தியது. (குரைக்கவில்லை) மனிசி ஓடிப் போய்ப் பார்த்தாள். ஒரு நாய் பிடிகாரன் தனது தடியின் நுனியிலுள்ள கம்பி வளையத்தால பாட்ஷாவின் கழுத்தில் கொழுவி இறுக்கி, இழுத்தபடி நின்றான். பாட்ஷாவும் இழுத்தது. உடனே மனிசி, நாய்பிடிகாரனை தாறுமாறாக பேசினாள். உரத்த குரலில் மகனை அழைத்தாள். மகன் கிணற்றடியில குளித்துக்கொண்டிருந்தான் அழுதக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலத்துடனேயே பிரதான வீதிக்கு வந்தான். பாட்ஷா போராடியது. ஆட்கள் பதிலும் பார்த்தனர். ஒருவன் நாய் வண்டிலை தள்ளியபடி வந்தான்.

மகன்காரன் அவர்கள் எல்லோரையும் நாயை விடுமாறு கெஞ்சினான். சட்டத்தைக் கூறி நாயை விடவில்லை; பாட்ஷாவை இழுத்து வண்டியினுள் போட ஆயத்தமாயினர். மகன்காரன் திரும்பி வீட்டிற்குள் ஓடோடிப் போனான்; வந்தான்; ஒரு இருபது ரூபாவை மறைவாக கொடுத்தான்; நாய் விடப்பட்டது. (மகன்காரன் நாயை மீட்க காசு கொடுத்தது ஒரு பிழையான காரியமாகும். என்ன செய்வது கொடுத்து விட்டான்)

பாட்ஷா, தலையை ஆட்டியபடி, ஓடிப்போய் வீட்டிற்குள் மறைந்து நின்றது. பாட்ஷா ஒரு நாள் கூட வாசலைத் தாண்டி உள்ளே போனதில்லை: பாட்ஷா வழமைக்கு மாறாக அன்று தான் அதிகம் பயந்திருந்தது.

வீதியில் நின்ற நாய் வண்டிலில் உள்ள பல நாய்களில், இரண்டு நாய்கள், நேர இருக்கும் மரணத்தைக் கூட மறந்து நாய் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. அதனை ஆட்கள் பார்த்து சிரித்தனர். வண்டிலினுள் இருக்கும் நாய்களுக்கு பாட்ஷாவை போல் பயமிருக்கவில்லை: பயத்தைக் கடந்த நிலையில் அவைகள் நின்றன.

பாட்ஷா காசு கொடுத்து மீட்கப்பட்ட பின்னர் அன்றிரவு ஒரு நடுச்சாமம் போல் தனது தடித்த பெரிய குரலால் மூன்று முறை உரத்துக் குரைத்தது: பாட்ஷா வந்து மூன்று மாதத்தில் இது தான் பாட்ஷாவின் இரண்டாவது குரைப்பு: ஆனால் இருள் என்றமையால் பாட்ஷா ஏன் குலைத்தது என்ற காரணத்தை அறிய முடியவில்லை:

மனிசியின் தங்கைக்காரியின் கதைப்படி, அவளுக்கும் பாட்ஷாவில் அன்பு பிறந்திருக்க வேண்டும் [illegible] தானும் முன்பு ஒரு நாயை வளர்த்தவர் என்றும் அது இறந்த போது அதற்கு வெள்ளை துணி விரித்து தான் தாட்டார்களாம் என்றும், அன்று முழுவதும் தான் சாப்பிடாமல் அழுதபடியே தான் இருந்தவராம் என்றும் கூறினாள். அதே வேளை தனது பெண் பிள்ளைக்கு விசர் நாய் கடித்ததையும் ஞாபகப்படுத்தினாள்.

பாட்ஷா தான் ஒரு முறை வீதியில் நாய் பிடிகாரனிடம் பிடிபட்டதை மறந்து போக மீண்டும் வீதியோரத்தில் படுக்கலுற்றது. அவ்விதம் வீதியில் படுத்திருந்த நாளில் மனிசியும், சயிக்கிளில் மீன் பெட்டியோடு வருபவர்களிடம் மீன் வாங்குவதற்காக காத்து நின்றாள். பாட்ஷா ஆற அமர படுத்துறங்கியது. பாட்ஷாவை நோக்கி ஒரு நாய் வந்தது. வெள்ளை நாய், நெற்றியில் கறுப்பு சுட்டி இருந்தது; அந்த நாயின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை நிறம் புழுதி கலந்து நிறம் மாறி இருந்தது.

பாட்ஷாவை இரண்டு தரம் "ஊவ், அவ்" எனக் கவ்வியது. பாட்ஷா திடுக்குற்று எழ முன்ன ரே ஏதும் நடவாதது போல் அந்த வெள்ளை நாய் ஒரு பேசக்காய்ப் போனது. பாட்ஷாவின் கழுத்தில் தான் இரண்டு கடியும். பாட்ஷா அங்கு பிங்குமாக பல தடவை நடந்து, நடந்து அந்தரப்பட்டது. மனிசிக்கு அந்த நாய் விசர் நாய் என்பது தெளிவாயிற்று.

சிலர் அந்த விசர் நாயை அடித்து கொல்வதற்கு ஓடிச் சென்றனர். மனிசி, வீட்டில் மகனுக்கும் தங் கைக்காரிக்கும் கூறினாள். தங் கைக்காரி உடனடியாக மிகக் கோபத்துடன் பேசினாள். மகன் காரன் பாட்ஷாவிற்காக கவ லைப்பட்டான்.

ஊரவர், விசர் நாய் கடித்த சாதாரண நாய்க்கும் விசர் வந்து வீட்டுக்காரருக்கு கடித்து விசர் வரும் என்பதை விரிவாகவும் தெளிவாகவும், கற்பனை மாயங் களுடனும் கூறினர். விசர் நாய் கடித்த ஆள் நாய் போல் குரைப் பது பற்றிய கட்டுக்கதைகளை அவிழ்த்தனர்.

ஆட்களின் நிலைமை முழுவ தும் மாறியது. பாட்ஷாவைத் தவிர; பாட்ஷா வந்தால் எல் லோரும் தூரவிலகி நின்றனர். பாட்ஷாவோ அவற்றை ஒன்றும் பொருட்படுத்தவில்லை, வழமை போலவே வாலை ஆட்டியது, சிரித்தது. மகன்காரனுக்கு பாட் ஷாவை நினைக்க வேதனையாக இருந்தது.

தங்கைக்காரி சுகாதார வைத்திய அதிகாரிக்கு (எம் ஓ. எச்) அவசரகடிதம் அனுப்பி னாள். சனிக்கிழமை சுற்றி வளைத்து பாட்ஷா பிடிக்கப் படும் என்ற தகவல் கிடைக்கப் பெற்றது.

வெள்ளிக் கிழமை இரவு மீனுடன் (ரின் மீன்) சாப்பாடு வைக்கப்பட்டதோடு பச்சை முட்டையும் வைக்கப்பட்டது. பாட்ஷாவில் எந்த மாற்றமும் இல்லை வழமைபோல் இருந்தது.

1997ம் ஆண்டு. ஆவணி மாதம், இரண்டாம் திகதி. சனிக் கிழமை காலை 8 மணிக்கு நாய் பிடிவண்டில் வீட்டு வாசலை நெருங்கியது.

பாட்ஷ பிடிபடுவதைக் காண விரும்பாத வீட்டுக்காரரில் மகன் காரனை தவிர ஏனையோர் வீட் டிற்குள் மறைந்தனர். மகன்கா ரன் வெளியே நின்றான்.

பாட்ஷாவை முன்னர் பிடித் த போது இருபது ரூபாய் கொ டுத்து மீட்ட நாய்பிடிகாரன் முன்னுக்கு வந்தான். (இம்முறை மகன்காரன் இருபது ரூபாய் கொ டுக்கவும் மாட்டான், நாய்பிடி காரன் வாங்கவும் மாட்டான்)

பாட்ஷா தென்னை மரத் தடியின் உறங்கிக் கொண்டிருந் தது. நாய் பிடிகாரருக்கு மகன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரன் நாயிருப்பிடத்தைக் காட்டினான். நாய் பிடிகாரன் மெதுவாக பாட்ஷா அருகே சென்றான். ஆளரவம் கேட்டோ அல்லது மோப்ப திறனாலோ என்னவோ பாட்ஷா 'டபக்'கென திரும்பி பார்த்து 'பக்'கென எழும்பி அதன் உரத்த கறகறத்த குரலால் குரைத்து விட்டு, பாய்ந்து ஓடி, பின் காணியால் தப்பி ஓடியது. பாட்ஷா, தான் வந்து நான்கு மாதங்களில் அன்று தான் மூன்றாவது முறையாக குரைத்திருந்தது.

நாய் பிடிகாரர்கள் பாய்ந்து ஓடி நாயைப் பின் தொடர்ந்து பிடிக்க எத்தனித்தனர். (பாட்ஷா ஏற்கனவே சூடு கண்ட பூனை) பாட்ஷா தப்பி விட்டது.

மகன் காரனுக்கு மகிழ்ச்சி: காரணம் எங்காவது போய் தன் பாட்டில் விசராக்கி சாகட்டும் அது பரவாயில்லை என நினைத்தான்.

நாய் பிடிகாரர் ஏமாற்றுத்துடன் காணப்பட்டனர். மேலதிகாரி அவர்களை 'நாய் பேய்' என்று பேசினான். ஆனால் பாட்ஷாவை பிடிக்காது வண்டில் நகராது என சபதமிட்டவர் போல் நீண்ட நேரம் படையணிகளுடன் நின்றனர். தெருவில் ஏது மறியாமல் வந்து கொண்டிருந்த குட்டி போட்ட பெட்டை நாயொன்றை 'லபக்' கொழுவி எடுத்து வெறுமையாயிருந்த நாய் வண்டிலிற்குள் நாணுக்கு போட்டனர்.

மகன் காரன் நினைத்சால் பாட்ஷாவை அழைத்தோ அல்லது தேடியோ நிட்சயம் கண்டு பிடிக்கலாம். ஆனால் பேசாது நின்றான்.

மனிசி வீட்டிற்குள் இருந்து வெளியே வந்தாள். மகன் காரனைப் பார்த்தாள்— மகன்காரன் சிரித்தான். மனிசி நிதானமாக மகன் காரனுக்கு சொன்னாள்—

''தம்பி சிரியாதை... தம்பி தவறி பாட்ஷாவுக்கு விசர் வந்தால் எத்தினை மனிசருக்கு கடிக்கும்... நாங்கள் பாட்ஷாவை ஒண்டும் செய்யேலா... போ... போய் பின் வளவுக்க இளவுக்க தேடிப்பார்... அதுக்கிடையில அப்பிடி எங்க போறது? தேடிப் பார் மோனை...''

பாட்ஷாவால் பல பேருக்கு அபத்து அல்லது மரணம் ஏற்படும் என்பது அவனுக்கு கற்பனையைத் தாக்கியது.

போனான். தேடினான். நின்றது. வாழை மரங்களினூடே மறைந்து நின்றது. பாட்ஷா மகன் காரனைக் கண்டது. எழுந்து வாலை ஆட்டிச் சிரித்தது. அவனுக்கு மனம் கனத்தது. சடக்கென தலையைத் திருப்பி நாய் வண்டில் நிற்கும் திசைக்கு போனான்.

பாட்ஷா பிடிபட்டது!

தடியின் நுனியில் உள்ள இறுகு கம்பியில் தாலை மாட்டி, இழுத்துப் போராடித் தோல்வி கண்ட நிலையில், தடியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு செல்லும் திசைக்கே பாட்ஷா நடந்து சென்றது. பின்னைகள் இருவரும் வீட்டிற்கு வெளியே வந்து நின்று பார்த்தனர்.

வண்டியிலை நோக்கி இழுத்துச் செல்லப்படும் பாட்ஷா வீட்டுக்காணியின் படலை ஊடாக தலையை திருப்பி வீட்டை பார்த்தது. உன்னி இழுத்தான் நாய் பிடிகாரன். பாட்ஷாவின் வாயில் இரத்தக் கசிவு இருந்தது.

பாட்ஷாவின் கழுதித்துள்ள பச்சை நைலோன் கயிற்றை இறுக்கிப் பிடித்து, வண்டியுள் அதனை போட முயலும் போதும் பாட்ஷா வாலை ஆட்டியது.

வண்டில் புறப்பட்டு வெற்றியுடன் வோனது.

பாட்ஷா வழமையாக எப்போதும் சாப்பிடும் மரப்பலகையில் அதன் நாக்கு நக்கிய பகுதி, வட்டமாக ஈரத்தன்மையுடன் இருந்தது. மகன் காரன் அந்தப் பலகையை மறுபுறமாக திருப்பி விட்டான்.

பாட்ஷா போய்விட்டது. ★

---

# ★ போட்டிச் சந்தையில் புதைகுழிகள்!

ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, மனிதனைக் கடித்தது என்பார்களே! இப்பொழுது பல்தேசிய முதலாளித்துவம் சடலங்களையும் கடிக்கத் தொடங்கிவிட்டது. மேற்கு நாடுகளிலே ஈமச்சடங்குகளை நடாத்துவதற்கு முதலாளித்துவம் பெரிய கம்பனிகளை அமைத்துள்ளது. பெரும் ஆதாயத்தை ஈட்டித்தரும் இத்தொழிலில் இப்பொழுது பல்தேசிய முதலாளித்துவமும் ஈடுபடத் தொடங்கியுள்ளது. இதனால் பல்தேசிய கம்பனிகளுக்கும் உள்ளூர் கம்பனிகளுக்கு மிடையே முரண்பாடுகள் தோன்றியுள்ளன.

அவுஸ்திரேலியாவிலே உள்ளூர் கம்பனிகளுக்கும், அமெரிக்க கம்பனிகளுக்குமிடையே இத்தகைய முரண்பாடுகள் கூர்மையடையத் தொடங்கியுள்ளன. அமெரிக்க பல்தேசியக் கம்பனிகள் தமது பிடிக்குள் இடுகாடுகளையும், சுடுகாடுகளையும் கொண்டுவர முயல்கின்ற இவ் வேளையில் அக் கம்பனிகளை பகிஷ்கரிக்க வேண்டும் எனச் சிறிய குடும்ப அவுஸ்திரேலியக் கம்பனிகள் மக்கள் இயக்கமொன்றினைத் தொடங்கியுள்ளன.

சடலங்களை அடக்கம் செய்வதனால் என்ன இலாபம் எனச் சிலர் கேட்கலாம். அங்குதான் இருக்கிறது விஷயம். இடுகாடுகள் தனியார்மயமாக்கப்பட்டால், அங்கு அடக்கம் செய்யப்பட்டிருக்கும் சடலங்களை சில ஆண்டுகளுக்குப் பின்பு தோண்டி எடுத்து எலும்புச் சாலைகளில் புதைக்கலாம். இவ்வாறு விடுவிக்கப்படும் நிலத்தில் புதிய சடலங்களை அடக்கம் செய்யலாம். இத்தகைய 'புதைகுழி பிரட்டு' பல்தேசியக் கம்பனிகளுக்கு பெரும் ஆதாயத்தை ஈட்டிக் கொடுக்கின்றது. 'ஒரு ஆளுக்கு எவ்வளவு காணி வேண்டும்' என்ற தலைப்பில் ரொல்ஸ்ரோய் ஓர் சிறு கதையை எழுதினார். 'ஆறு அடி நிலம்' (அதாவது புதைகுழிக்கு போதுமான நிலம்) என அக்கதை விடைபகர்ந்தது. பல்தேசிய முதலாளித்துவத்தில் இந்த ஆறு அடி நிலம் கூட இறந்தவர்க்கு இல்லாமல் போய் விடுகின்றது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓடி... ஓடி... ஓடுகின்றோம்

● க. ரவீந்திரன்.

சூரியக் கதிர் கண்டு
பீதியுடன் வந்த போது
வெற்றி எங்களுக்கு
வாழ்க்கையில் இல்லாது போனது...

உண்மை வெற்றி
தோன்றியது*
சொற்ப உடமையும்
தொலைந்ததே
உண்மை வெற்றியானது....

வெற்றி நிச்சயம்
செய்தி கேட்டு
விழி கலங்கி வாழ்க்கை
விளிம்பிலானது....

தொழில் எது செய்வோம்
தொழில் எங்கே செய்வோம்
பசிக் கொடுமை
பட்டினிச் சாவை உணர்ந்தோம்...

செஞ்சிலுவை தந்தவாளி
விற்று விட்டோம்
சீனி தேயிலை பெற்று
தேனீர் உறிஞ்சிக் குடிக்க...

மழைக்கு கூடாரம் அமைக்க
பொருட்கள் நிவாரணமாக
விற்று விட்டோம் அதையும்
அரிசி வேண்டி உலை வைக்க....

எறிகணை வீழ்ந்து வெடித்தது
எல்லாம் விட்டு ஓடுகின்றோம்
எங்கு ஓடுகின்றோமோ....?
எங்களுக்கே தெரியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கு

## நாடக அரங்கக் கல்லூரி

கருத்தரங்குத் தொடர் - 01

---

☆ குழந்தை ம. சண்முகலிங்கம்

I சிறுவர் எனப் 12 வயதுக்குட்பட்டவர்களைக் கருதலாம்.
—மருத்துவ ரீதியாக—

II சிறுவரும் அவர்களோடு தொடர்புடைய நாடக, அரங்க நடவடிக்கைகளும்.

— வசதி கருதி இரண்டு பெரும் பிரிவுகளில் அடக்கிக் கொள்வோம்.

(1) படைப்பாக்க நடவடிக்கைகள்.

(2) அரங்க நடவடிக்கைகள்.

1. படைப்பாக்க நடவடிக்கைகளாகக் கொள்ளத் தக்கவை.

1. கதை கூறுதல் — STORY TELLING.

— மூன்று நோக்கங்கள் இதற்கு உண்டு:

o களிப்பூட்டுதல், கல்வியூட்டுதல், பண்பாட்டை ஊடு பாச்சுதல்.

— கதை சொல்பவர்!

o கதையைத் தெளிவாக ஒழுங்கு படுத்திக் கொள்ள வேண்டும்.

o கதையில் வரும் பாத்திரங்களை தான் நடித்துக் கதை சொல்ல வேண்டும்.

o கவர்ச்சியான குரல் — குரல் ஏற்ற இறக்கம் அவசியம்

o ஹாசியம் இடம் பெறுவது நல்லது.

o நேர்மை அவசியம் — போலித்தனம் கூடாது.

2. நாடகப் பாங்கான விளையாட்டுக்கள் :-
DRAMATIC PLAY.

— சூழலில் நிகழ்பவற்றைப் பிள்ளை பார்த்துப் பாவனை செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இதன் மூலம் பிள்ளை உலகை ஆராய்கிறது, கற்கிறது.
- தன் விருப்பங்களைத் தனது விளையாட்டுக்கள் மூலம் பிள்ளை வெளிப்படுத்துகிறது.

  உ+ம் பாடசாலை செல்ல விரும்பும் பிள்ளை பாடசாலை விளையாட்டுக்களை விளையாடுகிறது.

— நாடகப் பாங்கான விளையாட்டும், நாடகம் ஆக்குதலும்; ஒன்றுடன் ஒன்று இணைந்து செல்லும்.

3. படைப்பாக்க நாடகம்: CREATIVE DRAMATICS

— பங்கு பற்றுவோர் படைக்கும் நியமமற்ற நாடகம்.
- இதில் ஒரு தொடக்கம் — இடை — முடிவு இருக்கும்.
- புத்தளிப்புப் பண்புடையது
- உரையாடல்கள் எழுதப்படுவதில்லை.
- வரிகள் மனனம் செய்யப்படுவதில்லை.
- திரும்பச் செய்யச் செய்ய ஒழுங்கு வந்து சேரும்.
- இதற்குப் பார்வையாளர் இல்லை — பங்குபற்றுபவர்களே பார்வையாளர்.

— ஆயினும் இது வளர்த்தெடுக்கப்பட்டுப் பார்வையாளர் முன்னிலையில் அரங்க நிகழ்வாக அளிக்கை செய்யப்படுவதும் உண்டு.

படைப்பாக்க நாடக முயற்சியால் விளைபயன்!

— விளையாட்டு முறைமை இங்கு செயற்படுவதால் —
- கற்பனையை விருத்தி செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது.
- தன்னம்பிக்கை பெறுதல், சுய — பெறுமானத்தை உணர்தல்.
- தன்னைச் சூழக் காணும் வாழ்க்கைக் கோலங்களைத் திருப்பச் செய்ய வாய்ப்பு.
- சுதந்திரமாகச் சிந்திக்க வாய்ப்புக் கிடைக்கிறது.
- சொந்தக் கருத்தை விருத்தி செய்யக் குழுவுக்குச் சுதந்திரம் கிடைக்கிறது.
- கூடிக் கருமமாற்ற வாய்ப்பு ஏற்படுகிறது.
- சமூக விழிப்புணர்வைக் கட்டியெழுப்ப வாய்ப்பு.
- உணர்ச்சிகளை நல்ல முறையில் வெளியேற்ற வாய்ப்பு.
- சிறந்த முறையில் பேசும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுதல்.
- நல்ல இலக்கியங்களோடு பரிச்சயம் ஏற்பட வாய்ப்பு.
- அரங்கக் கலைகளுக்கு அறிமுகப்படுத்தப்படுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— எனவே படைப்பாக்க நாடகம் —

o ஒரு கற்றல் முறையாகவும்;
o பிள்ளை தன்னை வெளிப்படுத்த உதவும் முறைமையாகவும்;
o ஒரு கலை வடிவமாகவும் அமைந்து பிள்ளைகளுக்குப் —
o பொறுப்பை ஏற்கும் மனப்பாங்கையும்
o குழுவின் தீர்மானங்களை ஏற்கும் பண்பையும்
o கூட்டாக இணைந்து கருமமாற்றும் இயல்பையும்,
o புதிய ஆர்வங்களை விருத்திசெய்துகொள்ளும் துணிவையும்
o புதிய செய்திகளை நாடி அறிந்துகொள்ளும் விருப்பையும் கொடுக்கிறது.

## 4 பாகமேற்றல் ROLE PLAYING.

— பாகங்களை ஆடுவதென்பது குழந்தைகளின் நாடகப் பாங்கான விளையாட்டுக்களின் பிரதான இயல்பாக உள்ளது.
— இது கல்வியுடனும், பிணி நீக்கலோடும் தொடர்புடையது.
— பாத்திரங்களை நடித்தலைப் பாகமாடுதல்.
— தாம் தாமாகவே நின்று பல்வேறு பாகங்களையும் ஆடுதல் இடம் பெறும். இதனால் போலச் செய்தல் என்ற பண்பு இடம் பெற வாய்ப்புண்டு. எனினும், அது போலச் செய்தல் அல்ல. தான் ஆடும் பாகத்தின் உணர்வுகளைத் தான் உணரவும் இங்கு வாய்ப்புண்டு.
— வகுப்பறையில் பாகமாடுவதற்குப் பல வாய்ப்புகள் உள்ளன.

— பிணி நீக்கலும் பாகமாடுதலும்:

— பிணி நீக்கலுக்கு நாடகம் பயன் படுத்தப்படும் போது பாகமாடுதல் பயன்படுகிறது.
o உடற் குறைபாடு, உளக்குறைபாடு, உணர்ச்சிச் சிக்கல், பண்பாட்டுக் குறைபாடு உடையவர்களுக்கு இது பயன் படும்
o ஒருவரைப் பயமுறுத்தும், குழப்பும், இன்னலடையச் செய்யும் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவும், படைப்பாக்க வழிமுறையினதொரு நாடக நுட்பமாக இது பிணி நீக்கலில் பயன்படுத்தப்படுகிறது.
o சிறுவர் நாடகத்தின் நோக்கம் பிணி நீக்கல் பணியினை மேற்கொள்வதல்ல. பிணிவராது தடுத்தலே அதன் நோக்கமாக அமைவது சாலச்சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— மறுதலைப் பாகமாடுதல்: ROLE REVERSAL

— ஒரு பாகத்தை ஆடிவிட்டு அதற்கு எதிர் நிலையில் உள்ள பாகத்தை ஆடுதல்.

உ+ம் மகனாக ஆடியவர் தந்தையாக ஆடுதல்

11. அரங்க நடவடிக்கைகளாகக் கொள்ளத்தக்கவை

1. கதை அரங்கு: STORY THEATRE

— ஒருவர் கதையைக் கூற, வேட உடுப்பணிந்த நடிகர் முழுப் பாவனை நிகழ்த்துவர்.

o பேசாப் பாங்கில் நடிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது.

2. வாசிப்போர் அரங்கு: READERS THEATRE.

— பலர் சேர்ந்து பல பாகங்களை வாசித்தல்.

— கவிதையும் படிக்கலாம்

— தேவையான இடங்களில் பாத்திரப் படைப்பும் இடம்பெறும். அது தேவையான அபிநயங்கள், முகபாவங்களோடு, சிறிதளவு அசைவுகளோடு நிகழ்த்தப்படும்.

3. பாவை அரங்கு: PUPPET THEATRE.

— கைப்பாவை, விரற்பாவை கயிற்று/ நூற்பாவை, தோல் பாவை, நடிப்பாவை எனப் பலவகை உண்டு. கதை சொல்ல, கதையை நடிக்க நியம நாடகம் நடிக்க உதவும்.

4. சிறுவர் அரங்கு CHILDREN'S THEATRE.

— குழந்தைகளைப் பார்வையாளராகக் கொண்டதொரு நியம அரங்கத் தயாரிப்பு.

— பயில் முறையாளரால்/ தொழில் முறையாளரால் தயாரிக்கப்படலாம்.

— பாடசாலை ஆசிரியர், மாணவர்களாலும் தயாரிக்கப்படலாம்.

— குழந்தைகளால்/ வளர்ந்தவர்களால்/ இருசாராரும் இணைந்து நடிக்க முடியும்.

— அதன் பயன் நுண்கலைச் சார்புடையது.

விளையும் நன்மைகள்

1. பார்க்கும் பிள்ளைக்கு

o தான் நன்கு நயந்த ஒரு கதை மேடையில் உயிர் பெறுவதைக் காணும் மகிழ்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- துணிவு, உயர் குணம், நன்றி அறிதல், அழகு. உறுதி என்பன கொண்ட பாத்திரங்களோடு தன்னை இணைத்துக் கொள்வதில் பிள்ளை பெறும் ஆழமான, புனிதமான உணர்வு
- கதைப் பொருளில் தீவிரச் செயல்கள், திகில்கள், கிளர்ச்சிகள் என்பவற்றோடு பங்கு கொள்வதால், தேங்கிக் கிடக்கும் உணர்ச்சிகள் வெளியேற்றப்படுதல்.
- நல்ல தயாரிப்பாக இருந்தால், அரங்கக் கலையை நயக்கக் கற்றுக் கொள்ளுதல்.
- பலரோடு கூட இருந்து பார்ப்பதால் விளையும் கூட்டுணர்வு.

பங்கு பெறும் பிள்ளைக்கு

- தன்னை வெளிக் கொணரும் / வெளிப்பாட்டுத் திறன்
- மனனம் செய்வதால் வரும் நன்மை — ஞாபகசக்தி
- உணர்ச்சி வெளியேற்றத்தால் விளையும் சமநிலை
- கூடிக் கருமமாற்றுதல்.
- கட்டுப்பாடு, ஒழுங்கு
- தன்னம்பிக்கை / தன்னெடுப்பூக்கம்.
- கலை அனுபவம்.

பார்வையாளர் யார்?

— சம வயது / சம உள முதிர்ச்சி உடைய பிள்ளைகள்.
— பிள்ளைகள் பால் அனுதாபமுடைய பெரியவர்-
உ-ம் பெற்றார், சகோதரர், ஆசிரியர், சம வயது நண்பர், நெருங்கிய உறவினர், சிறுவர் நலனில் அக்கறை உடையவர்.

இலக்குப் பார்வையாளராக அமையும் சிறுவரை எவ்வாறு வகைப்படுத்திக் கொள்வது.

— வயது அடிப்படையில் / வகுப்பு அடிப்படையில்:
- முன் பள்ளிச் சிறுவர்;
- ஆண்டு 1—2 வரையுள்ளவர்.
- ஆண்டு 3—4 வரையுள்ளவர்
- ஆண்டு 5 மாணவர்கள்.
- 6—7 வரையுள்ள மாணவர்கள்.

— வாழும் சூழலை அடிப்படையாகக் கொண்டு
- கிராமமா? பட்டணமா?,
- கல்வி அறிவுடையோர் உள்ள குடும்பமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி அறிவு குறைந்த குடும்பமா?
- ○ குடும்பத்தின் பொருளாதார நிலை.
- ○ குடும்பத்தின் சமூக அந்தஸ்து.
- ○ குடும்பத்தின் பண்பாட்டுப் பின்னணி — சமயம் உட்பட.

கரு எத்தகையது?

— பிள்ளைகளின் உள முதிர்ச்சிக் கேற்றவை.
— பிள்ளைகள் வாழும் சூழலுக்குப் பொருந்துபவை.
— அவர்தம் பண்பாட்டின் விழுமியங்களை வலியுறுத்துவன வற்றை
— உலகப் பொதுமையான வற்றை வலியுறுத்துவன வற்றை
— தமது தேசத்தின் தேவைகளுக் கமைந்தவற்றை
[உ+ம் சில நாடுகள் — பொது உடைமை]
— மிகவும் கனதியான விஷயங்களையும், எளிமையாகச் சொல்ல முடியும்.

கதை எவ்வாறு அமைய வேண்டும்.

— எளிமையும், நேரியதுமான தொடர்கதை. சிக்கல் குறை வானதாக.
— விநோதம், கற்பனை, தீரச் செயல் மிக்கவையாக
— ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்தவை.
— இதிகாசம், புராணங்களில் இருந்தும் கதைகளை எடுக்கலாம். [பொருத்தமானதை]

மொழி, நடை எத்தகையது

— பிள்ளைகளது சொற்களஞ்சியத்துள் அடங்கும் வார்த்தைகள் (புதிய வார்த்தைகள் சில அறிமுகமாகலாம்)
— பேச்சு மொழி பயன் படுத்தப்படுவதால், இயல்புத் தன்மை தோன்றும் [அளவுக்கதிகம் கொச்சையான பேச்சு மொழி விரும்பத்தக்கதன்று]
— தமிழைப் பொறுத்தவரையில் சிறுவர் அரங்கினூடே ஒரு பொதுமையான மொழியை - அரங்குக்கான மொழியை - உருவாக்குவதைச் சிந்திக்கலாம். அது செம்மை சார்ந்த மொழியை நோக்கிச் செல்வதாக அமையலாம்.

உரையாடல்கள் எவ்வாறு அமையலாம்?

— சிறு சிறு வாக்கியங்களாக அமைவது விரும்பத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— பாத்திரப் பண்பை வெளிப்படுத்துவனவையாக அமைய வேண்டும்.

— பிள்ளைகளிடத்தில் இயல்பாக மொழி ஆர்வத்தை வளர்ப்பதானவை.

— கூரறிவும், ஹாசியமும் கலக்கப்படுவது விரும்பத்தக்கது.

— சொற் செட்டும் சிக்கனமும் அவசியம்.

பாடல், ஆடல் இடம் பெறுவது அவசியமா?

— அவசியம் என்றே கூற வேண்டும்.

— ஆடல், பாடல், விளையாட்டு என்பன பிள்ளைகளது இயல்பில் உள்ளவை — மூதியவரும் அவற்றை விரும்புவர்

— எளிமையும், கவர்ச்சியும் கொண்டவை.

— சுலபமான சந்தங்களில் அமைந்த பாடல்களும், சுலபமான முறையில் அமைந்த ஆட்டங்களும். (பிள்ளையின்) வயது முதிர்ச்சிக்கேற்ப இது வளர்ந்துச் செல்லப்படலாம்.

— தனிய உரைநடையில் மட்டும் அமைந்த கதைகளும் சொல்லப்படலாம்.

பாத்திரங்கள் எத்தகையவை?

— பிள்ளையின் அனுபவத்துக் கெட்டியவை எனினும் விநோதம், கற்பனை நிறைந்தவை விரும்பப்படும்.

— மிருகங்கள் தான் வரவேண்டும் என்ற கட்டாயமில்லை

— மனிதர் (எல்லா வயதினரும்), கடவுளர், அதிமானிடர் கற்பனையானவை.

— மனிதரும் அரசர், வரலாற்றுக் கால நாயகர்கள்.

விளையாட்டு அவசியமா?

— நாடகம் என்பதே சிறுவரைப் பொறுத்த வரையில் விளையாட்டுத்தான்.

— விளையாட்டு மூலம் கல்வி என்பது சிறந்த முறை

— பிள்ளைகள் வளர்ந்து செல்ல விளையாட்டுப் பண்பைக் குறைத்துக் கதியான நடையில் கூற வேண்டியவற்றைக். கூறமுடியும்.

நடிப்பு எத்தகையதாக இருக்க வேண்டும்.

— செய்து காட்டல் என்ற பண்புதான் பெரும்பாலும் அமை-

— யும் உளவியல் பண்புகளை வெளிப்படுத்தி நடிக்கும் தேவை உமுதிர்ச்சி ஏற்பட (வகுப்பு கூட)தேவைப்படலாம்.

— விளையாட்டு (PLAY) என்பது பிரதானமாக அமையும் வேளையில் செய்து காட்டல் பண்பே மேலோங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

— பாகமோடுதல் பண்பையும் இந்த கருத்திற் கொண்டு நடிப்புக்கான ஆரம்பமாகக் கொள்ளலாம்.

ஊமம் அவசியமா?

— கற்பனையை வளர்க்க, தூண்ட உதவும் எளிமையான ஊமக்/ கூட்டுமச் செயற்பாடுகள் பயன்தரும்.

காட்சியமைப்பு எத்தகையது.

— எளிமையும், கவர்ச்சியும், விநோதமும் உள்ளதாக அமைய வேண்டும். கடும் வர்ணங்களை பிள்ளைகள் விரும்புவர்.
— யதார்த்த முறையில் அமைந்த காட்சியமைப்பு அவசியமில்லை.

வேட உடுப்பு எத்தகையது.

— பாத்திரத்துக்குப் பொருந்தக் கூடியவை. இருப்பினும் விநோதமான வர்ணங்களைப் பயன்படுத்தலாம்.
— எளிமையும் கவர்ச்சியும் அவசியம்

ஒளி அமைப்பு எவ்வாறு அமைய வேண்டும்?

— எளிமையாக, பிரகாசமாக, வர்ணங்கள் தேவைப்படும் போது பயன் படுத்தல்.
— பிள்ளைகள் எதையும் தெளிவாகப் பார்க்க விரும்புவர்.
— எனவே ஒளியும் இருளும் என்ற உத்திகள் தேவையில்லை
— ஒளி மாற்றங்களை அடிக்கடி செய்ய வேண்டியதில்லை.

உத்திகள் எத்தகையவையாக இருப்பது நல்லது?

— பிள்ளைகளது விளையாட்டில் வரும் உத்திகள்.
— அவர்களது இயல்பில் உள்ளவற்றை உத்திகளாக்குதல்.
— விநோதம் மூலம் வியப்பார்வத்தைத் தரும் உத்திகள்.

செய்திகள் எத்தகையவையாக இருக்க வேண்டும்.

— பிள்ளைகளது முழுமையான ஆளுமைக்கு உதவுவன.
— மனிதம் நிறைந்தோர் மனிதனை உருவாக்கவல்லவை.
— அன்பு, பணிவு, துணிவு, தியாகம், இரக்கம், தன்னம்பிக்கை, நட்பு, கூடி வாழ்தல், கடமை, பொறுப்பு.
— நேரடியான /வெளிப்படையான போதனைகள் தவிர்க்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பங்கு பற்றல் அரங்கு / ஈடுபாட்டு நாடகம்.

PARTICIPATORY THEATRE / INVOLVEMENT DRAMA.

— நியம சிறுவர் அரங்கில், ஆற்றுகை நிகழும் வேளையில்.
— பார்வையாளர் இடையிடையே நடிகருக்குக் கருத்துக்கள் எண்ணங்களைக் கூற முடியும்.
— கருத்துக்களைக் கூறவும், செய்து பார்க்க உதவுமாறும் பார்வையாளர் கேட்கப் படுவர்.
— இது BRYAN WEY என்பவரால் இங்கிலாந்தில் அறிமு
— கப் படுத்தப் பட்டது. இந்த பிரையன் வே 'முறைமை' நியமத்தை நியமமற்றதோடு இணைத்து நடிகருக்கும் பார்வையாளருக்குமிடையில் நெருக்கமான உறவு நிலை நிறுத்த முனைகின்றது.

III. தாம் வாழ்வதைப் பிள்ளைகள் கற்கின்றனர்.

CHILDREN LEARN WHAT THEY LIVE.

IV சிறுவர்க்கான நாடக, அரங்க நடவடிக்கைகளில் முதியவர் என்ன பங்கை வகிக்கின்றனர்?

— சிறுவருக்காக நாடகம் எழுதுதல், நடித்தல், தயாரித்தல், காண்பிய — கேட்பிய அம்சங்களைப் படைத்தல், ஆக்க நாடகநடவடிக்கைகளின்போது வழிகாட்டியாக அமைதல்.
— சிறுவரது சிந்தனையை அறிந்தவரே ஈடுபட வேண்டும்
— பிள்ளைகளிடம் எமது படைப்புகளை அளிக்கை செய்த பின், அவர்களது கருத்துக்களைக் கேட்டறிவது நல்லது.
— பிள்ளைகளுக்காக நாம் சிந்திக்கிறோம் என்ற நினைப்பு சரியா? பிள்ளையாக நின்று சிந்திக்கின்றோம் என்பது சரியா?
— தமக்காக எல்லாவற்றையும் முதியவரே செய்வதைப் பிள்ளைகள் விரும்பார். *

---

# மூடபக்தியும் உலக நலனும்

''எனது தந்தை சயரோகத்தால் இறந்து போனார். எனக்கு சயரோகம் வந்திருக்கிறது. எங்கள் பாட்டனுக்கும் இந்த நோய் உண்டு. ஆதலால் இந்த நோய் தீர்ப்பதற்கு நான் மருந்து தின்ன மாட்டேன் என்று ஒரு மனிதன் சொல்லுவானானால் அவன் எவ்வளவு பெரிய மூடன். லோக க்ஷேமத்திற்கும், லோகாபிவிருத்திக்கும் இந்த 'மாமூ' பக்தி எத்தனை பெரிய இடையூறு என்பதை நம்மவர் இன்னும் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை''

— பாரதியார் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்

ஜிம்மி என்ற சிறுகதை சிறுவர்களும் புரிந்து கொள்ளும் வகையில் இலகுவாக இருந்தது. ஒரு நாயின் உணர்வுக்கூடாக எமது அனுபவங்களை மீண்டும் இரை மீட்க உதவியது.

உ. உஷா சுழிபுரம்.

தாயகம் 34வது இதழில் வெளிவந்த கலைந்து போன கோலங்கள் மாணவர்களின் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் கதை. இதன் அமைப்பு, கதை கூறும் முறை, மொழிநடை சிறப்பாக உள்ளன. இவை மேலும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவை. ஆனால் மாணவியின், மனக்கோலங்கள்'' கலைவதற்கு காரணமாக அமைவது கல்விசாரா ஊழியர்களின் வேலை நிறுத்தம் தான் என்பதாக கதை அமைந்து விடுவது பொருத்தமாகுமா?.

''பாண் வெறும் எட்டு ரூபாய்தான். திரும்பிப் பயணம் போக... அப்பப்பா காசு எண்டா எப்பிடிக் கரையுது. றூம் வாடகை, ரியூட் பேப்பர், சாப்பாடு, சவுக்காரம், எண்ணெய் ''

இப்படி இல்லாமையின், போதாமையின் அவலங்களை சிறப்பாக வெளிப்படுத்தும் இக் கதையில் ஊழியர்களின் கோரிக்கையின் இருந்த நியாயம் உணரப்படாதது ஏன்? ஒரு படைப்பாக்கத்தின் போது எமது எழுத்தாளர்கள் ஒருபக்க யதார்த்தத்தை மட்டும் கருத்திற் கொண்டால் போதுமா?....

க. முருகதாசன் சாவகச்சேரி.

'சின்ன மகன்' கவிதை மொழிபெயர்ப்பாயினும் சிறப்பானது. பெண் போராளிகள் பற்றிய கவிதை எம்மையும் திரும்பிப் பார்க்க வைக்கிறது. 'நம்பிக்கை' நம்பிக்கையூட்டுகிறது. கட்டுரைகள் யாவும் பயனுள்ளவை. காலம் தவறாது 'தாயகம்' தொடர்ந்து வர வேண்டும்.

க. இதயன். திருநெல்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு திசை திருப்புதல்களின் இணைவு — இனப்பிரச்சனை

வெளியான்

இலங்கையில் தேசிய இனப் பிரச்சினை பற்றி பல கோணங்களிலிருந்து பலர் எழுதியுள்ளனர். பெரும்பாலான கட்டுரைகள் அரைத்த மாவையே திரும்பத் திரும்ப அரைப்பதனால், வாசகர்களுக்கு சலிப்பு தட்டியிருப்பதில் வியப்பில்லை.

எனவே இப்பிரச்சினையை வேறு கோணத்தில் அணுக நான் இங்கு முயல்வேன். தேசிய இனம் என்ற பதத்தை வரையறுக்க முற்படுபவர்கள் காற்சட்டை தைப்பதற்கு தையல்காரன் அளவு எடுப்பதுபோன்று, உடனே ஸ்ராலினின் அளவுகோல்கள் என்ற நாடாவை கையில் எடுப்பார்கள். ஒரு கால கட்டத்தில், இலங்கை வாழ் தமிழர் தேசிய இனமா இல்லையா என்பதை ஐயந்திரிபற எண்பிப்பதற்கு அத்தகைய முயற்சி தேவைப்பட்டிருக்கலாம், நியாயப்படுத்தக் கூடிய ஒன்றாகவும் இருந்திருக்கலாம். ஆனால் இன்றோ, இரத்தம் ஆறாய் ஓடியபின்னர், அத்தகைய முயற்சி புத்திஜீவிகளின் 'மூட்டையில் மயிர் பிடுங்கும்' பொழுது போக்காகத்தான் இருக்கும்.

இலங்கையிலே தேசிய இனப்பிரச்சினை எவ்வாறு தோன்றிற்று என்பதைப் பற்றி பல்வேறு கருத்துக்களை பலர் வெளியிட்டுள்ளனர். பண்டைய வரலாற்றில் இப்பிரச்சினையின் வேர்கள் ஆழமாய் ஓடியிருக்கின்றன என்று சிங்களப் பேரினவாதிகள் வற்புறுத்தி வருகின்றனர். இதற்கு ஆதாரமாக மகாவம்சத்தையும், எல்லாளன் துட்டகெமுனு போரையும் அவர்கள் முன்வைக்கின்றனர். இந்த 'மகாவம்ச பொறி'க்குள் சிங்கள பேரினவாதிகளின் 'கண்ணாடி விம்பங்களாக' சில தமிழ் அறிஞர்களும் வீழ்ந்து விட்டனர். இரு சாராரின் நோக்கிலும் வரலாற்றுக் காலந்தொட்டு சிங்களவர்களும் தமிழர்களும் பகைவர்களாகவே இருந்து வந்துள்ளனர்.

அரசர்களுக்கிடையே நிகழும் சிம்மாசனப் போர்களை இரு இனங்களுக்கிடையேயான போர்கள் எனக் கருதும் தவறு ஒருபுறமிருக்க, வரலாற்றியலைப் பற்றிய சில அடிப்படைகளையும் இந்நிலைப்பாடு மறுக்கின்றது.

வரலாற்றாசிரியன் முற்றும் துறந்த முனிவன் அல்ல. தான் வாழும் காலத்தின் நிகழ்வுகளால், கருத்து நிலையால், அறிந்தோ அறியாமலோ அவன் பாதிக்கப் படுகின்றான். மகாவம்சத்தை இயற்றிய மகாநாமரும் இந்நியதிக்கு விதிவிலக்கல்ல.

மகாவம்சத்திற்கு முன் இயற்றப் பட்ட தீபவம்சத்தில் எல்லாளன் துட்டகெமுனு சமர் ஒரு சில வரிகளில் மட்டுமே காணக்கப் படுகின்றது. தீபவம்சத்திற்கு பின் இயற்றப் பட்ட மகாவம்சத்திலே தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துட்டகெமுனு காவிய வீரனாகக் காட்சியளிக்கின்றான். துட்டகெமுனுவின் பாத்திரம் இவ்வாறு உப்பிப் பெருத்ததற்கு காரணம் என்ன?

இங்கு தான் மகாவம்சம் இயற்றப்பட்ட காலத்தின் தாக்கத்தை நாம் மனதில் கொள்ள வேண்டும். அப்பொழுது இந்தியாவில் பௌத்த மதம் வீழ்ச்சியுறத் தொடங்கியிருந்ததோடு, இந்து மதத்தின் கையும் ஓங்கத் தொடங்கியிருந்தது. இந்நிலையில் பௌத்தத்திற்கு "முண்டு" கொடுப்பதற்கு அரசர்களின் ஆதரவும் பாதுகாப்பும் தேவைப்பட்டது. இச்சூழ் நிலையில்தான் சிங்கள இனத்திற்கும், பௌத்த மதத்திற்கும், இலங்கைத் தீவிற்கும் அவிழ்க்கப்பட முடியாத முடிச்சு போடப்பட்டது. இது தொடர்பாக, மூத்த பௌத்தரும், பாளி அறிஞருமாகிய கலாநிதி இ. டப்ளியு. அதிகாரம் 1983 ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் இனப் படுகொலைக்குப் பின் கூறியதை நினைவுகூர்தல் நன்று. எதிர்காலத்திலே இத்தகைய படுகொலைகளை எவ்வாறு தடுக்கலாம் என ஓர் பத்திரிகையாளர் வினவிய போது அவர் கூறிய பதில்: "மகாவம்சத்தின் சகல பிரதிகளையும் தீயிலிடுவதே அதற்கு ஒரே வழி!"

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பண்டைய வரலாற்றிலிருந்தல்ல, 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் — சுருங்கக் கூறின், ஆங்கிலேயரின் ஆட்சிக்காலம் — வரலாற்று நிகழ்வுகளிலிருந்தே ஊற்றெடுத்தது. பிரச்சினை தோன்றி முற்றிய பின் இரு சாராரும் பண்டைய வரலாற்றின் உதவியை நாடி தத்தமது வசதிக்கேற்ப அதனை திரிக்கின்றனர். இலங்கையில் மட்டுமல்ல, எங்குமே இவ்வாறு தான் நிகழ்கின்றது. இக்காலப் பிரச்சினையை நேர்கொள்ள திராணியற்ற தலைவர்கள் தீக்கோழிகளைப் போன்று திரிக்கப்பட்ட வரலாறு என்னும் மண்ணில் தலையைப் புதைக்கின்றனர்.

சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையே இன்று போர் நடைபெறுகின்றது எனப் போர்ப்பிரகடனம் செய்யும் சிங்களவர் ஓர் அடிப்படை வரலாற்றுண்மையை மறந்து விடுகின்றனர் அல்லது மறைத்துவிடுகின்றனர்; தென்னிந்தியாவிலிருந்து இங்கு வரவழைக்கப்பட்ட சில சாதிகளே இன்று தம்மை அசல் சிங்களவர் என மார்தட்டிக்கொள்கின்றனர்; மொழிப்பிரச்சினை கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த காலகட்டத்தில், அப்பொழுது சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராகவிருந்த லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா, இன்று சிங்களம் பேசுபவர்களாக மாறிய 'சலாகம' எனப்படும் சாதி (கறுவாப்பட்டை உரிப்பவர்கள்) தமிழ்நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டவர்கள் எனச் சுட்டிக்காட்டினார். அப்பொழுது அவர் வரலாற்றாசிரியராகப் பேசினார் ('பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இலங்கை' என்ற பல் பயனான நூலை இயற்றியவர் இவரே) இவர் பின்னர் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் முக்கிய அமைச்சராகவிருந்து, 1972ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்பின் பிதாமகனாகத் திகழ்ந்தார். அந்த யாப்பே இனப்பிரச்சினையை மோசமடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யச் செய்து இன்றைய சீரழிவுக்கு வழிவகுத்தது என்பது துன்பம் நிறைந்த முரணாகும்.

கூட்டு இன, மத அடையாளங்கள், ஒப்பீட்டளவில் ஓரளவு நிலையானவையாய் இருந்த போதிலும், தனிப்பட்டவர்களின் இன மத அடையாளங்கள் வரலாற்றின் ஓட்டத்தால் பாதிக்கப்படாத, மாறாத நித்தியமானவை அல்ல. இதற்கு ஜே. ஆர். எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா போன்றவர்களே நல்ல சான்றுகள், இவ்விருவரினதும் மூதாதையர் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிய தமிழர்கள் என்பதை காலஞ்சென்ற ஜேம்ஸ் ரட்ணம் ஆதாரபூர்வமாக நிறுவியுள்ளார். ஜே. ஆரும் சரி, பண்டாரநாயக்காவும் சரி, அரசியல் இலாபத்திற்காக கிறிஸ்துவத்திலிருந்து பௌத்த மதத்திற்கு மாறியவர்களே! இவர்களுக்கு அக்காலத்தில் சூட்டப்பட்ட பெயர் 'டொனமூர் பௌத்தர்கள்' டொனமூர் அரசியல் திட்டத்தின்படி சர்வசனவாக்குரிமை வழங்கப்பட்டிருந்ததால், சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையினராய் வாழ்ந்த பகுதிகளிலே வேட்பாளர்களாக போட்டியிட முன்வந்தவர்கள், தமது வெற்றியை நிச்சயப்படுத்துவதற்கு தம்மை சிங்களவர்களாகவும், பௌத்தர்களாகவும் பிரகடனம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தமிருந்தது. அவர்களது நிலை எமமவர் மத்தியில் வாழ்ந்த 'பஞ்சாட்சர கிறிஸ்தவர்களைப்' போன்ற ஒன்று. (இந்த அடைமொழியைச் சூட்டியவர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை)

இவ்வாறு நோக்கும்போது 1956 ஆம் ஆண்டிலிருந்து ஜே. ஆரின் ஆட்சி முடியும்வரை, இலங்கையை ஆண்டது (சிறிமா அம்மையாரினதும், டட்லியினதும் ஆட்சிக் காலம் நீங்கலாக) தம்மை சிங்களவர்கள் என்றும், பௌத்தர்கள் என்றும் பிரகடனம் செய்து கொண்ட தமிழ் கிறிஸ்தவர்களே!

1956ம் ஆண்டிலே, சிங்கள மக்களின் கீழ்த்தட்டுவர்க்கத்தினரிடையே (குறிப்பாக, கிராமங்களில் வாழ்ந்த சிங்களம் மட்டும் தெரிந்த ஆசிரியர்கள், ஆயுள்வேத வைத்தியர் போன்றோர்) ஆங்கிலம் கற்று தங்கள் மேல் சவாரிவிட்டுவந்த நகர்வாழ் மேல் தட்டு வர்க்கத்தினருக்கு எதிராக கிளர்ந்தெழத்தலைப்பட்டனர். மக்களின் நாடியைக் கைபிடித்துப் பார்ப்பதில் வல்லவரான பண்டாரநாயக்கா இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி தான் விட்டு விலகிய ஐக்கிய தேசியக்கட்சியைத் தோற்கடிப்பதற்கும் (அதன் மூலம், தன்னை பிரதமராக ஆக்காது தனது மகன் டட்லியை பிரதமராக ஆக்கிய டி. எஸ். சேனநாயக்காவினது ஐ. தே. கட்சியை பழிவாங்குவதற்கும்) தான் சார்ந்திருந்த வர்க்கமாகிய ஆங்கிலம் கற்ற சிங்கள மேல்நாட்டினருக்கு ஏற்படவிருந்த பெரும் ஆபத்தை தவிர்ப்பதற்கும், தனிச் சிங்களம்— அதுவும் 24 மணிநேரத்திற்குள் — என்ற உணர்ச்சியை தட்டி எழுப்பவல்ல கோஷத்தை முன்வைத்து 56ம் ஆண்டுத் தேர்தலில் பெரும் வெற்றி ஈட்டியதுடன், கீழ்மட்ட சிங்களவரிடையே கொந்தளித்தெழுந்த வர்க்க உணர்வை தமிழருக்கு எதிரான இன உணர்வாக மிகக் கெட்டித்தனமாகத் திசை திருப்பினார்.

சிங்களவர் மத்தியில், ஆங்கிலம் கற்றவர்களுக்கும் ஆங்கிலம் கல்லாதவர்களுக்குமிடையே காணப்பட்ட பாரிய பிளவைப்போல் தமிழர்களிடையே சமூகப்பிளவு இருக்கவில்லை, சிங்களவர்களைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்தவரை, ஆங்கிலம் கற்றவர்கள் ஓர் உலகையும், ஆங்கிலம் கற்காதவர்கள் வேறு ஓர் உலகையும் சார்ந்தவர்கள். தமிழரைப் பொறுத்தவரை, ஆங்கிலம் கற்று உத்தியோகம் பார்த்தவர்களுடைய சமூக அந்தஸ்து ஏனையோரைவிட, உயர்ந்ததாய் இருந்தது உண்மைதான். ஆனாலும் சிங்களவரிடையே காணப்பட்டது போன்று அது பெரும் வர்க்க முரண்பாடுக் கூர்மையடையவில்லை. இதற்கு ஒரு காரணம், ஆங்கிலம் கற்ற தமிழர் ஆங்கிலம் கற்ற சிங்களவர் போலல்லாது தமது தாய்மொழியையோ, தமிழ் பண்பாட்டையோ முற்றாக மறக்கவோ, நிராகரிக்கவோ இல்லை. விரல்விட்டு எண்ணக் கூடிய 'கறுவாக்காட்டுத்' தமிழரைத் தவிர (இதற்கு ஓர் நல்ல எடுத்துக்காட்டு ஜி.ஜி பொன்னம்பலம் நீதிமன்றத்தில் தோன்றும் போது அதற்குரிய ஆடைகளை அணிந்து அசல் மேற்கத்தையர் போன்று காட்சியளிப்பார். அதேவேளை மேடைகளிலோ, கோவில்களிலோ, சந்தனப்பொட்டோடும், வேட்டி சால்வையோடும் அசல் தமிழராய் தரிசனம் தருவார்) நேர்மாறாக, ஆங்கிலம் கற்ற கணிசமான சிங்களவர் தமது தாய்மொழியை சரிவரப்பேசுவதற்குக்கூட முடியாதவராகவோ, பேசவிரும்பாதவராகவோ, இருந்தனர். (சிங்களம் ஒரு 'குசினி' மொழியாக ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டிருந்தது.) தமது பண்பாட்டை மறந்து, மேற்கத்திய உணவு, உடை பாவனைகளில் மூழ்கியிருந்தனர்.

சிங்களவரிடையே இருப்பதை விட தமிழரிடையே காணப்படும் சாதிமுறை இறுக்கமானது. தமிழரிடையே காணப்படும் 'தீண்டாமை' அதே வடிவிலேயோ மூர்க்கத்தனத்துடனோ, சிங்களவரிடையே பெரும்பாலும் காணப்படுவதில்லை என்றே சொல்லலாம்.

சுதந்திரம் பெற்ற கையோடு, அரசியல் அதிகாரப்பகிர்வில் தமிழ் மேற்குழாத்தோருக்கும் சிங்கள மேற்குழாத்தோருக்கும் இடையே பிணக்கு ஏற்படத் தொடங்கியதும், தமிழருக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகிறது. இதற்கு குறுக்கே நின்றது சாதி அமைப்பை அடிப்படையாகக் கொண்ட தீண்டாமையே. எனவே தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களுக்கு விரும்பியோ விரும்பாமலோ, தமிழ் மேற்குழாத்தின் ஒரு பகுதியினர் ஆதரவு கொடுக்க வேண்டி நேர்ந்தது. இவ்வாறுதான் 'தற்காப்பு தேசியவாதத்தை' உயர் குழாத்தைச் சேர்ந்த தமிழர் உருவாக்கி தமிழர் என்ற இன அடையாளத்தை ஓர் கோஷமாக முன்வைத்து, தமிழருடைய சமூக அமைப்பின் இன்றியமையாத அதனுடன் பின்னிப்பிணைந்த சாதி முறைக்கு எதிரான ஓர் உட்போராட்டத்தை, சமூகப்போராட்டத்தை, சிங்களவருக்கு எதிரான இனப்போராட்டமாக திசை திருப்புவதில் தமிழ் மேற்சாதியினர் வெற்றி கண்டனர்.

இந்த இரண்டு திசைதிருப்புதல்களின் இணைவுதான் வேறு சில காரணிகளுடன் கலந்து, இன்று எமது நாட்டிலே இனப்பிரச்சனையாக பூதாகரமாக உருவெடுத்திருக்கின்றது. இத்திசைதிருப்புதல்கள் தனிப்பட்டவர்களின் சதித்திட்டம் அல்ல. இத் தனிப்பட்டவர்கள் சமூக சக்திகளின் பிரதிநிதிகளே என்பதை மனதில் நாம் கொள்ள வேண்டும். ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்யாணி கிறீம் கவுஸ்

**73, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.**

ஐஸ்கிறீம் வகைகள்,
ஐஸ் ஜொலி, சொக்லட் கிறீம்ஸ்
குளிர்பான, சிற்றூண்டி வகைகள்
மற்றும் பிறந்ததின வைபவம் திருமணம் களியாட்ட
வைபவங்களுக்கான
கேக் வகைகளை
குறித்த நேரத்தில் ஓடர் செய்து பெற்றுக்கொள்ள
யாழ்நகரில் சிறந்த இடம்
சுவைத்து மகிழுங்கள் கல்யாணி ஸ்பெஷல் ஐஸ்கிறீம்

# நியூ பிரியங்கா

## நகை மாளிகை

**177 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன்
செய்துகொடுக்கப்படும்

# புதிய ராதிகா

## நகை மாளிகை

தங்கப்பவுண் நகை வியாபாரம்
189, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது.
Registered as a News paper in Sri Lanka.

விரியும் அறிவு நிலை காட்டுவீர் — அங்கு
வீழும் சிறுமைகளை ஓட்டுவீர்

— பாரதி

இலங்கை இந்திய
இலக்கிய வெளியீடுகளுக்கும்
அறிவியல் நூல்களுக்கும்

VASANTHAM (PVT) LIMITED
வசந்தம் புத்தக நிலையம்

S. 44. மூன்றாவது மாடி,
மத்திய சந்தைக் கட்டிடம்,
கொழும்பு 11.

இச்சஞ்சிகை தேசிய கலை இலக்கியப் பேரவைக்காக யாழ்ப்பாணம் 405, ஸ்ரான்லி வீதி, வசந்தத்திலுள்ள க. தணிகாசலம் அவர்களால் யாழ்ப்பாணம் 407, ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org